# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

ஜூலை - ஆகஸ்ட் 2010

ரூ.20/-






தமிழ்நாடு அரசு
செயலகம்

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2041

ஆனி - ஆடி - ஆவணி

ஜூலை - ஆகஸ்ட் 2010

மலர் : 42 இதழ் : 1 & 2

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை ராஜ்குமார்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்) (பொ)

முதன்மைப் பொறுப்பாசிரியர்

**க. குமாரவேலு**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**ச. ஜெயலலிதா**
**இரா. சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**த. கலைச்செல்வன்**
**வ. பாலசுப்பிரமணியன்**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்.** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110, அண்ணாசாலை,
சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/
28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**தாமின் புறுவ துலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள்.

கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...

### உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில்...


❖ மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி. **பிரதிபா தேவிசிங் பாட்டீல்** அவர்கள் ஆற்றிய உரை .......... 2

❖ மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்கள் ஆற்றிய உரை .......... 5

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய தலைமையுரை .......... 7

❖ ஆய்வரங்க மாநாட்டு சிறப்பு மலரை வெளியிட்டு மாண்புமிகு நிதியமைச்சர் **பேராசிரியர் க. அன்பழகன்** அவர்கள் ஆற்றிய உரை .......... 29

❖ ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' சிறப்புக் கருத்தரங்கிற்கு தலைமை வகித்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை .......... 33

❖ நிறைவு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய நிறைவுரை .......... 39

❖ மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. **பிரணாப் முகர்ஜி** அவர்கள் ஆற்றிய உரை .......... 46


### மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள்


❖ சுதந்திரத் திருநாள் உரை .......... 51

❖ மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு .......... 55

❖ கோயம்புத்தூர் டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா திறப்பு விழா .......... 65

❖ சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் திறப்பு விழா .......... 68

❖ திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர், காட்டுப்பள்ளியில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் திறப்பு விழா .......... 73


**அட்டைப்பட விளக்கம்**

முதலாம் அட்டை : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தொடக்க விழா (23.06.2010)

இரண்டாம் அட்டை : சுதந்திரத் திருநாள் விழா (15.08.2010)

# தமிழ்மொழி தனது உயிர்த் துடிப்பான தன்மையாலும் வளத்தாலும் இந்தியாவைப் பெருமைமிகு சமூகமாக ஆக்கியுள்ளது!

**கோவையில் 23.6.2010 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைத் தொடங்கிவைத்து மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி.பிரதிபா தேவிசிங் பாட்டீல் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.**

உலகெங்கிலும் இருந்தும், நமது நாட்டிலிருந்தும் பெருமளவில் அறிஞர்களும், கவிஞர்களும், கல்வியாளர்களும் பங்கேற்கும் முதலாவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைத் துவக்கி வைப்பதில் மகிழ்ச்சி யடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். 2004ஆம் ஆண்டில் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து அளிக்கப்பட்டது. இது இம்மொழியின் பழமைக்கும், வளத்திற்கும் கிடைத்த அங்கீகாரம் மட்டுமல்ல, உத்வேகமூட்டும் விஷயங்களை உள்ளடக்கிய சிறந்த கலாச்சாரத்தை முன்னெடுத்துச் செல்வதில் இம்மொழியின் பங்குக்குக் கிடைத்த அங்கீகாரமும்கூட.

தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து அறிவிக்கப்பட்டதிலும், இம்மாநாட்டை ஏற்பாடு செய்வதிலும், வழிகாட்டி நடத்திச் செல்லும் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதிக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கவிஞர், பன்முகத்திறன் படைத்த எழுத்தாளர் மற்றும் ஆட்சி வல்லுநராகத் திகழும் முதல்வர், இம்மாநாட்டின் மைய நோக்குப்பாடலைத் தாமே எழுதியுள்ளார். முதல்வராக 19 வருடங்களும், தமிழகப் பேரவையின் உறுப்பினராக சுமார் 50 வருடங்களும் பணியாற்றி வரும் அயராத வாழ்வில் இலக்கியத்திலும் உன்னத இடத்தைப் பிடித்திருக்கும் அவரைப் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டுக்கு, எனது இதயத்தில் சிறப்பான இடமுண்டு. குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான பிரச்சாரத்தை சென்னையில் தான் துவக்கினேன். தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு, டெல்லிக்கு வெளியே முதன்முதலாக தமிழ்நாட்டுக்குத்தான் சுற்றுப்பயணம் வந்தேன். இங்குள்ள இளைஞர் வளர்ச்சிக்கான ராஜீவ்காந்தி தேசிய நிறுவனத்தில் உரையாற்றினேன். ஆகையால், இந்த மாநிலத்துடனும், இங்குள்ள மக்களுடனும் தொடர்ந்து வரும் உறவின் ஒரு பகுதியாக இந்த மாநாட்டுக்கு வந்துள்ளேன்.




தமிழ் மக்கள், நமது நாட்டின் பன்முகக் கலாச்சாரத்தையும், உலகின் கலாச்சார வளத்தையும் பெருமளவு மேம்படுத்தியுள்ளனர். பன்மைத் தன்மை, சகிப்புத்தன்மை, மனிதநேய அணுகுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ள தமிழ்ப் பண்புநலன்கள், பண்டைய காலம் முதல் தற்காலம் வரை நமது நாட்டின் முன்னேற்றத்தில் பல்வேறு வகையில் பங்காற்றியுள்ளன.



கலை, இசை, கட்டடத்திறன், இலக்கியம் ஆகியவற்றில் இந்தியாவைத் தனித்த அடையாளம் கொண்ட தேசமாக வடிவமைத்துள்ளதில் இவற்றுக்குப் பங்குண்டு. தமிழ்மொழி தனது உயிர்த் துடிப்பான தன்மையாலும், வளத்தாலும் பெருமைமிகு பன்மொழிச் சமூகமாக ஆக்கியுள்ளது.

தமது அறிவுத்திறன், கல்வியறிவு, பயிலும் திறன் ஆகியவற்றுக்காக மதிக்கப்படும் தமிழர்கள் துடிப்பாகவும், முன்னேற்றச் சிந்தனையுடனும் உள்ளனர். சில்க் ரூட் எனப்படும் பட்டு வழி கண்டறியப்படுவதற்கு பல காலம் முன்பே, தமிழ் வணிகர்கள் இந்தியக் கடலோரத்திலிருந்து பாரசீக வளைகுடாவுக்கு பயணம் செய்துள்ளனர். கிறிஸ்து பிறப்பதற்கு முந்தைய ஒன்றாம் நூற்றாண்டில் வணிக காற்றாலைகளைக் கண்டறிந்து பயன்படுத்தியவர்கள் தமிழர்கள்தான், 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற தமிழ் கூற்றுக்கு ஏற்ப பொக்கிஷங்களைத் தேடிப் பெருங்கடல்களைக் கடந்தனர். வெற்றி [illegible] வேண்டும் என்ற தமிழர்களின் உணர்வுக்கு இது சான்று. இந்த உணர்வுடன், படைப்பாற்றலும் இணைந்து தமிழர்களை வெற்றிப்பாதைக்குக் கொண்டு சென்றன. இது எங்கிருந்தாலும், எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அவர்களுக்கு தொடர்ந்து வெற்றிகளைக் கொண்டு வரும் என்று நான் நம்புகிறேன்.

தமிழர்களின் வரலாறு நமது தேசத்தின் பெருமை. இந்தியச் சமூகத்தின் ஊடாக உள்ள பல படிவங்களும், அரசியலுக்கு அடிப்படையாக உள்ள கருத்துகளும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் காணப்பட்டன.

**சமத்துவமான ஓர் உலகம்**

எடுத்துக்காட்டாக, பிறரது சமயத்தை மதிக்க வேண்டும் என்ற குணநலம் நீண்ட காலமாகத் தமிழ்க் கலாச்சார பாரம்பரியத்தின் அங்கமாக உள்ளது. சைவ, வைணவ தத்துவங்களின் ஆதாரமாகத் தமிழகம் உள்ளது. சமணம், பௌத்தம், இசுலாம், கிறித்தவம் ஆகிய சமயங்கள் தொடர்பான கணிசமான படைப்புகள் இங்குள்ளன. சமுதாயத்தில் பல்வேறு சமய நம்பிக்கைகள் நிலவுவதற்கும், ஒன்றுக்கொன்று இணைந்து வளப்படுத்திக் கொள்வதற்கும் இது அருமையான சான்றாகும். அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும், பாரபட்சம் காட்டாத, சமத்துவமான ஓர் உலகம் தேவைப்படுகிறது.

சமூக, பொருளாதார, அரசியல் நீதியும், அனைவருக்கும் சம அந்தஸ்தும், வாய்ப்புகளும் அளிப்பதே நமது அரசியலமைப்பின் முதன்மைக் கூறாகும். வாக்குரிமையும், நமது ஜனநாயகக் கட்டமைப்பும் நாட்டின் ஒவ்வொரு வயது வந்த குடிமகனுக்கும் அரசியலில் தமது கருத்தைத் தெரிவிப்பதற்கான உரிமையைத் தந்துள்ளன. அடிப்படை உரிமைகள் சமத்துவத்தை உறுதி செய்வதுடன், இனம், சாதி, சமய அடிப்படையிலான பாரபட்சத்தைத் தடுக்கின்றன. சமூக சீர்திருத்தத்திலும், சமுதாயப் பாகுபாடுக்கு எதிராகப் போராடுவதிலும், அனைத்துத் தரப்பு மக்களும் சம மரியாதையுடன் நடத்தப்பட உழைப்பதிலும் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது.

பொருளாதார ரீதியாக நமது நாடு முன்னேறி வருகையில், ஊரகப் பகுதிகள், ஏழை எளியோர், நலிந்தோர் என அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பலன்கள் சென்றடையக் கூடிய உள்ளடக்கிய வளர்ச்சியை நாம் கடைப்பிடிக்க வேண்டும். பஞ்சாயத்துராஜ் அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களை அளித்துப் பங்கேற்பினை அதிகரிப்பதற்கான வளர்ச்சி நடவடிக்கைகளை

கூட்டியுள்ளோம். தமிழ்நாட்டில் கிராமப் பஞ்சாயத்துகள் பொருளாதார மற்றும் நிருவாக ரீதியில் சுயசார்புடன் விளங்குவதற்கான ஆதாரங்கள் உள்ளன. இந்த கிராமப் பஞ்சாயத்துகள், உள்ளூர்த் தேவைகளுக்காக வரி வசூலிக்கும் அதிகாரத்துடன் தன்னாட்சி பெற்று விளங்குகின்றன. இவை சமூக வாழ்க்கை, கலாச்சாரத்தின் மையங்களாக உள்ளன. இந்த கிராமப்புர வளர்ச்சி மாதிரிதான் நமது கிராமங்களுக்கு முன்னேற்றத்தையும், வளத்தையும் அளிக்கும்.

**பரந்துபட்ட இலக்கிய வளம்**

சேர, சோழ, பாண்டியப் பேரரசுகள் மக்கள் நலனுக்காகவும், கலை, கலாச்சார வளர்ச்சிக்காகவும் துடிப்பாகச் செயல்பட்டன. அவர்களது ஆட்சியில் தமிழ்க் கலாச்சாரம் கிழக்கிற்கும், மேற்கிற்கும் பரவியது.

பல்லவர்களின் கோவில் கட்டடக் கலையும், சோழர்களின் வெண்கலச் சிற்பங்களும் சிறப்பானவை. பரதநாட்டியமும், கருநாடக இசையும் இங்குதான் பிறந்தன. எல்லாவற்றையும்விட பரந்துபட்ட இலக்கிய வளம்தான் தமிழ் மொழியின் மிகச்சிறந்த பங்களிப்பு.

உலகின் மிகப்பழமையான, வாழும் மொழிகளில் தமிழும் ஒன்று. இது மிகச்சிறப்பான இலக்கிய, இலக்கண வளங்களைக் கொண்டது. மிகப்பழமையான நூலான தொல்காப்பியம் கி.மு.200ஆம் ஆண்டைச் சேர்ந்தது. பழந்தமிழ் படைப்புகளில் சில சங்க காலத்தவை, சங்ககாலப் புலவர்கள், மண்பாண்டம் செய்வோர் விவசாயிகள் முதல் உயர்நிலையில் இருப்பவர் வரை பல தரப்பினர். பெண் புலவர்களும் இருந்தனர். இது தமிழ்ச் சமூகத்தின் சமத்துவத்தைக் காட்டுகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சங்கப்புலவர் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று மொத்த மனிதகுலத்தையும் அமைதியாலும், நல்லிணக்கத்தாலும் இணைத்துள்ளார்.

**அறிவுப் பெட்டகம் திருக்குறள்**

திருவள்ளுவரின் திருக்குறள் பண்புகளின் பெட்டகமாக விளங்குகிறது. தேசப்பிதா மகாத்மா காந்தி, வள்ளுவரின் திருக்குறளை அவரின் சொந்த மொழியில் படிப்பதற்காகவே தமிழ் கற்க விரும்புகிறேன். அது ஒரு அறிவுப் பெட்டகம் என்று கூறியது குறிப்பிடத்தக்கது. நமது நாட்டிலும், தென்னாப்பிரிக்காவிலும் காந்தியடிகளின் அகிம்சை போராட்டத்தில் தமிழ்ச் சமூகம் கணிசமாக பங்கேற்றதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் உன்னத தமிழ் இலக்கியப் படைப்புகள். சீவக சிந்தாமணியும், கம்ப ராமாயணமும் அருங்காப்பியங்கள். நாயன்மார்கள், ஆழ்வார்களின் பாடல்கள் நெஞ்சை நெகிழ வைப்பவை. தமிழ் இலக்கியகர்த்தாக்கள் நமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தில் அரும்பங்காற்றியுள்ளனர். சுதந்திரப் போராட்ட காலத்தில், சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளும், பாடல்களும் இந்திய மக்களின் உள்ளங்களில் நாட்டுப்பற்று உணர்வுகளை ஊற்றெடுக்கச் செய்தன.

அடுத்த தலைமுறை தமிழர்கள், தமிழ்க் கலாச்சாரம், இலக்கியம், விழுமியங்கள் குறித்த அறிவினை வளர்த்துக் கொள்ள வேண்டும். இத்தருணத்தில் 1949இல் பண்டித ஜவஹர்லால் நேரு தெரிவித்த கூற்றை நினைவு கூர்கிறேன். ஒரு மொழி இரண்டு விதமான பணிகளைச் செய்ய வேண்டும். அது பாரம்பரிய வேர்களில் காலூன்றி, அதேநேரத்தில், வளரும் தேவைகளுக்கு ஏற்ப தன்னை விரிவுபடுத்திக் கொண்டு பரந்துபட்ட மக்களின் மொழியாகவும் திகழ வேண்டும். குறிப்பிட்ட சிலரின் மொழியாக மட்டுமே இருந்துவிடக்கூடாது.

வாழும் மொழியான தமிழ், மாறி வரும் உலகின் தேவைகளுக்கு ஏற்பத் தன்னை உருவேற்றிக் கொள்ளும் என்று நம்புகிறேன். இந்த முயற்சியில் சென்னையில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழி தமிழுக்கான மைய நிறுவனம் முக்கியமான ஒன்று.

இன்று நடைபெறவிருக்கும், தமிழகத்தின் அடர்த்தியான கலாச்சார செறிவினை எடுத்துக்காட்டும் பிரம்மாண்டமான பேரணியைக் காண ஆவலாக உள்ளேன். 'கலைஞர் கருணாநிதி தமிழ்ச் செம்மொழி முதல் விருதி'னை பெற்றுள்ள டாக்டர் அஸ்கோ பர்போலாவுக்கு எனது வாழ்த்துகள். அறிஞர்கள் குவிந்துள்ள இந்த முதல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுச் சூழலில், கிளர்ச்சியான உணர்வும், அதிக எதிர்பார்ப்புகளும், நம்பிக்கையும் ததும்புகிறது. இந்த அறிஞர்கள், தமது கருத்துகளைப் பரிமாறிக்கொண்டு, இந்த மாநாட்டை சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடத்தி முடிப்பார்கள் என்று நம்புகிறேன். இதனைக் காணும்போது, கல்வியாளர்கள் மிகுந்த மனமகிழ்வுடன் ஒருவரையொருவர் சந்தித்து உரையாடுவது தொடர்பான வள்ளுவரின் சொற்கள்தான் நினைவுக்கு வருகின்றன.

சிறப்பான எதிர்காலத்திற்கான தமது பணிகளில் வெற்றியடைய வேண்டும் என்று இந்த மாநிலத்தையும், மக்களையும் வாழ்த்துகிறேன். இந்த மாநாடு வெற்றி பெறுவதற்கு எனது நல்வாழ்த்துகள். பிரம்மாண்டமான மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ள முதல்வருக்கு எனது வாழ்த்துகள்.

❖ ❖ ❖

# தனித்தன்மையும் இலக்கிய வளமும் நிறைந்த தமிழ்மொழி எல்லாக் காலத்திலும் நிலைத்து நிற்கும்!

**கோவையில் 23.6.2010 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் மாநாட்டுச் சிறப்பு மலரை வெளியிட்டு மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.**

இந்த மாபெரும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் பங்கேற்பதிலும், சிறப்பு மலரை வெளியிடுவதிலும், அறிஞர்கள் சூழ்ந்துள்ள இந்த அரங்கில் பேசுவதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மாநாட்டை இந்தியாவின் முதல் குடிமகள் குடியரசுத் தலைவர் திருமதி. பிரதிபா பாட்டீல் அவர்கள் தொடங்கி வைப்பதிலும், அதற்கு செழுமையான எழுத்தாளரும், சிறந்த கவிஞரும், பாடலாசிரியரும் பேச்சாளருமான கலைஞர் அவர்கள் தலைமை வகிப்பதும் மிகவும் பொருத்தமாகும்.



கலைஞர்தான் தமிழ் – தமிழ்தான் கலைஞர். கலைஞரையும் தமிழையும் பிரிக்க முடியாது. இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்த அவர் மேற்கொண்ட நடவடிக்கை அனைத்துக்காகவும் சீரிய முயற்சிகளுக்காகவும் அவரை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

தமிழ் ஒரு அழகான மொழி. சிறந்த ஆசிரியரான நன்னன் அவர்கள் மூலம் நான் தமிழை எழுதக் கற்றுக்கொண்டேன். மொழி என்பது உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடியது. சிந்திப்பதற்கான ஒன்று. மொழியானது உணர்வுகளை, எண்ணங்களை, அறிவாற்றலை – மதிப்பை வெளிப்படுத்துவது மட்டுமல்ல சமூகத் தகுதி பெறுவதற்கும் தேவையான தாகும்.

**55 நாடுகளில் தமிழ்மொழி பேசப்படுகிறது**

தரத்தாலும் அழகாலும் காலம் காலமாக இருந்து வரும் வளர்ச்சியாலும் தமிழ்மொழி ஒரு செம்மொழியாகக் கருதப்படுகிறது. இலங்கையிலும், சிங்கப்பூரிலும் ஆட்சி மொழியாக தமிழ் இருந்து

வருகிறது. அது மட்டுமின்றி உலகின் 55 நாடுகளிலும் தமிழ்மொழி பேசப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

அப்படிப்பட்ட நிலையில் தமிழ்மொழியை செம்மொழியாக ஆக்க, முதல்வர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியன.

இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற ஒரு அரிய இலச்சினை உருவாக்க உண்மையான அர்ப்பணிப்பு உணர்வோடு முயற்சிகள் மேற்கொண்ட முதல்வர் கலைஞர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

அய்யன் திருவள்ளுவரின் குறள்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடியதாக உள்ளது. அதுமட்டுமல்ல; அது எல்லா காலங்களுக்கும் ஏற்கக்கூடியதாக உள்ளது.

கிரேக்க நாட்டு தத்துவ அறிஞர்களான பிளாட்டோ, அரிஸ்டாடில் போன்றவர்கள் தீர்ப்பை – விளக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், திருவள்ளுவரோ அவர்களுக்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே, தீர்ப்பு குறித்து விளக்கமாகத் தெரிவித்துள்ளார். நல்லது எது கெட்டது எது என புரிந்து கொள்பவர்கள் நீதி குறித்து உணர்ந்து கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டபோது, மகாவீர், குருநானக், கபீர் போன்றவர்கள் தெரிவித்த கருத்துகளை ஒத்து திருவள்ளுவரின் கருத்துகளும் இருப்பதை உணர முடிந்தது.

பிறப்பொக்கும் என்ற குறளில், பிறப்பினால் அல்ல, ஒருவனது செயல்களினால் தான் ஒருவனை மனிதனாகக் கருத முடியும் என்கிறார்.

இன்னொரு குறளில், உயர்குடியில் பிறந்ததால் மட்டும் ஒருவர் பெரியவராகி விடமுடியாது; அதேபோல் தாழ்ந்த குடியில் பிறப்பதனாலேயே அவன் தாழ்ந்தவனாகி விடமுடியாது என்கிறார் அய்யன் வள்ளுவர்.

திருவள்ளுவரின் பல்வேறு கருத்துகள் குருநானக் தெரிவித்த கருத்துகளை ஒத்துள்ளன.

தமிழ் மொழிக்கும் சங்க இலக்கியத்திற்கும் திருக்குறள் மகுடமாக உள்ளது. சங்க கால இலக்கியங்கள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்றவை தமிழ் மொழிக்கு அணிகலன்களாக உள்ளன. தமிழ்மொழிச் செம்மொழி தகுதிபெற அதில் உள்ள இலக்கியங்கள் காரணங்களாக உள்ளன.

தமிழின் வளமையும், வளர்ச்சியும் அதை ஒரு மரியாதைக்குரிய மொழியாக ஆக்கியுள்ளது. உலகின் மிக முக்கிய மொழிகளின் தகுதிகள் யாவும் தமிழ் மொழிக்கு இருப்பது குறிப்பிடத்தக்கது.

எந்த ஒரு கால கட்டத்திலும் தனது தனித் தன்மையை, இழக்காமல் இருக்கும் மொழிதான் வளமான அழகான மொழி என்பார்கள். அப்படிப்பட்ட ஒரு மொழியின் வளர்ச்சிதான் எல்லாக் காலத்திலும் நிலைத்து நிற்கும்.

இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தமிழை மென்மேலும் வளர்க்கவும், உலக அளவில் தமிழ் ஆய்வு மேற்கொள்ளவும் வழி வகுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

சிந்து சமவெளி நாகரிகம் குறித்தும் அப்போது இருந்த வழக்கு மொழி தமிழுக்கு நெருங்கிய திராவிட மொழியாக இருந்தது குறித்தும் அவர் மேற்கொண்ட ஆய்விற்காக "கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது" பெறும் பின்லாந்து அறிஞர் டாக்டர் அஸ்கோ பர்போலா அவர்களை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

இந்த விருதினை ஏற்படுத்த ரூபாய் ஒரு கோடியை வழங்கிய முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சரித்திர முக்கியத்துவம் பெற்ற மாநாட்டிற்காக அரும்பாடுபட்ட, முதல்வர் கலைஞர் அவர்களையும் தமிழக அரசையும் சம்மந்தப்பட்டவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைத் தொடங்கி வைக்க வருகை தந்தமைக்காக குடியரசுத் தலைவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாபெரும் நிகழ்வில் பங்கேற்றதற்காக நானும் பெருமை அடைகிறேன். அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.

★ ★ ★

# தொன்மையிலும் தனித்தன்மையிலும் முதன்மைச் சிறப்பு வாய்ந்த தமிழ்; உலக மொழி மட்டுமல்ல - உலக மொழிகளுக்கெல்லாம் தாய் போன்றது!

**கோவையில் 23.6.2010 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுத் தொடக்க விழாவிற்குத் தலைமை வகித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை.**

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தொடங்கி வைத்து, ''கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி விருது'' வழங்கி, விழாப் பேருரையாற்ற வருகை தந்திருக்கும் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி.பிரதிபா தேவிசிங் பாட்டீல் அவர்களே!

தடைக் கற்கள் பல போடப்பட்டாலும், அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு தமிழகத்தின் மீதும் – தமிழ்நாட்டு மக்கள் மீதும் கொண்டுள்ள அன்பின் காரணமாகவும் – பற்றின் காரணமாகவும் வருகை தந்துள்ள தங்களுக்கு உலகம் முழுவதும் வாழ்கின்ற




தமிழர்களின் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் சிறப்பு மலரை வெளியிட்டு, வாழ்த்துரை வழங்க வருகை தந்திருக்கும் மேதகு தமிழ்நாடு ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களே!

தமிழக அரசின் நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர், தமிழகத்தின் துணை முதலமைச்சர் தம்பி மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே!

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் இங்கே வருகை தந்திருக்கும் தமிழ்ப் பேராசிரியர்களே, ஆய்வறிஞர்களே, கவிஞர்களே, தமிழ் ஆர்வலர்களே, தமிழ் அன்பர்களே! என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!

கோவையில் நடைபெறுகின்ற இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு, மடை திறந்த வெள்ளமெனத்

திரண்டு வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தையும், உள்ளம் நிறைந்த வரவேற்பினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி தீரத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சைத் தரணியிலே; கருக்கலிலே கண் விழிக்கும் திருக்குவளை என்னும் சிற்றூரில்; கவிபுனையும் கற்பனைத் திறனும், தமிழிசை ஆற்றலும், வேளாண்மை நாட்டமும் மிகுந்த முத்துவேலருக்கும் அஞ்சுகத்தம்மையாருக்கும் மகனாய்ப் பிறந்து;

14 வயதினிலே –

"வீரத்தமிழ் கொஞ்சும் நாட்டிலே" எனும் அணி வகுப்புப் பாடல் இயற்றி, தமிழ் வாழ்க, தமிழர் வெல்க என்று புலி, வில், கயல் பொறித்த கொடி பிடித்து, தமிழ் மாணவர் பட்டாளத்திற்குத் தலைமை தாங்கி,

ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டுடன் பேரணி நடத்தி;

அதே வயதில், "திராவிடர் விழித்துக் கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது. பெரும்பாலான திராவிடர் வீறு கொண்டெழுந்து விட்டனர். நாட்டைக் காப்பாற்றவும், கலை நாகரிகத்தைக் காக்கவும் கச்சை கட்டி விட்டனர்" என்ற முன்னுரையோடு, 'செல்வசந்திரா' என்ற நாடகத்தை எழுதி;

17 வயதில் 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' என்ற ஓர் அமைப்பினைத் தோற்றுவித்து; அதன் ஆண்டு விழாவுக்கென, "கிளம்பிற்றுக் காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்! கிழித்தெறிய தேடுதுகாண் பகைக் கூட்டத்தை!" என்ற பாடல் வரிகளைப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களிடமிருந்து வாழ்த்தாகப் பெற்று ;

'திராவிட நாடு' தொடக்க இதழ் ஒன்றில், 'இளமைப் பலி' என்ற கட்டுரை எழுதி, அறிஞர் அண்ணா அவர்களின் கவனத்தைக் கவர்ந்து;

20 வயதில் 'சேரன்' என்ற புனை பெயரோடு, 'முரசொலி' இதழைத் தொடங்கி; "கிழவன் கனவு" எனும் சீர்திருத்த சிறுகதையினை வழங்கி;

**உலக மொழிகளுக்கெல்லாம் தாய்**

பின்னர் தந்தை பெரியார் அவர்களின் அரவணைப்பிலும், அறிஞர் அண்ணா அவர்களின் அன்பிலும் நனைந்து, வளர்ந்து; தமிழையே தோன்றாத் துணையாகவும், தோளேந்திய ஆயுதமாகவும் கொண்டு – கதை, கவிதை, கட்டுரை, நாடகம், திரைப்படம், அரசியல் எனப் பல்வேறு துறைகளிலும் பணிபுரிந்து – ஆட்சியில் இருக்கும்போதும், இல்லாதபோதும்; தமிழ் அன்னைக்கு இயன்ற வழியனைத்தும், முனைந்து இடையறாது பணியாற்றி, அணி மணிகள் பலவும் தேடிக்கொணர்ந்து சூட்டிவரும் எனக்கு;

கோலமிகு கோவை மாநகரிலே உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்துவதற்கும், அதன் தொடக்க விழாவிலே தலைமையேற்பதற்கும் கிட்டிய வாய்ப்பினை பெருமையாகக் கருதுகிறேன்.

இதுவரை உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரில் எட்டு மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. முன்னர் நடந்த எட்டு மாநாடுகளுக்கும், இப்பொழுது நடைபெறுகிற இந்த மாநாட்டுக்கும் வேறுபாடு உண்டு. முன்னர் நடந்தவை "உலகத் தமிழ் மாநாடுகள்". இப்பொழுது நடைபெறுவது "உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு".

"உலகத் தமிழ்ச் செம்மொழி" என்பதில் உள்ள மூன்று சொற்களும் பொருள் பொதிந்தவை மட்டுமல்ல; பொருத்தமானவையும் ஆகும். தமிழ் உலகமொழி மட்டுமல்ல; உலக மொழிகளுக்கெல்லாம் தாய் போன்றது. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், ஞாலமுதல்மொழி தமிழே (The Primary Classical Language of the World)' என்று நிறுவிக்காட்டியிருக்கிறார்.

மூலத் தாய்மொழிச் சொற்கள் உலக மொழிகளில், சொல் வடிவில், உருத்திரிந்து, பொருள் அளவில் உருத்திரியாமல் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக உலக மொழிகளில் உள்ள அம்மா, அப்பா எனும் உறவுப் பெயர்கள்; நான், நீ, அவன் எனும் மூவிடப் பெயர்கள்; நீர், நெருப்பு, காற்று போன்ற இயற்கைப் பெயர்கள் போன்றவை தமிழோடு மிகவும் நெருக்கம் கொண்டவையாக உள்ளன. தமிழோடு தொடர்பில்லாத அடிப்படைச் சொற்கள் எவையும், உலகமொழிகளில் இல்லாததால் தமிழே உலக முதல் தாய்மொழி எனும் தகுதியைப் பெறுகிறது.

உலக மொழிகளில் மிகத் தொன்மைக் காலம் முதலே இயல், இசை, கூத்து என்னும் முத்தமிழ்; வளர்ச்சியை எய்தியதால், தமிழ் நிலையான தன்மையை அடைந்தது. இலக்கியம் தழுவிய கலை வளர்ச்சி, தமிழுக்கு நிலைத்து நிற்கும் ஆற்றலைத் தந்திருப்பதால், தமிழை உலகத் தாய்மொழி என அறியலாம்.

## இனத்தின் மொழியின் தொன்மை

கி.மு.10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசனாகிய சாலமனுக்கு தமிழகக் கப்பல்கள் மயில் தோகையையும், யானைத் தந்தத்தையும், வாசனைப் பொருள்களையும் கொண்டு சென்றன; வடமொழியில் வேதங்களில் இருபதுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் இருப்பதை ஆய்வறிஞர் கால்டுவெல் கண்டுபிடித்து அறிவித்தார். இதிலிருந்து வடமொழிக்கு முன்பே தமிழ் இருந்தது என்பதை அறியலாம்; வால்மீகி இராமாயணத்தில் தென்னகத்தை ஆண்ட மூவேந்தர்களைப் பற்றிய குறிப்பும், பாண்டியரின் தலைநகரான கபாடபுரம் பற்றிய குறிப்பும் உள்ளன. இது லெமூரியா கண்டத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கம் இருந்த கபாடபுரம் பற்றியதாகும் எனக் கருதப்படுகிறது: கி.மு.4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சந்திரகுப்த மௌரியரின் அமைச்சரான சாணக்கியர் தன் அர்த்தசாஸ்திரத்தில் கபாடபுரத்தில் முத்துக்குளித்தலைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்; கி.மு.350இல் வாழ்ந்த வடமொழி இலக்கணப் பேறிஞரான காத்தியாயனார் சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். பாரதப் போர் பற்றி வரும் குறிப்பில், புறநானூற்றில் பாண்டவர் ஐந்து பேருடன், 100 துரியோதனாதியர்களும் போரிட்டபோது அந்த இருபக்கப் படைகளுக்கும் பெருஞ்சோறு கொடுத்த காரணத்தால் உதியஞ்சேரலாதன் – சேரன் பெருஞ்சோற்று தியன் சேரலாதன் என்று அழைக்கப்பட்டார்; பாரதப் போர் நடைபெற்ற காலம் கி.மு.1,500 எனப்படுகிறது. அப்படியானால் இந்தச் சேரனின் காலம் கி.மு.1,500ஆக இருக்க வேண்டும். இவையனைத்தும் தமிழ் இனத்தின் தொன்மையையும், தமிழ் மொழியின் தொன்மையையும் புலப்படுத்தும்.

## திராவிட மொழி – திராவிடப் பண்பாடு

பேறிஞர்களான ஜான் மார்ஷல், ஈராஸ் அடிகள், சர் மார்ட்டிமர் வீலர், கமில் சுவலபில் போன்றோர் திராவிடர்களே "சிந்துவெளி நாகரிகத் தோற்றத்தின் உரிமையாளர்கள் எனவும்; அவர்களின் மொழி திராவிட மொழிதான் எனவும் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

சிந்துவெளி நாகரிகம் ஒரு திராவிடப் பண்பாடு; திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பழந்தமிழ்ப் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது; சிந்துவெளிக் குறியீடுகளைப் பழந்தமிழ் இலக்கியங்களில் பதிவாகியுள்ள தொன்மங்களோடு ஒப்பிட்டுப் புரிந்து கொள்ளலாம் என்று கடந்த 40 ஆண்டுகளாகச் சிந்து வெளிப்பண்பாட்டு வரிவடிவங்களில் ஆய்வு மேற்கொண்டு வரும் டாக்டர் ஐராவதம் மகாதேவன் கூறியிருக்கிறார்.

இன்று "கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது" பெறும் பின்லாந்து நாட்டுப் பேராசிரியர் அஸ்கோ பர்போலா – சிந்துவெளிப் பண்பாடும், அதன் எழுத்தும் திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தவை என்னும் கருதுகோளை ஆய்வுச் சான்றுகளோடு முன்வைத்து, அத்துறையில் தொடர்ந்து அரும்பணியாற்றி வருகிறார். சிந்துவெளியினர் திராவிடமொழி பேசுபவர்களே என்பதற்கான தகுந்த ஆதாரங்களை அவர் விரிவாகக் கூறியுள்ளார்.

அகநானூறு, புறநானூறு போன்ற கடைச் சங்க இலக்கியங்கள் கிடைத்ததன் பயனாக, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் நமக்குக் கிடைத்தது; தொல்காப்பியம் கிடைத்ததால், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் நமக்குக் கிடைத்தது: சிந்துவெளி எழுத்துச் சான்றுகளின் பயனாக, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் கண்டறியப்பட்டுள்ளது.

பண்டைத் தமிழர்கள் தரை வழியாகவும், கடல் வழியாகவும் பயணம் செய்து, உச்சயினி, கலிங்கப்பட்டினம், காசி, பாடலிபுரம் முதலான இடங்களிலும், கடல் கடந்த நாடுகளாகிய காழகம் (பர்மா), தக்கோலம், கிடாரம், சாவகம் (கிழக்கிந்தியத் தீவுகள்) முதலான இடங்களுக்கும் சென்று வாணிகம் செய்தார்கள்.

தமிழக வாணிகர் அயல்நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தது போலவே, அயல்நாட்டு வாணிகரும் தமிழகத்திற்கு வந்து வாணிகம் செய்தார்கள், அக்காலத்தில், வாணிகத்திலே உலகப் புகழ் பெற்ற காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்திலே, அயல் நாடுகளிலிருந்து கப்பலோட்டி வந்த வேறு மொழிகளைப் பேசிய மக்கள் தங்கியிருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

'பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்'

– என்று சிலப்பதிகாரமும்;

'மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்'

– என்று பட்டினப்பாலையும் எடுத்துரைக்கின்றன.

## செம்மொழிக்கான தகுதிகள்

தமிழ்நாட்டிற்கு வடமேற்கிலிருந்து வந்த அராபிய வாணிகரும், யவனர்களும், சேரநாட்டின் முசிறித் துறைமுகத்திற்கு வந்து வாணிகம் செய்தனர். இத்தகைய வாணிகத்தின் மூலமாகவும், பல்வேறு மொழிகளின் தொடர்புகளின் காரணமாகவும், தமிழ், உலக நாடுகளில் எல்லாம் அறியப்பட்ட மொழியாயிற்று. அதன் தொன்மையாலும், தனித் தன்மையாலும், முதன்மைச் சிறப்பினாலும், தமிழ் – உலக முதல் தாய் மொழியாக – உலகத் தமிழாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு மொழி செம்மொழியாகக் கூறப்படுவதற்கு இன்னின்ன தகுதிகள் வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது. தொன்மை (Antiquity) தனித்தன்மை (Individuality), பொதுமைப்பண்பு (Common Character), நடுவுநிலைமை (Neutrality) தாய்மைத்தன்மை (Parental Kinship), மொழிக்கோட்பாடு (Linguistic Principles), இலக்கிய வளம் (Literary Prowess), உயர் சிந்தனை (Noble Ideas and Ideals), பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு ஆகிய பதினோரு தகுதிகளை ஒரு மொழி பெற்றிருந்தால்தான், அது செம்மொழியாகும். இந்த பதினோரு தகுதிகளை மட்டுமல்ல; இந்தத் தகுதிகளுக்கெல்லாம் மேலான மேன்மையான தகுதிகளைப் பெற்ற மொழிதான், தமிழ்மொழி என்பதை, தமிழகத்திலே உள்ள தமிழறிஞர்கள் மட்டுமல்ல, இந்தியாவிலே பிறமாநிலங்களிலே உள்ள தமிழறிஞர்கள் மட்டுமல்ல, தமிழைக் கற்றுத் தேர்ந்த உலக அறிஞர்கள் எல்லாம் ஒருமனதாக ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

தமிழ் செம்மொழியே என முதன்முதலில் குரல் கொடுத்தவர் தமிழறிஞர் வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி எனும் பரிதிமாற்கலைஞர் அவர்கள் ஆவார்கள். தமிழ் செம்மொழி என்று முதன் முதலில் சொன்ன வெளிநாட்டவர் அறிஞர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் ஆவார்கள். அயர்லாந்து நாட்டில் "ஷெப்பர்ட்ஸ் காலனி" என்ற இடத்தில் வாழ்ந்த இவர் அங்கிருந்து குடி பெயர்ந்து, தமிழகத்தில் நெல்லை மாவட்டத்தில் இடையான்குடி என்ற ஊரில் தனது இறுதிக் காலம் வரையில் வாழ்ந்தவர். அந்த அளவிற்கு மண்ணின் பற்று, மொழியின் பற்றுக் கொண்டவராக அவர் விளங்கினார். தமிழ் – செம்மொழி என்னும் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென்று, சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம், கரந்தைத்தமிழ்ச்சங்கம், தலைநகர்த்தமிழ்ச் சங்கங்கள் போன்ற அமைப்புகளும்; சென்னைப் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் உள்ளிட்ட தமிழகத்திலே உள்ள பல்கலைக்கழகங்களும்; மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், முனைவர் ச.அகத்தியலிங்கம், முனைவர் வா.செ.குழந்தைசாமி, முனைவர் ஜான் சாமுவேல், மணவை முஸ்தபா, முனைவர் அவ்வை நடராஜன், முனைவர் பொற்கோ போன்ற தமிழறிஞர்களும்; டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜி, டாக்டர் கமில் சுவலபில், டாக்டர் ஜார்ஜ் எல்.ஹார்ட் போன்ற வெளி மாநில, வெளிநாட்டு அறிஞர்களும் தொடர்ந்து குரல் கொடுத்தனர்.

## தமிழ்ச் செம்மொழி: திருமதி. சோனியாகாந்தி எழுதிய கடிதம்

எனினும், ஒரு நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழகத்தில் ஓங்கி ஒலித்து வந்த அந்தக் குரல்; காட்டில் காய்ந்த நிலவாய், கடலில் பெய்த மழையாய் கவனிப்பாரற்றுப் போயிற்று. ஆனால், அரசியல் வானில் துருவநட்சத்திரம் போன்று, மத்தியில் தியாகத் திருவிளக்காம் திருமதி.சோனியாகாந்தி அவர்களின் வழிகாட்டுதலிலும், டாக்டர்.மன்மோகன்சிங் அவர்களின் தலைமையிலும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்தது. அதற்குப் பின்னர்தான்; தமிழைச் செம்மொழி யெனப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கை ஏற்கப்பட்டது. 12.10.2004 அன்று தமிழ், செம்மொழி என்ற பிரகடன அறிவிக்கை மத்திய அரசால் வெளியிடப்பட்டது.

அந்த நேரத்தில் திருமதி.சோனியாகாந்தி அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் :

Dear Thiru Karunanidhiji,

I have received your letter of 28th October. I am glad that all the formalities for declaring Tamil as a Classical Language have now been completed. This is an achievement for all the constituents of the UPA Government. But particular credit goes to you and your party."

## கடிதமல்ல; செப்பேடு!

அதாவது, தமிழைச் செம்மொழியாக ஆக்குவதற்குத் தேவைப்பட்ட முறையான சடங்கு, சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து அது நிறைவேறிவிட்டது. இந்தச் சாதனைக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் காரணம் என்றாலும் கூட, குறிப்பாகவும், சிறப்பாகவும், நீங்கள்தான் இதற்குக் காரணம். உங்கள் தலைமையிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழகம்தான் இதற்குக் காரணம் என்று சோனியா காந்தி அவர்கள்

எழுதியிருந்தார்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன். இதனை நான் ஒரு கடிதமாக அல்ல; காலாகாலத்திற்கும், இன்னும் நூறாண்டு காலம், இருநூறாண்டு காலத்திற்கும் பிறகு, என் கொள்ளுப் பேரன் எடுத்துப் படித்து, நம்முடைய தாத்தா கட்டிக் காத்த செப்பேடு இது என்று பாராட்டுகின்ற அளவிற்கு ஆக வேண்டுமென்ற ஆர்வமும் நம்பிக்கையும் உள்ளவன் நான்.

ஒரு நூற்றாண்டு காலமாக எழுப்பப்பட்டு வந்த குரல் – குன்றின் மேலிட்ட விளக்காக ஒளி வீசத் தொடங்கியதற்குப்பிறகு – தமிழ் செம்மொழி என்ற பிரகடன அறிவிக்கை மத்திய அரசால் வெளியிடப்பட்டதையொட்டி – நடைபெறுகிற முதல் மாநாடு இது என்பதால்; தமிழின் பெயரால், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்ற திருப்பெயரில் இந்த மாநாடு கோவை மாநகரிலே நடைபெறுகிறது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அழகும், இளமையும் அணுவளவேனும் குறையாமல் இந்த அவனியிலே வாழ்ந்து வரும் தமிழ்மொழியை; இனி எதிர்காலத்திற்கான தேவைகளை மதிப்பிட்டு – கணினித் தமிழ், அறிவியல் தமிழ் ஆகியவற்றை வளர்த்தெடுப்பதற்கான வழி முறைகளை வகுத்திடவும்; இலக்கியம், ஒப்பிலக்கியம், மொழியியல், மொழி பெயர்ப்பியல், வரலாறு, தத்துவம், மானிடவியல், நாட்டுப்புறவியல் போன்ற பல துறைகளிலும் பண்பட்ட ஆய்வுகளை ஊக்கப்படுத்திடவும், சிந்து வெளி முதல் ஆதிச்சநல்லூர், கொடுங்கடல் கொண்ட குமரிக்கண்டம் வரை தொல்லியல் துறையில் இதுவரை மேற்கொண்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் மேலும் மேம்பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுத்திடவும்; இந்த மாநாடு இப்போது கொங்குபூமியிலே நடைபெறுகிறது.

> "வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
> குடக்குப் பொருப்புவெளிக் குன்று – கிடக்கும்
> களித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டு
> குளித்தண் டலையளவும் கொங்கு"

என்று ஒருகாலத்தில் கொங்குநாட்டு எல்லைகள் வரையறுக்கப்பட்டிருந்தன. தமிழகத்தின் சரித்திரத்தில் – சங்க காலம் தொடங்கி இன்று வரை – தனி இடம் பெற்றிருப்பதும் – என்னை முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக அனுப்பி வைத்ததுமான குளித்தலை உள்ளிட்டதும் – கொங்கு நாடாகும். ஆம், குளித்தண்டலையளவும் கொங்கு.

தமிழகத்தில் பாரி, ஓரி, காரி, பேகன், ஆய், அதியன், நள்ளி என்னும் எழுவரை மட்டும் வள்ளல்கள் என வரையறுத்துக் கூறினர் சங்ககாலத்துச் சான்றோர்கள். இவ்வெழுவர்க்குப் பின்னர், அவ்வெழுவர் போல ஈதற்கு யான் உளேன் என்ற வள்ளல் குமணனோடு, சங்ககால வள்ளல்கள் எண்மராவர். அவ்வெண்மரில், பேகன், அதியமான், ஓரி, குமணன் ஆகிய நால்வர் கொங்கு நாட்டினர். அதுமட்டுமல்ல, கடிய நெடுவேட்டுவன், நன்னன், பூந்துறை, ஈந்தூர்க்கிழான், கொண்கானங் கிழான், விச்சிக்கோ, தாமான் தோன்றிக்கோன், மோகூர்ப்பழையன் ஆகிய சங்ககாலத் தலைவர்களும்; பழையக்கோட்டைச் சர்க்கரை, மும்முடிப் பல்லவராயர், காடையூர்க் காங்கேயர், கொற்றை வேணாடுடையார், மசக்காளி மன்றாடியார், வணங்காமுடி வாணராயன், காளிங்கராயன், பாரியூரான், உலகுடையான், அகளங்கன், இம்முடிச்சோழியாண்டான், தீரன் சின்னமலை, கொல்லிமழவன் போன்ற பிற்கால சங்கத் தலைவர்களும் கோலோச்சிய பூமி கொங்கு பூமி.

**சங்கப் புலவர்கள் பாடிப்**
**பைந்தமிழ் வளர்த்த கொங்கு பூமி**

அஞ்சி அத்தை மகள் நாகையார், அதியன் விண்ணத்தனார், அந்தி இளங்கீரனார், ஆலத்தூர்க்கிழார், ஆவியார், இரும்பிடர்த் தலையார், எருமை வெளியனார், கருவூர்க் கண்ணம்பாளனார், கருவூர்க்கிழார், கருவூர்க் கோசனார், கருவூர்ச்சேரமான் சாத்தனார், குடவாயிற் கீரத்தனார், கொல்லிக் கண்ணனார், செங்குன்றூர்க் கிழார், பெருந்தலைச் சாத்தனார், பொன்முடியார் போன்ற சங்ககாலப் புலவர்கள் பாடிப் பைந்தமிழ் வளர்த்த பூமி இந்தக் கொங்கு பூமி.

இத்தகைய புலவர்களும், புரவலர்களும், தன்னேரிலாத் தலைவர்களும் உலாவிய புகழுக்கும், பெருமைக்கும் உரியது கொங்கு பூமி. அதன் கோலமிகு மாநகரம் கோவை. அந்த மாநகரில் அனைத்து வகையிலும் அழகும், பொருத்தமும் நிறைந்த இடத்தில் – உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தொடங்குகிறது. மாநாட்டினைத் தொடங்கி வைத்திட, பெண்ணின் பெருமைக்கும், இந்திய மண்ணின் பெருமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிடும் மேதகு குடியரசுத் தலைவர் திருமதி.பிரதிபா தேவிசிங் பாட்டீல் அவர்கள் நமது அன்பான அழைப்பினையேற்று இங்கே வருகை தந்திருக்கிறார்கள். மாநாட்டுச் சிறப்பு மலரை வெளியிட்டு, வாழ்த்துரை வழங்கிட மேதகு தமிழக ஆளுநர் எனது மேன்மைமிகு நண்பர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் இங்கே வந்திருக்கின்றார்கள். உங்களோடு இணைந்து, அவர்களை வரவேற்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் தொடக்கவிழாத் தலைமையுரையினை இந்த அளவில் நிறைவு செய்கிறேன்.

★

# தமிழை முனைப்போடு முன்னெடுத்துச் செல்ல வழிவகைகளை வகுத்துச் செயல்படுவோம்!

**கோவையில் 23.6.2010 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுத் தொடக்க விழாவில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை.**

தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், கூட்டியிருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, இப்போது தொடங்குகிறது!

மாநாட்டினைத் தொடங்கிவைத்து உரையாற்றுவதற்கு; தமிழ் மக்களின் அன்பான அழைப்பினை ஏற்று, இங்கே வருகை தந்திருக்கும், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், திருமதி.பிரதிபா தேவிசிங் பாட்டீல் அவர்களே!

இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கான, முதல் பெண் வேட்பாளர் என்கிற முறையில், உங்களை ஆதரித்து, சென்னையில், நடைபெற்ற மாபெரும் மகளிர் பேரணியின் போது, முதலமைச்சர் தலைவர் கலைஞர்



அவர்கள், "உங்களுடைய அரும்பணிகளுக்கு அரிய துணையாக, நாமெல்லோரும் இருப்போம்," என்று சொன்னதை நினைவு கூர்ந்து,

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவராகிய உங்களை, தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, வருக! வருக! என்று வரவேற்கிறேன்.

மாநாட்டுச் சிறப்பு மலரை வெளியிட்டு, உரையாற்ற வருகை தந்துள்ள, மேதகு தமிழ்நாடு ஆளுநர், திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே! முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, எந்நாளும் இனிய நண்பராக உள்ள உங்களை, மாநாட்டுத் தலைமைக் குழுவின் சார்பில், வருக! வருக! என்று வரவேற்கிறேன்.

தொடக்க விழாவின் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களே! "தமிழகத்தின் பெருமையைச், சங்ககாலம் போல, மீண்டும் உலகம்

போற்றக்கூடிய அளவுக்கு உயர்த்தவேண்டும் என்ற, கனவை நனவாக்க விடாமுயற்சி மேற்கொண்டுள்ள, சிறந்த அறிஞர் கலைஞர்'' என்று, டாக்டர் மு.வரதராசனார் உள்ளிட்ட, தமிழறிஞர்களால் பாராட்டிப் போற்றப்பட்டுள்ள உங்களை; இங்கே கூடியிருக்கும் தமிழ் மக்களின் சார்பாகவும், மற்றும் அனைவர் சார்பாகவும், வருக! வருக! என்று வரவேற்கிறேன்.

தகுதியுரை வழங்கவுள்ள, நிதியமைச்சர் மதிப்பிற்குரிய இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களே!

தலைவர் கலைஞர் அவர்களோடு என்றென்றைக்கும், இணைந்து, ஈடற்ற பணியாற்றிவரும் உங்களை, மாநாட்டு வரவேற்புக் குழுவின் சார்பாக வருக! வருக! என்று வரவேற்கிறேன்.

மத்திய, மாநில அமைச்சர் பெருமக்களே! சட்டப் பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களே! பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களே! மாநாட்டுக்காக அமைக்கப்பட்டிருக்கும், பல்வேறு குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்களே! உறுப்பினர்களே! தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே, அலுவலர்களே! ஆசிரியப் பெருமக்களே! தொழிலாளத் தோழர்களே! பெரியோர்களே, தாய்மார்களே, நண்பர்களே! உங்கள் அனைவரையும் வருக !வருக! என்று வரவேற்கிறேன்.

''தமிழ்மொழி, உலகின் மிக உயர்ந்த செவ்வியல் இலக்கியங்களையும், மரபுச் செல்வங்களையும், பெற்றுத் திகழும் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று என்பதனை, நான் எவ்விதத் தயக்கமுமின்றித் தெளிவாக அறுதியிட்டுக் கூறுவேன்'' என்று பிரகடனம் செய்து, – பன்மொழிப் புலவராகத் திகழும், ஆய்வரங்க ஆலோசனைக் குழு உறுப்பினர், அமெரிக்க நாட்டுப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் அவர்களே! உங்களை வருக! வருக! என்று வரவேற்கிறேன்.

''தமிழ், இன்று ஒரு மாநில மொழி மட்டுமன்று; ஒரு நாட்டுமொழி மட்டுமன்று; அது ஒரு குவலயக் குடும்பத்தின் தாய்மொழி. தமிழ், உலகு தழுவி வாழும், ஒரு மொழிக் குடும்பத்தின் தாய்மொழி என்பது, உலகு ஒப்பிய உண்மை'' என்று எடுத்தியம்பிய, உலகத் தமிழாய்வு நிறுவனம் – செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஆகியவற்றின் துணைத் தலைவர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களே! உங்களை வருக !வருக என்று வரவேற்கிறேன்.

**புலவர்கள், அறிஞர்கள் போற்றிய மொழி**

தமிழ் ஆய்வு, மற்றும் தமிழ் விமர்சனம் ஆகியவற்றைப் பல்துறை சார்ந்த பரிமாணங்களில், வெளிப்படுத்தும் திறன் மிக்கவரும்; தமிழ்ச் சமூக வரலாற்றை, பல்வேறு தரவுகளின் ஊடாக எழுதும் வாய்ப்பினைப் பெற்று, சரியான புரிதலை உருவாக்கிய முதுதமிழ்ப் பேராசிரியருமாகிய, மாநாட்டு ஆய்வரங்கத்தின் அமைப்புக் குழுத் தலைவர், இலங்கை நாட்டுப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களே! உங்களை வருக! வருக! என்று வரவேற்கிறேன்.

''சிந்துசமவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே; அங்கே இருந்தவர்கள் திராவிட மொழி பேசியவர்களே'' என்று, உலகெங்கிலும் உள்ள ஆய்வறிஞர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஆதாரங்களோடு நிரூபித்துக் காட்டியவரும்,

முதல், ''கலைஞர் செம்மொழி விருதினைப்'' பெற்று, ஏற்புரை ஆற்ற வருகை தந்திருக்கும், பின்லாந்து நாட்டுப் பேராசிரியர், அஸ்கோ பர்போலா அவர்களே! உங்களை வருக !வருக! என்று வரவேற்கிறேன்.

தமிழ்ச் சான்றோர்களே! தமிழறிஞர்களே!

தமிழ் ஆர்வலர்களே!

''வெள்ளம்போல் தமிழர் கூட்டம்; வீரங்கொள் கூட்டம்; அன்னார், உள்ளத்தால் ஒருவரே!

மற்றுடலினால் பலராய்க் காண்பார்!''

என்ற பாவேந்தர் பாரதிதாசன் பாடல் வரிகளுக் கேற்ப; இங்கே ஆயிரம், பல்லாயிரம், இலட்சோப லட்சமெனத்

திரண்டிருக்கும் தமிழ்ப் பெருமக்களே! உங்கள் அனைவரையும் வருக! வருக! என அன்புடன் வரவேற்கிறேன்!

தொன்மை, முன்மை, எண்மை, ஒண்மை, இளமை, வன்மை, தாய்மை, தூய்மை, செம்மை, முழுமை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை ஆகிய அனைத்தையும், பெற்றுள்ள ஒரே மொழி தமிழ்மொழி தான் என்று, மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அறிவித்தார்.

தமிழை – அமுதத் தமிழ், இன்பத் தமிழ், இனிமைத் தமிழ், கனித்தமிழ், கன்னித் தமிழ், கன்னல் தமிழ், சங்கத் தமிழ், தங்கத் தமிழ், தனித்தமிழ், தாய்த்தமிழ், செந்தமிழ், செழுந்தமிழ், சுந்தரத் தமிழ், தூய தமிழ், தெள்ளு தமிழ், தேன்தமிழ், தேமதுரத் தமிழ், பைந்தமிழ், படைத்தமிழ், பொற்றமிழ், நற்றமிழ், மங்காத்தமிழ், மாத்தமிழ், முத்தமிழ், வாழும்தமிழ், வளரும்தமிழ், வற்றாத்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், தண்டமிழ், வெற்றித்தமிழ் – என்றெல்லாம் புலவர்களும் அறிஞர்களும், போற்றிப் புகழ்ந்துரைத்து இருக்கின்றார்கள்.

தமிழ், உலகின் மூத்த மொழி மட்டுமல்ல; முதல் செம்மொழியும் ஆகும். அதனால்தான், பாவேந்தர் பாரதிதாசன்,

கனியிடை ஏறிய சுளையும்– முற்றல்,
கழையிடை ஏறிய சாறும்;
பனிமலர் ஏறிய தேனும்– காய்ச்சுப்,
பாகிடை ஏறிய சுவையும்;
நனி பசு பொழியும் பாலும்– தென்னை
நல்கிய குளிர் இளநீரும்;
இனியன என்பேன்; எனினும், – தமிழை,
என்னுயிர் என்பேன் கண்டீர்!"

– என்று உலகுக்குப் பிரகடனம் செய்தார்.

**இனிமையும் தனித்தன்மையும்**

அண்ணல் காந்தியடிகள்; "எனது வாழ்க்கையில், ஏதாவது ஒன்றைப் பற்றி நான் வருந்துகிறேன் என்று சொன்னால், அது உயர்ந்த மொழியாகிய, தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு எனக்கு வாய்க்கவில்லையே, என்பது பற்றித்தான்" என்று தமிழ்மொழியை பெருமைப்படுத்தி கூறியுள்ளார். அத்தகைய இனிமையும் தனித்தன்மையும் வாய்ந்தது தமிழ்மொழி.

திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஜி.யு.போப் அவர்கள், ஒரு தமிழனாகப் பிறக்கவில்லையே என ஏங்கினார்.

அவர், தான் தமிழ் மொழியின்பால் கொண்ட பற்றின் அடையாளமாக, தமது கல்லறையில், "ஜி.யு.போப், ஒரு தமிழ் மாணவன்" என்று பொறிக்க வேண்டுமென விரும்பினார்.

அத்தகைய ஈர்ப்பும், இன்பமும் கொண்டது தமிழ்மொழி. அத்தமிழ் மொழியை, முனைப்போடு முன்னெடுத்துச் செல்வதற்கான, வழிவகைகளை வகுத்துச் செயல்படுத்திட, உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டை, தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே கூட்டியிருக்கிறார்கள்.

செந்தமிழே! உயிரே! நறுந்தேனே! செயலினை, மூச்சினை உனக்களித்தேனே! நைந்தாய் எனில், நைந்துபோகும் என்வாழ்வு; நன்னிலை உனக்கெனில், எனக்கும் தானே!" – என்ற உள்ளத்து உணர்வோடும், எழுச்சியோடும், இங்கே திரண்டிருக்கும், உங்கள் அனைவரையும் வருக! வருக! என்று உள்ளன்போடு, மகிழ்வோடு வரவேற்று விடைபெறுகிறேன்.

★ ★ ★

தென்னிந்தியர் எந்நாட்டாரினும் நல்லொழுக்கத்திலும் சிறந்து முன்னணியில் நிற்றற்குரியர். அதற்குக் காரணம், நாலடி நானூறும், திருக்குறளுமே.

– டாக்டர் ஜி.யு.போப்

# இந்தியா முழுமைக்கும் பாரம்பரிய கலாச்சாரத்தை தொடர்ந்து கட்டிக்காப்பதில் தமிழ்ச் செம்மொழி முக்கியப் பங்காற்றுகிறது

**கோவையில் 23.6.2010 அன்று,**
**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில்**
**அமெரிக்கப் பேராசிரியர்**
**ஜார்ஜ் ஹார்ட் அவர்கள்**
**ஆற்றிய உரை.**

உலகெங்கிலும் உள்ள தமிழ் அறிஞர்களை ஒரு சேர அழைத்து அவர்கள் பங்கேற்று பேச அருமையான மாபெரும் மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்த, தமிழுக்காக ஏராளமாக செய்து வரும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து எனது உரையை தொடங்க விழைகின்றேன்.

இதற்காக கடுமையாக உழைத்த டாக்டர் ராஜேந்திரன் அவர்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நான் நன்றி சொல்ல விழைகின்றேன். இங்கே இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும் வந்துள்ளார் என்பதற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தியா முழுமைக்கும் பாரம்பரிய கலாச்சாரத்தை கட்டிக் காப்பதில் செம்மொழித் தமிழானது ஒரு முக்கியப் பங்கை வகிக்கின்றது என்பதால் அவர் இங்கு அதற்கு ஒரு அத்தாட்சியாக அமர்ந்திருக்கிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பெரும்புலவர் பாரதியார் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகெங்கும்
பரவும் வகை செய்திடல் வேண்டும்"

அதனடிப்படையில் அதே உணர்வுடன், இந்த தமிழ்ச் செம்மொழி மாநாடு தமிழறிவைப் பரப்பவும், உலகெங்கும் உள்ள அறிவை ஆய்வு செய்யவும் பயன்படும் என்று எதிர் பார்க்கின்றேன்.

தமிழ்மொழியை ஒரு செம்மொழி என்று அழைக்க வேண்டும் என்பதற்காக ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகின்றேன். இன்றுள்ள தமிழ்நாடு, கேரளா மற்றும் வட இலங்கை ஆகியவை அடங்கிய இந்தப் பகுதியில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

ஒன்று வளமைமிக்க வாய்மொழியிலான இலக்கியம். இன்னொன்று பிராமி எழுத்தில் எழுதும் பொதுவான போக்கு. இவைகளின் காரணமாக நாடுமுழுவதும் நாடோடிப் பாடல்கள் உலவத் தொடங்கின. அதையடுத்து



சில நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஆச்சர்யப்படத்தக்க அளவிற்குப் பாடல்கள் உருவாகி அவைகள் இன்றைக்கும் சிறந்த பாடல்களாக இருந்து வருகின்றன. அவைகள் எல்லாம் சங்க கால இலக்கியங்களாக நாம் கருதுகின்றோம்.

ஏ.கே.ராமானுஜம் சங்க காலப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் வரை, இந்த செம்மொழி இலக்கியப் பாடல்கள் எல்லாம் 'தமிழகத்திற்கு அப்பால் தெரியாமலே இருந்தன. மிகச் சிறந்த சங்க இலக்கியங்கள் எல்லாம் உலகின் பார்வைக்கு புலப்படாமல் ரகசியமாக இருந்து வந்துள்ளன. இலத்தின் மொழிக்கும் சமஸ்கிருத மொழிக்கும் போட்டியாக தமிழ் உருவாகிவிடுமோ என்று கூட பின்னர் ஒரு சிலர் கருதக் கூடிய அளவிற்கு அது அமைந்தது. அந்த நிலைமை மாறத் தொடங்கி, தற்போது இந்திய அரசு தமிழுக்குச் செம்மொழி தகுதி அளித்ததன் காரணமாக தமிழின் மேன்மை அதற்கு ஒரு அத்தாட்சியாக அமைந்தது. இன்னமும் ஒரு சிலர் தமிழ் செம்மொழியா என்று கேள்வி எழுப்புவதை என்னால் கேட்க முடிகிறது. அவர்கள் சங்க கால இலக்கியங்களைப் படிக்காதவர்களாக இருக்க வேண்டும்.

தமிழ் மொழியானது தனக்குத் தானே வளர்ந்த ஒன்று என்பதை முதலில் மனதில் கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி யாருடைய உதவியுமின்றி அது தானாகவே வளர்ந்தது என்பதோடு மக்கள் தான் அதை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்தியாவின் மற்ற மொழிகளைப் போலல்லாமல், எந்தவித அடிப்படையுமின்றி தமிழ் மொழி வளர்ந்துள்ளது. சமஸ்கிருதம், பெர்சியன், அரெபியா போன்ற மொழிகளைப் போல் அல்லாமல் அது தானே நடைமுறையில் உள்ளதைப் போல் வளர்ந்துள்ளது. மற்ற எந்த மொழிகளிலுமிருந்தும் தமிழ்மொழி தனது எழுத்துகளையோ பேச்சு முறையையோ வாங்கவில்லை. அதுதான் அதன் தனிச் சிறப்பு.

நான் இந்த மாநாட்டின் கருத்தரங்கில் எனது ஆய்வறிக்கையை அளிக்கும் போது இது குறித்து விரிவாகவும் விளக்கமாகவும் தெரிவிக்க விரும்புகின்றேன். சமஸ்கிருதம் மற்றும் மற்ற மொழிகளிலிருந்து மாறி எப்படி தமிழ் மொழி தன்னிச்சையாக வளர்ந்துள்ளது என்பது குறித்து அப்போது விரிவாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்கள் தரமானவைகளாகவும் மேன்மையானவைகளாகவும் அமைந்துள்ளன. 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட பாடல்களில் மனித நிலைமை, மனிதர்களின் அனுபவங்கள், துன்ப துயரங்கள், மகிழ்ச்சி இன்பங்கள் குறித்து மக்களிடையே இருந்து விழிப்புணர்வு குறித்து தெள்ளத் தெளிவுடன் குறிப்பிடப்பட்டுள்ளன. அவைகள் அனைத்தும் எந்தவொரு சமஸ்கிருதம் மற்றும் கிரேக்க மொழிப் பாடல்களுக்கும் இணையாகவே இருக்கும்.

ஒரு புறநானூற்றுப் பாடலை (எண்182) இங்கே நான் பாடிக்காட்ட விரும்புகின்றேன். இளம் பெரும்வழுதி எழுதிய அந்தப் பாடலில் எந்த அளவிற்குப் பொருள் பொதிந்துள்ளது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

உண்டாலம்ம விவ்வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே

*(மேற்காணும் புற நானூற்றுப் பாடலை தமிழில் பாடிய ஜார்ஜ் ஹார்ட், பின்னர் அதற்கான விளக்கத்தை ஆங்கிலத்தில் பேசினார்)*

நிறைவாக, எனது வாழ்த்துரையை ஐங்குறு நூறு என்ற இலக்கியத்தில் வேட்கைப்பத்து என்ற பாடலிலிருந்து சில வரிகளை எடுத்துக் கூறி நிறைவு செய்கின்றேன்.

வாழி ஆதன் வாழி அவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
விளைக வயலே வருக விரவலர்
பால்பல வூறுக பகடுபல சிறக்க
பசியில் லாகுக பிணிசே ணீங்குக
அறநனி சிறக்க அல்லது கெடுக
அரசுமுறை செய்க களவில் லாகுக
நன்றுபெரிது சிறக்க தீதில் ஆகுக
மாரி வாய்க்க வளநனி
சிறக்க
செம்மொழியான தமிழ் வாழ்க! ★

## செம்மொழி



"தமிழ் மீது நாம் பற்று வைப்பது இயற்கை நியதியாகும். ஆனால் அதற்குமேலே அந்த மொழியை ஒப்பிட்டுப் பார்த்தாலும், தமிழ் ஒரு செம்மொழி என்பது தெரிகிறது. அந்த மொழி மீது வைக்கப்படுகின்ற பற்றின் காரணமாக, அந்த மொழி, எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெறவேண்டுமென்று விரும்புகிறோம். ஏற்றத்திற்குத் தடையாக, ஏதேனும் வருமானால், நம்மையும் அறியாமல் உள்ளம் கொதிப்படைகிறது".

– பேறிஞர் அண்ணா

# இனியவை நாற்பது

செம்மொழித் தமிழின் இலக்கியம், தமிழர்களின் கலை, வரலாறு
இவற்றை நினைவூட்டும் எழிலார் பவனி
23-6-2010 அன்று, கோவை வ.உ.சி. மைதானத்திலிருந்து தொடங்கி
அவினாசி சாலை வழியாக மாநாட்டு வளாகத்தை வந்தடைந்தது.
இதில் இடம்பெற்ற அலங்கார வாகனங்கள்.



மகாபலிபுரம்
கடற்கோயில்



கிராமிய மணம்



நடனக்
கலைஞர்கள்



வான்புகழ்
வள்ளுவர்



குறிஞ்சி



முல்லை



மருதம்



நெய்தல்



வேட்டுவர்
பாணர்க்கு
விருந்தோம்பல்



திருக்குற்றாலக்
குறவஞ்சி



கவரி வீசிய
காவலன்



கூத்தர் பாணர்
சான்றோடு மன்னர்



பாரி முல்லைக்கு
தேர் நல்கியது



ஔவைக்கு நெல்லிக்கனி
கொடுத்த அதியமான்




பொற்கைப்
பாண்டியன்



குமணன்



பேகன் மயிலுக்கு
போர்வை நல்கியது



நட்பின் இலக்கணம்
கோப்பெருஞ்சோழர் -
பிசிராந்தையார்



மனுநீதிச்
சோழன்



கண்ணகி
மதுரையை எரித்த காட்சி



மணிமேகலை



பகிர்ந்து உண்



வண்ணங்கள்
வேற்றுமைப்பட்டால்
அதில்
மானுடர்
வேற்றுமையில்லை



தமிழகக்
கலை வளர்ச்சி



திரைகடலோடி
திரவியம் தேடல்



போர்க்கலைகள்



புறநானூற்றுத்
தாய்




போரில்
மகளிர்



வேலு நாச்சியார் -
ஔவை



பாரதிதாசன் -
சங்கே முழங்கு



வீர மறவர்கள்



பொன்னர் - சங்கர்



பிறப்பொக்கும்
எல்லா உயிர்க்கும்



சுழன்றும் ஏர் பின்னது
உலகம்



மரம் உடன்
பிறந்தவளாகிறது



புதியதோர்
உலகம் செய்வோம்



பாரதியார் -
காக்கை குருவி
எங்கள் ஜாதி



காலத்தை வென்று நிற்கும்
வரலாறு -
தஞ்சை பெரிய கோயில்

# தமிழுக்குப் பாடுபட - தமிழ்த் தொண்டுப் பயணம் வேகமாகத் தொடர்ந்திட ஊக்கத்தையும் உறுதியையும் மாநாடு நமக்கு அளித்துள்ளது!

**கோவையில் 24.6.2010 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் ஆய்வரங்க மாநாட்டைத் தொடங்கிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை.**

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆய்வரங்கத் தொடக்க விழா நிகழ்ச்சியின் தலைவர் முனைவர் கா. சிவத்தம்பி அவர்களே,

சிறப்பு மலரினை வெளியிட்டு உரையாற்றிய தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் அன்பழகனார் அவர்களே,

வாழ்த்துரை வழங்கிய முனைவர் வா.செ.குழந்தைசாமி அவர்களே, முனைவர் மு.ஆனந்தகிருட்டிணன் அவர்களே, முனைவர் கிரிகோரி ஜேம்ஸ் அவர்களே, முனைவர் உல்ரிக் நிக்லாஸ் அவர்களே, முன்னிலை வகிக்கும் வெளிநாட்டு அறிஞர் பெருமக்களே, வரவேற்புரையாற்றிய முனைவர் பொற்கோ அவர்களே, நன்றியுரை நவிலவிருக்கும் முனைவர் அவ்வை நடராசன் அவர்களே, ஆய்வரங்கில் கலந்து கொள்ள வந்துள்ள வெளிநாட்டைச் சேர்ந்த – வெளிமாநிலங்களைச் சேர்ந்த அறிஞர் பெருமக்களே,



ஆய்வாளர்களே, மத்திய, மாநில அமைச்சர் பெருமக்களே, தாய்மார்களே, பெரியோர்களே, என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே, வணக்கம்.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் நேற்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் அடுத்த கட்டம் இன்று தொடங்குகிறது. அன்னைத் தமிழுக்கு அரிய பயன்தரும் கட்டம் இது; இன்றிலிருந்து தொடங்கி, நான்கு நாட்களுக்கு நடைபெறப்போகும் ஆய்வரங்கங்களின் மூலம்தான் – தமிழ் மொழியை மேலும் செழுமைப்படுத்திடவும்; அது என்றும் உயிரோட்டமுள்ள மொழி என்பதை மெய்ப்பித்திடும் வகையில், அதனை வளர்த்து, 21ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கேற்ப முன்னெடுத்துச் செல்லவும், உரிய ஆலோசனைகளையும், உயர்ந்த கருத்துரைகளையும் நாம் பெற இருக்கின்றோம்.

இங்கு நடைபெறவுள்ள ஆய்வரங்கிலும், இணையத் தமிழ் மாநாட்டிலும் பங்கு கொள்ள வந்திருக்கிற உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த அன்பையும், நன்றியையும், முதற்கண் தெரிவித்துக் கொள்வதில் நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

**புதிய ஆர்வம் – எழுச்சி**

தமிழ்மொழி – தமிழர் பண்பாடு – நாகரிகம் ஆகியவற்றைப் பொறுத்தவரை, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, இப்போது எல்லா முனைகளிலும் புதிய ஆர்வத்தையும், எழுச்சியையும் நம்மாலே காணமுடிகிறது. ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேலான நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான ஆய்வறிஞர்கள் இங்கே

வந்திருப்பது நமக்குப் புதிய தெம்பையும், நம்பிக்கையையும் தருகிறது.

ஆழ்ந்த ஆய்வுகளின் காரணமாக உருவாகிடும் சிந்தனைகளைச் சேகரித்துக் கோவைப்படுத்துவதே ஆய்வரங்குகளின் பணியாகும். இத்தகைய ஆய்வரங்குகள் நடப்பதிலிருந்து நல்ல பலன்களை எதிர்பார்த்திடும் மக்கள் முன், ஆய்வறிஞர்கள்; எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள கருத்துகளை வழங்கிட வேண்டும். ஆய்வரங்குகளில் வைக்கப்படும் கட்டுரைகளும், விளக்கப்படும் கருத்துகளும் மக்களைப் புதிய கோணத்தில் சிந்திக்கத் தூண்டிடும் தன்மையுடையவையாக இருத்தல் வேண்டும். அந்த அளவுக்கு மிக உயர்ந்த தரத்தை உடையவையாகக் கட்டுரைகளும், கருத்துரைகளும் இருந்தன என்று கருதப்படக் கூடிய அளவுக்கு, இந்த ஆய்வரங்கங்கள் அமைந்திட வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

**திராவிட மொழிக் குடும்பம்**

கொல்கத்தாவில் ஆசியக் கழகம் மூலமாக 1786இல் வில்லியம் ஜோன்ஸ் அறிவித்த இந்தோ – ஐரோப்பிய மொழிக் குடும்பம் என்னும் கருத்தாக்கம் சமஸ்கிருதத்தை மையமாகக் கொண்டு அமைந்தது. திராவிட மொழிக் குடும்பம் என்னும் கருத்தாக்கத்தை 1816இல் எல்லிசு, அவரைத் தொடர்ந்து 1856இல் கால்டுவெல் என ஐரோப்பிய அறிஞர்கள் பலரும் மையப்படுத்தி ஆராய்ந்தனர். இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தினின்றும் வேறானது திராவிட மொழிக் குடும்பம்; அக்குடும்பத்தின் முதன்மை மொழி தமிழ் என்னும் உண்மையை உலகத்திற்கு அவர்கள் உணர்த்தினர்.

1927இல் ஜான் மார்ஷலின் சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகம் என்னும் கண்டுபிடிப்பு உலகத்தின் கருத்தைத் தமிழின்பால் ஈர்த்தது. அதன்பின், உலக நாடுகளின் அறிஞர்கள் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரிகம் முதலியன குறித்தெல்லாம் அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினர். அவர்கள் ஆராய்ந்து தமிழின் தொன்மை, தனித்தன்மை, செவ்வியல் தன்மை, தமிழர் தம் இலக்கிய விழுமியம், கலைநலம், பண்பாட்டு வளம், நாகரிக முதிர்ச்சி முதலியவற்றை எல்லாம் வெளிப்படுத்தினார்கள்.

**திராவிட இனத்தின் தொன்மை**

திராவிட இனத் தொன்மை பற்றி அறிஞர்கள் பலர் ஆய்வு செய்து அறிவித்துள்ளனர்.

- இரவீந்திரநாத் தாகூர், திராவிடம் தந்த செழிப்பும் வலிவும்தான் ஆரிய நாகரிகத்தின் நலிவைப் போக்கி அதன் அடிப்படையை அலுங்காமல் காத்தது என்கிறார்.
- சோவியத் நாட்டு மொழி அறிஞர் சாகிரப் என்பவர் வட இந்திய திராவிட மொழிகளையும், தென்னகத் திராவிட மொழிகளையும் ஒப்பிட்டவர். அவர் தமிழர்கள் தென்னாட்டிலிருந்து வடதிசை நோக்கிப் பரவினர் என வாதிட்டு நிலை நாட்டுகிறார்.
- காஷ்மீரில் வாழும் மலைவாழ் மக்கள் திராவிட மொழிப் பிரிவின் கிளைமொழியைப் பேசுகின்றனர்.
- பீகாரின் ராஜ்மகால் குன்றுகளில் வாழும் "குருக்கர்" என்போர் திராவிட மக்களே என்பது அவர்கள் பயன்படுத்தும் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் பழங்கதைகளின் வாயிலாகத் தெரிய வருகிறது.
- இந்திய நாகரிக அடையாளமான சேலையும், வேட்டியும் திராவிட நாட்டின் கொடையாகுமென்று பேராசிரியர் எஸ்.கே.சட்டர்ஜி; "இந்தோ – ஆரியன் – இந்து" என்ற நூலில் எழுதியுள்ளார்.



- ஆரப்பா, மொகஞ்சதாரோ ஆராய்ச்சியில் கண்டறிந்த தாய்த் தெய்வ வழிபாடு திராவிட வழிபாடேயாகும்.

- அமெரிக்காவில் கொலராடோ ஆற்றின் கரையில் கட்டப்பட்ட சிவன் கோயில், திராவிடரின் கடவுளைக் காட்டுகிறது.

> **"இந்திய மொழிகள், உலக மொழிகள் அனைத்திலும் தமிழ் இலக்கியச் செல்வங்கள் மொழிபெயர்க்கப்பட வேண்டும். கிரேக்க மொழியிலும், பிரெஞ்சு மொழியிலும், ஜெர்மன் மொழியிலும், பிற மொழிகளிலும் தமிழியல் குறித்தும் தமிழினம் குறித்தும் எழுதப் பெற்றுள்ளவை அனைத்தும் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்."**

- ஆதிச்சநல்லூரின் மண்டை ஓடுகள் சிந்து வெளியில் கிடைத்த மண்டை ஓடுகளுடன் ஒத்துள்ளன.

- சோவியத் நாட்டுப் பேராசிரியர் கோந்திரதோவ் என்பார், உலகின் பழமை மிகு நாகரிகங்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கைப் பிற இனத்தவர்க்கும், இரு பங்கினைத் திராவிடர்களுக்கும் உரியதாக்குவதே உண்மையான பங்கீடு என்று கண்டறிந்து உரைக்கின்றார்.

- எழுத்து முறையை எகிப்தியருக்குத் திராவிடர் கொடையாகக் கொடுத்தனர்.

- மெசபடோமியா நாகரிகமும், எலாமியர் ஏற்றமும் குமரிக்கண்டத் தமிழரிடமிருந்து சென்றவை.

- பாபிலோனிய மதகுரு ஒருவர் எழுதிய பழங்கதை ஒன்றில், மெசபடோமியர்க்கு நாகரிகம் கற்பித்த "ஒனசு" என்பார், தமது குழுவினருடன் வந்தார். நாகரிகம் கற்பித்தார். ஏர் உழவுக் கருவிகளைக் கொடுத்தார். அறிவியல் கலை, கட்டடக்கலை, ஆண்டவன் வழிபாடு ஆகியவற்றைக் கற்பித்தார் என்று கூறப்பட்டுள்ளது.

- சங்ககாலம் கி.மு.4ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் எனக் கொண்டால், சங்க இலக்கியங்களிலிருந்து திராவிட நாகரிகத்தை அறிய முடிகிறது.

- "மத்திய தரைக்கடல், குமரிக்கண்டம், சிந்துவெளி, எகிப்து, சுமேரியா எங்கணும் பரவியது தமிழர் நாகரிகமே" என்று இராமச்சந்திர தீட்சிதர் "தமிழர் தோற்றமும் பரவியதும்" என்ற நூலில் கூறியுள்ளார்.

### எந்த மொழியிலும் இல்லாத தொல் இலக்கியம்

தமிழ் மொழியின் தொன்மையைப் பொறுத்த வரை தொல்காப்பியம் போன்றதோர் பழைமை இலக்கணம் எந்த மொழியிலும் இல்லை. அகம், புறம் என்னும் பொருண்மைப் பகுப்பும்; திணை, துறை வகுப்பும்; சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாதவாறும்; கூற்றுநிலையில் அமைந்திடுமாறும்உள்ள அகப்பாடல்களும்; பொய்யும் வழுவும் விரவா மெய்யான தூய காதலைப் போற்றும் மரபும்; மகேசனை மையப்படுத்தாதுமனிதனை மையப்படுத்தும் பாடல்களும் கொண்ட சங்க இலக்கியம் போன்றதோர் தொல்லிலக்கியம் எந்த மொழியிலும் இல்லை. திருக்குறள்போல உலகப் பொதுமையான அற இலக்கியமும் எந்த மொழியிலும் இல்லை; கடவுளை விடுத்துக் குடிமக்களைத் தலைமக்களாகக் கொண்ட சிலப்பதிகாரம் போல ஒரு தொன்மையான காப்பியமும் எந்த மொழியிலும் இல்லை; ஆசியா முழுவதும் கோலோச்சிய பௌத்த சமயத்திற்கு மணிமேகலை போல ஒரு காப்பியம் பாலிமொழியிலும் இல்லை; எல்லாச் சமயங்களையும் – சைவ, வைணவ சமயங்களையும் – சமண, பௌத்த சமயங்களையும் – கிறித்துவ, இசுலாமிய சமயங்களையும் இதயத்திலே ஏந்திக் கொண்ட மொழி தமிழ். சமயந்தோறும் நின்ற தையல் எனப் போற்றப் பெறும் தமிழ், சமயங்களையும் வளர்த்துத் தன்னையும் வளர்த்துக் கொண்ட மொழி. அது மட்டுமல்ல; எல்லா மெய்ப்பொருள் தத்துவங்களையும் விளக்கும் மொழி அது.

### பண்பாட்டுப் பங்களிப்பு

தமிழ்நாட்டு எல்லை கடந்து இந்தியாவின் வடபுலம் வரை மட்டும் அல்ல – கடல் கடந்து அயல்நாடுகளுக்கும் சென்று – திரைகடலோடித் திரவியம் தேடியது மட்டுமன்றித் திக்கெட்டும் பண்பாட்டுப் பங்களிப்பைச் செய்த இனம் தமிழ் இனம்.

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகில் கழுக்காணி முட்டத்தில் அண்மையில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையினரால் முதலாம் இராசாதிராசன் காலத்தைச் சேர்ந்த கி.பி.1053ஆம் ஆண்டைச் சேர்ந்த 85 செப்பேடுகள் பூமிக்கு அடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. வில், புலி கயல் ஆகிய சேர, சோழ, பாண்டியர்களின் முத்திரைகளோடு கிடைத்துள்ள அந்தச் செப்பேடுகள் வரலாற்று ஆய்வாளர்களுக்குப் பெரும் கருவூலமாகும். தஞ்சையை விசயாலயச் சோழன் பல்லவர்களிடமிருந்து கைப்பற்றியதற்கான புதிய வரலாற்றுக் குறிப்பு இச்செப்பேட்டில் கிடைத்துள்ளது. இச்செப்பேடு இந்த மாநாட்டை ஒட்டிய கண்காட்சியில் உங்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மேலும் உள்ளாட்சி முறையை உலகிற்கு எடுத்துச் சொல்லும் வரலாற்றுப் பதிவாக விளங்குகிறது உத்திரமேரூர்க் கல்வெட்டு. இவையெல்லாம் தமிழர்களின் தொடர்ச்சியான வரலாற்றுப் பதிவுகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இப்படி காலந்தோறும் தமிழ், தமிழர்கள் கொண்டுள்ள எண்ணற்ற சிறப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்; அவற்றையெல்லாம் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள தமிழர்கள் தான் வெளிநாட்டவர்க்கு எடுத்துரைத்திட வேண்டும்; ஆனால் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத கால்டுவெல், ஆல்பர்ட் சுவைட்சர் போன்ற வெளி நாட்டவர் அவற்றைத் தமிழர்களுக்கு விளக்கிச் சொல்லும் நிலைதான் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது.

**மொழிபெயர்ப்பு**

தமிழன் புகழ்மிக்க பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரன் என்பதை முதலில் தமிழன் உணர வேண்டும்; பிறருக்கும் உணர்த்த வேண்டும் என்பதற்காக மட்டும் அல்லாமல், தமிழ், தமிழ் இனம், தமிழ் இலக்கியம், பண்பாடு, நாகரிகம் என்று ஒவ்வொரு துறையிலும் பதித்துள்ள முத்திரைகள், சாதித்துள்ள சாதனைகள், இவையெல்லாம் ஒவ்வொரு தமிழனுக்கும் பூரிப்பையும், பெருமிதத்தையும் ஏற்படுத்தக் கூடியவை என்றாலும், அந்தப் பூரிப்போடும் பெருமிதத்தோடும் நிறைவு அடைந்துவிடக் கூடாது; தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் ஆற்ற வேண்டியவை இன்னும் ஏராளமாக உள்ளன என்பதை உணரவேண்டும்.

இந்திய மொழிகள், உலக மொழிகள் அனைத்திலும் தமிழ் இலக்கியச் செல்வங்கள் மொழிபெயர்க்கப்பட வேண்டும். கிரேக்க மொழியிலும், பிரெஞ்சு மொழியிலும், ஜெர்மன் மொழியிலும், பிற மொழிகளிலும் தமிழியல் குறித்தும் தமிழினம் குறித்தும், எழுதப் பெற்றுள்ளவை அனைத்தும் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

உலகெங்கும் உள்ள தமிழியல் நூல்கள், ஆவணங்கள் மின்மயமாக்கப்பெற்று உலகில் எந்த ஒரு பகுதியில் உள்ளவர்களும் அவற்றைப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

**அகராதிகள் – கலைக்களஞ்சியங்கள்**

துறைதோறும் தமிழ் பயன்பட வேண்டும். வகைவகையாய் அகராதிகளும், தொகை தொகையாய்க் கலைக்களஞ்சியங்களும் வரவேண்டும். இன்னும் என்னென்ன வேண்டும் தமிழுக்கு என ஆய்வரங்கத்திலும், இணைய மாநாட்டிலும் பங்கேற்கிற அறிஞர் பெருமக்கள் எடுத்துச் சொல்லி இந்த அரசுக்கு ஆணையிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்ற பாவேந்தர் கருத்துப்படி, பாட்டையை அமைத்துக் கொண்டு, உயிர் உள்ளவரை தமிழுக்காகப் பாடுபட – நம்மைத் தமிழுக்கு முழுமையாக ஒப்படைத்திட – நமது தமிழ்த் தொண்டுப் பயணத்தை மேலும் வேகமாகத் தொடர்ந்திட – உரிய ஊக்கத்தையும், உறுதியையும் இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நமக்கு அளித்துள்ளது.

இன்று முதல் நான்கு நாட்கள் நடைபெறும் ஆய்வரங்கின் பல்வேறு அமர்வுகளில் வழங்கப் பெறும் கட்டுரைகளிலும், முகப்பரங்கம், கலந்தாய்வரங்கம், பொழிவரங்கம், கலந்துரையரங்கம் ஆகியவற்றிலும் முன் வைக்கப்படும் கருத்துகளும், அவை மீதான ஆரோக்கியமான விவாதங்களும் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழியல் ஆய்வு வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படும் என்று கூறி உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆய்வரங்கை மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் தொடங்கி வைக்கிறேன்.

நிறைவுரை ஆற்றும்போது இந்த மாநாட்டிலே எடுத்துச் சொல்லப்பட்ட பல்வேறு சான்றோர்களுடைய கருத்துகளையெல்லாம் கலந்தாலோசித்து – ஏற்ற தீர்மானங்களாக அவைகளை எடுத்து ஆக்கி இந்த மாநாட்டின் வாயிலாக வெளியிடப்படும் என்பதையும் நான் மிகுந்த அடக்கத்தோடு இங்கே தெரிவித்து இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன். ★

*ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!*
*திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!*
*மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!*

**– இளங்கோவடிகள்**

# உயர்ந்த கருத்துகளின் உறைவிடமாகத் திகழும் செம்மொழியான தமிழுக்குக் கிடைத்த வெற்றி - தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைத்த வெற்றி

இந்த மகாநாட்டில் நடைபெறுகின்ற ஆய்வரங்கத்தினுடைய தொடக்கமாக அமைந்துள்ள இந்த நிகழ்ச்சியில் – இதைச் சிறப்பிக்கும் வகையில் ஒரு ஆய்வறிக்கை திரு.சிவத்தம்பி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவினரால் தயாரிக்கப்பட்டு இங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய தினம் மகாநாட்டிற்காக சிறப்பு மலர் மேதகு ஆளுநர் அவர்களால் வெளியிடப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. இந்த எழுச்சி மிகுந்த மகாநாட்டில் தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பல மலர்கள் வண்ண மலர்களாக சிறு சிறு மலர்களாக எழுத்து ஓவியங்களாக நம்முடைய இனத்தைப் பெருமைப்படுத்தும் முயற்சியாக உருவாகியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு தனிச்சிறப்பு மிகுந்த மாநாடாக இந்த மாநாடு விளங்குவதற்கு பல காரணங்கள் இருக்கிறது. இந்த மாநாடு நம்முடைய தாய்மொழியான தமிழுக்குச் செய்கிற சிறப்புக்கு அடையாளமான மாநாடு. மனித வாழ்வில் தாய்மொழியை விட ஆழமான இடத்தைப் பெறக் கூடியது வேறு எதுவும் இருக்க முடியாது. மனிதன் என்று சொல்கிறபோதே அவனவன் தாய்மொழியோடு கலந்தவனாகிறேன். தாய்மொழியோடு கலக்காதவன் தாய் மொழியின் அடையாளத்தை இழக்கிறான். இந்தத் தாய்மொழி நம்முடைய தாய்மொழி. இந்த தாய் மொழியிடத்திலே பற்றுடைய பெருமக்கள் செய்யுட்கள், பாடல்கள் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிப் பார்ப்பீர்களேயானால் அது மிக விரிவுடையதாகும்.

இந்த தமிழ் அவ்வளவு இனிமையுடையது. அமுதத் தமிழ், இன்பத் தமிழ் என்றெல்லாம் பாராட்டப்படும்

**கோவையில் 24.6.2010 அன்று,**
**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில்**
**ஆய்வரங்க மாநாட்டுச் சிறப்பு மலரை**
**வெளியிட்டு,**
**மாண்புமிகு நிதியமைச்சர்**
**பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்**
**ஆற்றிய உரை.**

தமிழுக்கு அதன் ஏற்றத்தை உணர்த்தும் செம்மொழி மாநாடாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நேற்றைய தினம் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் உரையாற்றுகிறபோது சொன்னதைப் போல




இந்த மகாநாடு, முதல்வர் கலைஞர் அவர்களுடைய திட்டத்தின்படி பெரிய முயற்சியினாலே அவருடைய திறமையினாலே நடைபெறுகிற ஒரு வெற்றி மாநாடு என்ற கருத்தை மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டு இந்த மாநாட்டுக்காக அமைக்கப்பட்டிருக்கிற இந்த எழுச்சிப்பணி, தமிழ்ப்பணி, கலைஞர் அவர்களுடைய அற்புதமான திறமையினாலே உருவான ஒன்று என்பதையும் அவர் எடுத்துக்காட்டிப் பாராட்டினார். அப்போது அவர்கள் சொல்கிறபோது, பல ஆண்டுகாலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்து 19 ஆண்டுகளுக்கு

மேலாக முதல்வர் பொறுப்பை ஏற்று நிருவகித்து அப்படிப்பட்ட பணிகளுக்கு இடையில் தமிழ் தொடர்பான பல்வேறு துறைகளிலும் ஆற்றல்மிக்க ஒருவராக பல திறம்வாய்ந்த ஓர் தமிழ் அறிஞராக கலைஞர் அவர்கள் வழங்குவது மிகப்பெரிய பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டார்கள். அதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம் தேசியக்கவி பாரதியாரைப் பற்றி புரட்சிக்கவிஞர் சொன்னார். பாரதியால் தமிழ் தகுதி பெற்றதும் தமிழால் பாரதி தகுதி பெற்றதும் என்று சொன்னார். அதைப்போல தமிழ் செம்மொழியால் கலைஞர் தகுதி பெற்றதும், கலைஞருடைய திறனால் தமிழ் செம்மொழி பெற்றதும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு உள்ளது.

**இயற்கையிலேயே செம்மொழி**

தமிழுக்குச் செம்மொழித் தகுதி இயற்கை என்று சொன்னாலும்கூட அது அதனுடைய வளத்தோடு ஒட்டியது என்றாலும் கூட அதற்கு திருக்குறள் ஒன்றே போதும் என்று வாதிட்டாலும்கூட, தங்கத் தமிழ் செப்பாத செம்மொழியா என்று கேட்டாலும்கூட, தொல்காப்பியம் இருக்கிறபோது அதை மிஞ்சுவதற்கு வேறு என்ன இருக்கிறது என்று சொன்னாலும்கூட, அவற்றையெல்லாம் மிஞ்சி தமிழைச் செம்மொழி என்று ஏற்காத உலகம் இருந்தது. ஏற்க மறுத்த நிலைகூட இருந்தது. அதை ஏற்கச் செய்த பெருமை கலைஞருடையது. அவருடைய தொண்டு, திறமை, ஆற்றல்தான். இன்னும் சொல்லப் போனால் அறிஞர் அண்ணா, கலைஞர் அவர்களிடத்திலே ஒப்படைத்த ஆற்றல், இந்த இயக்கத்தின் மூலமாக அவர் பெற்ற உணர்வு, அவரே தனது தலைமை உரையிலே சொன்னதைப் போல இளமையிலே இருந்து அவர் பெற்ற பயிற்சி, ஊக்கம், ஆர்வம்தான் தமிழுக்கு அந்த ஏற்றத்தைத் தந்திருக்கிறது. தமிழ் இந்த வாழ்வைப் பெற்றிருக்கிறது.

நம்முடைய வா.செ.குழந்தைசாமி அவர்கள் பேசுகிற போது சொன்னார்கள். ஒரு நிறைவான வெற்றி கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் தொடர வேண்டிய போராட்டம் இருக்கிறது என்றும் சொன்னார்கள். நமக்கு வெற்றி; ஆனால், நம்முடைய வெற்றியை நிலைநாட்ட விடுவார்களா ? என்பது வேறு பல எண்ணங்கள் காரணமாக குறுக்கீடு இருக்கிறது. உண்மையாகவே தமிழ் மொழி செம்மொழி என்ற பெயரை அது இயற்கையிலேயே பெற்றது.




"அமிழ்தமிழ்து" என்று உரைத்தாலே அதில் தமிழ் என்ற உச்சரிப்பு வருமென்று கவிஞர்கள் சொன்னார்கள். "தமிழ்தான் அமிழ்து, அமிழ்துதான் தமிழ்" "தமிழுக்கு அமிழ்தென்று பேர், இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்றெல்லாம் பாடினார்கள். அந்தத் தமிழ் தொடக்க காலத்திலேயிருந்து தமிழகத்திலே செந்தமிழ் என்றும் கொடுந்தமிழ் என்றும் விளங்கியது. என்ன காரணத்தாலே என்றால் இலக்கணத்தோடு நெருங்கி வருகிற நடை, ஒத்துப்போகிற நடை. ஒரு பொது நடை அது செந்தமிழ் நடை, ஒத்துப்போகாத நடை கொடுந்தமிழ் நடை என்று பிரிக்கப்பட்டது. ஒரு வகையிலே வட்டார மொழிகளாக வழங்குகிற மொழிகளெல்லாம் கொடுந்தமிழாக அந்தக் காலத்திலேயே சித்தரிக்கப்பட்டது.

ஆனால், இலக்கியத்தோடு தொடர்புடைய அந்த மொழி செந்தமிழாக ஏற்கப்பட்டது. ஆனால் செந்தமிழாக ஏற்கப்பட்டாலும் இந்திய மொழிகளோடு ஒரு மொழியாக எண்ணப்பட்ட காரணத்தால் பரிதிமாற் கலைஞர் விரும்பியதற்கு மாறாக இந்திய மொழிகளிலே ஒன்று தமிழ்; ஆகவே இது ஒரு வட்டார மொழி என்று கருதப்பட்ட

காரணத்தால் செம்மொழிச் சிறப்பு செந்தமிழுக்குக் கிடைக்கவில்லை.

எனவேதான், தமிழ்மொழியினுடைய உயர்வுக்காக நடைபெறுகிற போராட்டத்தில் பரிதிமாற்கலைஞர் தொடங்கி இந்த கலைஞர் முடித்து வைக்கிற இந்த போராட்டத்தில் தமிழ் செம்மொழி என்பதை மத்திய அரசு ஏற்று அறிவித்து உலகமெல்லாம் வரவேற்கக் கூடிய நிலை இருந்தாலும்கூட இந்த செம்மொழித் தமிழ். தமிழர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கின்ற மொழி. செம்மொழி என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலை நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி அளித்தாலும்கூட; இது வெறும் மொழியினுடைய வெற்றியல்ல. தமிழ் மொழியினுடைய தனி வெற்றி அல்ல. தமிழ் மொழியை தாய் மொழியாகப் பெற்ற சமூகத்தினுடைய வெற்றி.

தமிழ்மொழியே தாழ்ந்த மொழி. அதைப் பேசுகிற மக்கள் தாழ்ந்தவர்கள் என்று எண்ணப்பட்ட காலம் ஒன்று இருந்த காரணத்தால்தான். மேல்நாட்டு அறிஞர் ஜி.யு.போப் சொன்னார், "நாலடியாரும், திருவாசகமும், திருக்குறளும் போல அறநெறி உரைக்கின்ற நூல்களை தன்னுடைய தாய்மொழியாக பெற்றிருக்கிற தமிழ்நாட்டு மக்கள் எவ்வகையிலேயும் பிற மொழியைவிட தங்களுடைய தாய்மொழி தமிழ் என்று எண்ணி தலைகுனிந்து நடக்கத் தேவையில்லை. பிற மொழிகளை உயர்வென்று கருதி தமிழை தாழ்வென்று கருதி தலைகுனிந்து நடவாதீர்கள்'' என்று ஜி.யு.போப் நம்மவர்களுக்கு அறிவுரை சொல்லக்கூடிய அளவிற்கு அந்த தமிழ் அதைப் பேசுகிற மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தார்கள்.

**தொன்மை வளம் பெற்ற மொழி**

நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். உயர்ந்த கருத்துகளின் உறைவிடம் தமிழ். ஞான முதல் மொழி தமிழ்மொழி. மிகச்சிறந்த கருத்துகளுக்கு இருப்பிடமான மொழி தமிழ்மொழி. அந்த உயர்ந்த கருத்துகள் உலகத்திற்கு அறிய அறியத்தான் திருக்குறளை அறிந்து தான் தமிழை அறிந்தார்கள். தொல்காப்பியத்தை அறிந்துதான் தமிழின் தொன்மையை ஏற்றார்கள். மேல் நாட்டு அறிஞர்கள் எல்லாம் ஏற்றுக் கொள்வதற்கு அந்த இலக்கியங்கள் துணை நின்றன. அந்த இலக்கியங்கள் வழியாக தமிழனுடைய பெருமை உலகத்திலே நிலை நாட்டப்பட்டது.

அது ஞான முதல் மொழி. இந்திய மொழிகளிலேயே முதன்மையான மொழி என்பதைவிட தொன்மை வளம் பெற்ற மொழி. தனித்து இயங்கும் ஆற்றல் பெற்ற மொழி. இலக்கிய வளம் பெற்ற மொழி , இயல், இசை, கூத்து என மூன்றாக வளர்ந்த மொழி. இன்றும் வாழ்கிற மொழி. இலக்கிய செம்மையுடைய மொழி, Classical Language என்பதெல்லாம் என்றோ வாழ்ந்த மொழியாக இருக்க வேண்டும் என்ற ஒரு தவறான கருத்து தமிழ் மொழியை புறக்கணிக்கக்கூட காரணமாக இருந்தது. அதைப் பரிதிமாற் கலைஞர் சுட்டிக் காட்டுகிறார். இந்தத் தமிழ் வாழ்கிறது என்ற காரணத்தால், பேசுகிறோம் என்ற காரணத்தால் – இலக்கிய மொழியாக Classical Languageஆக ஏற்கப்படக்கூடாதா ? என்ற கேள்வியை அவர் கேட்கிறார். ஆகவே அப்படிப்பட்ட மொழி நம்முடைய தாய்மொழி. அதிலே உயர்ந்த கருத்துக்கள் எல்லாம் இடம் பெற்றிருக்கிறது.

நிறைவாக ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். ஒரு பாடல் நேற்றும்கூட இங்கே அறிஞர்களாலே மகாநாட்டிலே எடுத்துச் சொல்லப்பட்டது.

உண்டால் அம்மஇவ் உலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இவர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே

தமக்கென்று வாழாமல் சுயநல நோக்கத்தோடு வாழாமல் பிறக்கென்று வாழ்கிறவர்கள்; இந்திரனுடைய அமிழ்தம் கிடைத்தால்கூட தான் மட்டுமே உண்டு மகிழாமல் பலரோடும் பகுத்து உண்கிற மனப்பக்குவம் பெற்றவர்கள். பழி என்று சொன்னால் உலகமே கிடைத்தாலும் ஏற்காதவர்கள், புகழ் என்றால் உயிரும் தருபவர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

இன்னொரு பாடல் "யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று இந்த இரண்டு பாடல்களையும் இணைத்துப் பார்ப்பீர்களேயானால் எப்படிப்பட்ட உச்சமான நிலையில் தமிழன் வாழ்ந்தான்' பொது நோக்கத்தில் யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற பரந்த நோக்கத்தைக் கொண்டவன். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்தவன். தீதும் நன்றும் பிறர்தர வாராது என்று கருதியவன். இப்படி உயர்ந்த எண்ணங்கள் மலர்கிற சோலையாக நம்முடைய செம்மொழி தமிழ் விளங்குகிறது. தொடர்ந்து விளங்கும் வளரும் ! வாழும்! வாழ்த்துவோம்! வணக்கம்!

★

"தமிழனாகப் பிறந்து தமிழ்ச்சுவையுணர்ந்த
ஒருவன் வீடு பேற்றையுங் காதலியான்.
அவனுக்கு வீடுபேறு தமிழ்மொழி இன்பமேயாகும்".

**– திரு. வி. கலியாணசுந்தரனார்**

# முதல்வர் கலைஞரின் உதவியுடன்தான் கணினிகள் - செல்போன்களில் 'தமிழ் பாண்ட்' கொண்டுவரப்பட்டது

**கோவையில் 24.6.2010 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.தயாநிதி மாறன் அவர்கள் ஆற்றிய உரை.**

தமிழுக்கு அமுதென்று பேர். இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என பாரதிதாசன் பாடினார். அந்த முத்தமிழுக்கு, இனிய தமிழ் மொழிக்கு, இன்று செம்மொழி விழா. "யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பல நூற்றாண்டுகளுக்கு முன் பாடினார் தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனார். அதற்கு ஏற்ப நாடுகள், எல்லைகளைக் கடந்து செம்மொழி பேச்சு உலகம் முழுவதும் பரவியுள்ளது. இணையதளத்திலும் தமிழ் மொழி வளர்ச்சி அபாரமாக உள்ளது. உலகில் சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. ஆனாலும் பாதிக்கும் மேற்பட்ட மொழிகள் அழிந்து வருகின்றன. வாரம் 3 மொழிகள் அழிவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

ஆனால், நமது உயிருக்கு நிகரான தமிழ் மொழி, வளர்ந்து வருகிறது. இதற்குக் காரணம் முதல்வர் கலைஞர் அவர்கள். தமிழர்கள் எல்லா துறைகளிலும், தொழில் நிறுவனங்களிலும், தலைசிறந்து விளங்குகின்றனர். உதாரணமாக தகவல் தொழில்நுட்பத் துறையில், மைக்ரோ சாப்ட், ஆப்பிள் நிறுவனங்களில் தமிழர்கள் சிறப்பாக செயல்படுகின்றனர். தமிழ் மொழியை கணினியில் சேர்ப்பதில் நாம் சற்று பின்தங்கி விட்டோம். 1986இல் முதன் முதலில் முரசொலி பத்திரிகையில் ஆப்பிள் கம்ப்யூட்டரில் தமிழ் பாண்ட் கொண்டு வரப்பட்டது. அப்போது கலாநிதி மாறன் அங்கு பணிபுரிந்து வந்தார். 11 ஆண்டுகளுக்கு முன்பே, கம்ப்யூட்டரில் தமிழ் இணையதளம் கொண்டு வருவதற்கு பிள்ளையார் சுழி போட்டவர் முதல்வர் கலைஞர் அவர்கள்.

**தமிழ் இணையதள மாநாடு**

1999இல் முதன் முதலில் தமிழ் இணைய தள மாநாட்டை நடத்தியவர் முதல்வர் கலைஞர். தமிழ் கீபோர்டுகளை கொண்டு வந்தவரும் முதல்வர்தான். பேன்–99 என்ற கீபோர்டை உருவாக்கியவர் அவர்தான். சீப்பை ஒளித்து வைத்தால் திருமணம் நின்றுவிடுமா என்ற ஒரு பழமொழி உண்டு. அது தமிழ் இணைய தளத்தைப் பொறுத்தவரை உண்மையானது தான். 2000ஆம் ஆண்டு வரை தமிழ் பாண்டுகளை (Font) காசு கொடுத்துதான் வாங்க வேண்டியிருந்தது. நான், மத்தியில் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, முதல்வர் கலைஞர் உதவியுடன் தமிழ் பாண்டை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுத்தேன். 2001ஆம் ஆண்டு முதல் கம்ப்யூட்டர்கள், மொபைல் போன்களில் தமிழ் பாண்ட் கொண்டுவரப்பட்டது.



செல்போன்கள் இல்லாமல் யாரும் இருக்க முடியாது என்ற நிலை இப்போது உள்ளது. அந்த செல்போன்களில், தமிழ் பாண்ட் கொண்டு வந்ததன் மூலம் தமிழ் வளர்ச்சிக்கு அது பெரிதும் உதவியது. இங்கு தமிழ் செம்மொழி மாநாட்டுக்கு இணையாக தமிழ் இணையதள மாநாடும் நடக்கிறது.

முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, இந்த இணையதள மாநாடு மூலமாக ஒரு வேண்டுகோள். தமிழ்நாட்டில் எந்தக் கம்ப்யூட்டர் வாங்கினாலும் அதில் தமிழ் பாண்ட் இருக்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். ஆங்கிலப் புலமை உள்ளவர்களால் மட்டுமே கம்ப்யூட்டர்களை இயக்க முடியும் என்ற நிலை உள்ளது. அதை மாற்றி, தமிழ் புலமை உள்ளவர்களும் கம்ப்யூட்டரை சிறப்பாக இயக்க முடியும் என்ற நிலையை இந்த இணைய தளம் மாநாடு மூலம் கொண்டு வர முடியும். ★

*தமிழ்மொழி செய்யுள் அமைப்பில் கிரேக்க மொழியினையும், இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும் வெல்ல வல்லது.*

**– வின்சுலோ**

# செயின்ட் ஜார்ஜ் கோட்டை இனி செம்மொழித் தலைமை அலுவலகம் என்று செயல்படும்

**கோவையில் 25.6.2010 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" சிறப்புக் கருத்தரங்கிற்கு தலைமை வகித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை.**

ஏறத்தாழ நான்கரை மணிநேரத்திற்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு அரிய கருத்துக்களை அள்ளி அள்ளி வழங்கியுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களே! உங்கள் அனைவருக்கும் என் சார்பாகவும் இந்த மாநாட்டை நடத்துகின்ற இந்த அரசின் சார்பாகவும் இதயமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த மூன்று நாட்களாக கோவை திருநகரில் மக்கள் வெள்ளமெனத் திரண்டு எங்கே சென்றாலும், தமிழர், தமிழர், தமிழ் முழக்கமிடுகின்றவர்கள் என்ற அளவிலே நிலை ஏற்பட்டு நாளையும், நாளை மறுநாளும் நடைபெறுகின்ற கருத்தரங்கங்களுக்கு, ஆய்வரங்கங்களுக்குப் பிறகு 27ஆம் தேதி இதே அரங்கத்தில் நடைபெறுகின்ற இந்த மாநாட்டினுடைய நிறைவு விழாவில் நான் நிரம்ப பேச இருக்கின்றேன். இப்படிச் சொல்வதால் பொங்கி வழிகின்ற மக்கள் கூட்டத்தில் இந்த மாநாட்டின் வாயிலாக இன்னென்ன காரியங்களிலே நாம் ஈடுபட இருக்கிறோம். அந்த காரியங்களுக்கு எல்லாம் நீங்கள் எப்படி கை கொடுக்க வேண்டும், எப்படி நீங்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்பதை வேண்டுகோளாக விடுக்க இருக்கிறேன். ஆணையிட்டுப் பழக்கமில்லாதவன் நான்.




இன்றைக்குப் பேச மாட்டேன் என்று பொருள் அல்ல. பேசுவேன், ஆனாலும் அளவோடு.

இங்கே ஆணைகள் பல இடப்பட்டன. அந்த ஆணைகளை எல்லாம் எப்படி நிறைவேற்றுவது என்பதைச் சிந்திப்பதற்கு நேரம் எடுத்துக் கொண்டு, நிறைவு நாளன்று பல்லாயிரக்கணக்கில் – இதைவிட இன்னும் அதிகமாகப் அமர்ந்திருக்கின்ற பல்லாயிரக்கணக்கான

அதனால் நீங்கள் சொன்ன கருத்துகளை, எடுத்துரைத்த ஆலோசனைகளை தமிழை வாழ வைக்க, தமிழுக்கு மேலும் வலிவும், பொலிவும் சேர்க்க என்னென்ன செயல்களில் ஈடுபட வேண்டுமோ அவற்றையெல்லாம் இங்கே வீற்றிருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் இட்ட ஆணைகளாக இங்கே அமர்ந்திருக்கின்ற பல்லாயிரக்கணக்கான

தமிழர்களாகிய நீங்கள் தந்துள்ள கட்டளைகளாக ஏற்று பணியாற்றுவோம், தொண்டு புரிவோம் என்பதை என்னுடைய பேச்சின் முன்னுரையாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

**"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்"**

இன்றைய தினம் இந்த மாநாட்டினுடைய கருத்தரங்கின் தலைப்பாக அமைந்திருப்பது "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்பதாகும். இப்போது "எங்கும் தமிழாக'' இருக்கிறதா அல்லது "ஏங்கும் தமிழாக'' இருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். இங்கே பேசிய தலைவர்களுடைய பேச்சிலேயிருந்து இதை நான் வடிவமைத்து உங்களுக்குக் கூற வேண்டிய கட்டாயத்திற்கு வந்துள்ளேன்.

முதலில் இங்கே பேசிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் – ஏறத்தாழ 20க்கு மேற்பட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அமர்ந்திருக்கின்ற காட்சிகளை நீங்கள் எல்லாம் பார்த்து, என்ன மறுபடியும் பழைய காலத்து கூட்டணியைப் பார்ப்பது போல் இருக்கிறதே என்றுகூட சிலர் வியந்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன். கூட்டணி கலைந்தாலும், சிதைந்தாலும், பிரிந்தாலும் எல்லா கட்சிகளையும் மீண்டும் சேர்க்கக்கூடிய ஒரு "சக்தி'' என்னிடத்திலே இருக்கிறது. அது ஒரு மந்திர சக்தி அல்ல, மாயா சக்தி அல்ல, அந்த சக்திகள் எல்லாம் நான் கற்ற, நான் பால் குடித்த "தமிழ்'' என்கின்ற சக்தி. அதை நீங்களும் உணர்ந்திருக்கின்ற காரணத்தால் தான் இங்கே கடந்த இரண்டு மூன்று நாட்களாக மேலும் இரண்டு மூன்று நாட்களுக்கும் உங்களுடைய வேலைகளை, அலுவல்களையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்தி வைத்துவிட்டு தமிழை வாழ வைக்க, ஆள வைக்க, தமிழுக்கு காப்பளிக்க என்னென்ன வழிமுறைகள் இந்த மாநாட்டிலே கூறப்படுகின்றது என்பதைக் கேட்டு அவ்வாறு நடப்போம் என்று காத்திருக்கின்றீர்கள்.

எனக்கு இந்த மாநாட்டிலே மிகுந்த மகிழ்ச்சி. தமிழகத்திலே உள்ள நம்முடைய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டது மாத்திரமல்ல, கலந்து கொள்வார்களோ? மாட்டார்களோ? என்ற எண்ணத்தோடு டெல்லியிலே இருந்த நம்முடைய சி.பி.எம். கட்சியினுடைய தலைவரும் சி.பி.ஐ. கட்சியினுடைய தலைவரும் வருவார்களோ, அதை தமிழ்நாட்டு அளவோடு நிறுத்திக் கொள்ளலாமா என்று எண்ணியது உண்டு.

ஆனால் தட்டியவுடன் திறக்கப்படும் என்பதைப்போல் கேட்டவுடன் ஒத்துக் கொண்டு நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களிலே ஒருவரான நண்பர் ராஜா அவர்களும், என்னுடைய பழைய நண்பரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களில் ஒருவரான யெச்சூரி அவர்களும் மிகுந்த சிரமத்திற்கு இடையே இன்று பயணம் செய்து இந்த மாநாட்டிலே வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். "இரண்டு பேரை மட்டுமே குறிப்பிட்டீர்களே மற்ற நாங்கள் எல்லாம் வரவில்லையா?'' என்று யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

**தமிழுக்கு நன்றி**

ஏனென்றால் நான் சந்தேகத்திலே இருந்த; வருவார்களா, மாட்டார்களா என்று கேள்விக்குறியாக இருந்த இரு கட்சிகளுடைய தலைவர்கள். இங்கே வந்தார்கள் என்றால் நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்பவில்லை. எங்களை இன்றைக்கு இந்த மேடையிலே ஒன்றுபடச் செய்த தமிழ்த் தாய்க்கு நன்றி தெரிவிக்க, தமிழுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். மொழி உணர்வோடு ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த நாம்; எந்த மொழிக் குடும்பத்திற்குரியவர்களோ அந்த மொழிக்கு தரப்படவேண்டிய தகுதிகளை தமிழ்நாட்டிலும் சரி, வடநாட்டிலும் சரி, டெல்லியிலும் சரி, சென்னையிலும் சரி; தந்தாக வேண்டும், அதற்கென அறப்போராட்டத்தினை நாம் அமைதியாக நடத்திட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாநாடு.

இங்கே அருமை நண்பர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் தங்கபாலு பேசும்போது, பத்துக் கோரிக்கைகளை வைத்து இவைகளையெல்லாம் நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டார். எனக்கு ஒரு சந்தேகம். என்னையே நான் ஒருமுறை சற்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டேன். பக்கத்திலே இருந்த நம்முடைய தமிழர் தலைவர் வீரமணி அவர்களிடம் கூட, நான்தானா பாருங்கள் என்றுகூடச் சொன்னேன். என்ன என்று கேட்டார். தங்கபாலு நமக்கு கோரிக்கை வைக்கிறாரே, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கோரிக்கை வைக்க வேண்டிய இடத்தை விட்டுவிட்டு, இங்கே வைக்கிறார் என்றால் எதை எந்த இடத்திலே வைத்தால் நிறைவேறும் என்று அவருக்குத் தெரிந்திருக்கிறது பாருங்கள் என்று நான் அவரிடத்திலே சொல்ல, அவரும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். நான் இதனை வேடிக்கைக்காக சொல்லவில்லை, உண்மையிலேயே வடபுலத்திலே உள்ளவர்கள் அங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நாட்டை ஆளுகின்ற தகுதி படைத்தவர்கள், ஆள தகுதி படைத்தவர்கள் – அவர்களுக்கு எத்தனையோ அலுவல்கள், எத்தனையோ நெருக்கடிகள் இருக்கின்ற காலகட்டத்தில், நம்முடைய பிரச்சினைகளை உடனடியாக, முறையிட்ட மாத்திரத்தில் நிறைவேற்றுவது என்பது இயலாத காரியம்தான்.

ஏனென்றால், இந்தியாவிலே தமிழ் மொழி மாத்திரமல்ல, எத்தனையோ மொழிகளைச் சார்ந்த மக்கள், அந்த மக்களுக்காக இருக்கின்ற மாநிலங்கள்

அவர்களுக்கென அமைந்துள்ள நிருவாகங்கள், இந்த நிருவாகத்தில் ஏற்படுகின்ற குழப்பங்கள் இவைகளை யெல்லாம் கவனிக்க வேண்டிய இடத்திலேயுள்ள – ஆளுகின்ற டெல்லிப் பட்டினத்திலே உள்ளவர்களுக்கு நாம் சொன்ன உடனே உதாரணமாக உயர் நீதிமன்றத்திலே தமிழ் வேண்டும் என்று ஒரு தந்தி கொடுத்தால், மறுநாளே இந்தா, ஏற்றுக் கொள் என்று சொல்லுகின்ற அளவிற்கு அவர்கள் தயாராக இல்லாததற்குக் காரணம் மனம் இல்லை என்றல்ல, அவர்களுக்கு அவ்வளவு அலுவல், அவ்வளவு நெருக்கடி. ஆகவே அவைகளையெல்லாம் தாண்டிக் கொண்டுதான் நம்மை கவனிக்க வேண்டியிருக்கிறது.

அப்படி தாண்டிக் கொண்டு இங்கே வருகின்ற அந்த கஷ்டத்தை போக்குவதற்காகத் தான் நம்முடைய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் இங்கே குறிப்பிட்டுள்ளதைப்போல அவர்களும் அதை உணர்த்த வேண்டிய இடத்திலே உணர்த்த வேண்டும்; இங்கே இந்த மாநாட்டிலே – என்னிடத்திலே உணர்த்தி தமிழ்நாடு அரசு இதையெல்லாம் சாதிக்க வேண்டும் என்று கூறுகிறார் என்றால், அதற்கு என்ன பொருள் ? மத்திய அரசு செய்ய முடியாது என்று பொருள் அல்ல, "நீங்கள் செய்வதற்கு – தமிழ்நாடு அரசு துணையாக இருக்கும் – அவர்களுக்கு நாங்களும் துணையாக இருப்போம்" என்று குறிப்பிடுகின்ற அந்த வகையிலேதான் அந்த கோரிக்கையை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

**பத்து கோரிக்கையல்ல பத்து கட்டளைகளை நிறைவேற்றக் கூடியவன்**

10 கோரிக்கை என்றார், தமிழுக்காக என்றால் – 10 கோரிக்கையல்ல, 10 கட்டளைகளை நிறைவேற்றக் கூடியவன் நான் என்பதை அவர் அறியாதவர் அல்ல. "உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு" என்று முழங்கிய தலைவர்களுடைய வழிவந்தவர்கள் நாம், செய்து காட்டியவர்கள் நாம். அதை வரலாறாக ஆக்கி மகிழ்ந்தவர்கள் நாம், அந்த வீரவரலாற்றுக்கு உரியவர்கள் நாம். எனவேதான் தமிழகத்திலே ஏற்படவேண்டிய மறுமலர்ச்சி இந்த ஊர்வலத்தால், மாநாட்டால், பெரும் கூட்டத்தால் இன்றைக்கு ஏறத்தாழ 20 அல்லது 22 இடங்களில் நடைபெறுகின்ற அரங்குகளால் – அந்த அரங்குகளில் நிகழ்கின்ற அமர்வுகளால் – அந்த அமர்வுகளில் நடைபெறுகின்ற ஆய்வுரைகளால் முடிந்து விடக் கூடியது அல்ல. நாம் ஒவ்வொருவரும் நம்முடைய மொழிக்காக நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும், அதற்கு முதல் கட்டமாகத்தான் இங்கே பேசிய சில தலைவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல இந்த மாநாட்டில் குழுமியிருக்கின்ற நீங்களெல்லாம் அந்த பயிற்சியைப் பெற வேண்டும், அந்த பயிற்சியைப் பெற இன்று முதல் உங்களை ஆயத்தமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

**தமிழிலேயே பேசவேண்டும்**

தமிழிலே தான் நாம் பேசுவது, ஒருவருக்கொருவர் உரையாடுவது என்று ஒரு முடிவு எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த முடிவை நான் எடுத்துக் கொண்டால் அது ஒன்றும் ஆச்சரியமல்ல, ஏனென்றால் எனக்கு தமிழைத் தவிர ஆங்கிலம் போன்ற மற்ற மொழிகளிலே அவ்வளவு பயிற்சி இல்லை, "இவருக்கு ஆங்கிலம் தெரியாது ஆகவேதான் தமிழிலே பேச வேண்டும் என்று சொல்லுகிறார்'' என்று சுருக்கமாக சொல்லிவிட்டு போய்விடலாம். ஆனால் என்னைவிட அதிகம் ஆங்கிலம் தெரிந்தவர்கள், ஆங்கிலத்தில் புலமை வாய்ந்தவர்கள், பல மொழி பயின்றவர்கள், தமிழைத் தாய் மொழியாக கொண்டிருந்தாலும் கூட பிற மொழிகளில் பயிற்சிப் பெற்றவர்கள், பிற மொழி வல்லுநர்களாக இருந்தவர்கள் கூட திரு.வி.க. போன்றவர்கள், நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றவர்கள் – இவர்களெல்லாம் ஆங்கிலம் பயிலாதவர்கள் அல்ல, ஆங்கிலம் பயின்றவர்கள்தான், ஆங்கிலப் புலமை வாய்ந்தவர்கள்தான், தமிழ் வளர்ச்சிக்கு இந்த வழிமுறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழில் பேச வேண்டும், தமிழில் பயிற்சி பெற வேண்டும், வீட்டில் தமிழ் தவழ வேண்டும், குழந்தை தவழ்ந்தால் போதாது, தமிழும் தவழ்ந்தாக வேண்டும் என்று அவர்கள் பிற மொழி பலவற்றை பயின்றவர்கள் கூட தமிழர்கள் என்றால்; அந்த தமிழர்கள் தமிழர்களாக இருக்க வேண்டும் என்பதை நான் கூறியதைப்போல் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், இந்த நூற்றாண்டின் துவக்கத்தில், ஆங்கிலத்தைத் தவிர்த்து விட்டு தமிழிலே பேச வேண்டும், தமிழிலே எழுத வேண்டும், தமிழிலே அச்சடிக்க வேண்டும் என்றெல்லாம் விரும்பிய நேரத்தில் பல விபரீதங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அதைக் காரணமாகக் காட்டி கூட இப்படியெல்லாம் தமிழில் சொன்னால் விபரீதங்கள் ஏற்படுகின்றது என்று நமக்கு சுட்டிக் காட்டியவர்களெல்லாம் உண்டு.

ஒரு இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தமிழ்ப் பத்திரிக்கையில் ஒரு செய்தி வந்தது. தமிழ்நாட்டில் பெரும் மழை பொழிந்து, வெள்ளம் பெருக்கெடுத்து எல்லாப் பகுதிகளிலும் உள்ள சாலைகள், இரயில்வே லைன்கள் அனைத்தும் வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டதை, ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிலே வெளியிட்டார்கள். என்ன வெளியிட்டார்கள் என்றால் "On account of heavy rain,slippers were washed away" என்று இருந்த ஆங்கிலச் செய்தியை தமிழ்ப் பத்திரிகையிலே எப்படி வெளியிட்டார்கள் என்றால், பெரும் மழையின் காரணமாக தண்டவாளத்திலே படுத்திருந்த – தூங்கிக் கொண்டிருந்த மக்கள் அடித்துச் செல்லப்பட்டார்கள் என்று வெளியிட்டிருந்தார்கள். ஆனால் உண்மையிலேயே ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி அது அல்ல.

"On account of heavy rain slippers were washed away" என்பதில் "ஸ்லீப்பர்ஸ்'' என்பதை தூங்கிக் கொண்டிருந்தவர்கள் என்று மொழிபெயர்த்து இரயில்வே லயனில் படுத்திருந்தவர்கள் செத்தார்கள் என்று செய்தி வெளியிட்டார்கள்.

ஆனால் உண்மை அதுவல்ல இறந்தவர்கள் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் அல்ல; பெரும் மழையில் இரயில்வேயில் தண்டவாளத்திற்கு கீழேயுள்ள சிலீப்பர்கள் என்ற மரப் பலகைகள் அடித்துச் செல்லப்பட்டன என்பதை தூங்கிக் கொண்டிருந்த மக்கள் அடித்துச் செல்லப்பட்டார்கள் என்று மொழிபெயர்த் தார்கள். அப்படி மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் தேவையில்லை. ஒழுங்கான மொழிபெயர்ப்புத் தமிழ் தான் நமக்கு தேவை. அதற்காக நான் சொல்லுகிறேன் என்பதற்காக இந்த மாநாட்டிலே தலைவர்கள் தெரிவித்த கருத்துகளை நாம் ஏற்க வேண்டும் என்பதற்காக இந்த மாதிரி மொழிபெயர்ப்பில் யாரும் இறங்காமல், சரியான மொழிபெயர்ப்போடு தமிழை வளர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சங்க காலத்திலேயிருந்து இன்று வரையிலே தமிழ்; பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாகியிருக்கிறது. மூவேந்தர்களுடைய ஆட்சியில் தமிழ் ஆட்சி மொழியாகவும், நிருவாக மொழியாகவும் விளங்கியதால் சிறந்து விளங்கியது. அருமையான இலக்கியங்கள் உருவாகி இன்றளவும் தமிழின் தனித்தன்மையை உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. அந்த இலக்கியங்கள் தான் சங்க இலக்கியங்கள் என்றும், இடைக்கால இலக்கியங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

ஆனால் சங்க காலத்திற்குப் பின் வந்த ஒரு ஆட்சி – களப்பிரர்களுடைய ஆட்சி. அவர்கள் தமிழை விடுத்து பாலி மொழியை ஆதரித்த காரணத்தால், அந்த ஆட்சியே இருண்ட கால ஆட்சி என்று வர்ணிக்கப்பட்டது. அவர்கள் ஆட்சியில் தமிழுக்கு வாழ்வில்லாமல் போயிற்று. தமிழும் இருளில் தள்ளப்பட்டது

ஆறு, ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட பல்லவர்கள் பிராக்கிருத மொழிக்கும் சமஸ்கிருத மொழிக்கும் ஆதரவு தந்த காரணத்தால் தமிழின் வளர்ச்சி தடைப்பட்டது. அவர்களைத் தொடர்ந்து ஒன்பதாம் நூற்றாண்டு அளவில் தஞ்சைப் பகுதியில் இடைக்காலச் சோழர் ஆட்சியும், மதுரைப் பகுதியில் பாண்டியர் ஆட்சியும் தோன்றிய பிறகுதான், பதினான்காம் நூற்றாண்டு வரையிலே தமிழ் மக்களுக்கு நல்லாட்சிகள் வழங்கப்பட்டன. பதினான்காம் நூற்றாண் டிற்குப் பிறகு இடைக்காலத்திலே இருபதாம் நூற்றாண்டு வரையிலே தமிழ் மொழி சீரற்றுப் போயிற்று. அதையேதான் இன்றைக்கு நாம் நாட்டிலே கவலையோடு காணுகின்ற ஒரு காட்சியாக இருப்பதை அறியமுடிகிறது.

### மகிழ்ச்சியான செய்தி

இந்த நிலையை மாற்றத்தான் பரிதிமாற் கலைஞர் போன்றவர்கள் எப்படியாவது இந்த மொழிக்கு உரிய தகுதியான செம்மொழி என்ற பெயரை உரித்தாக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார்கள். பரிதிமாற் கலைஞர் பார்ப்பனர்தான், சூரிய நாராயண சாஸ்திரிதான்; அவர் தன்னுடைய பெயரை பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக் கொள்ளுகின்ற அளவிற்கு தமிழ் உணர்வு கொண்டவராக, அந்த உணர்வை வெளிப்படுத்துபவராக, அந்த உணர்வை உரிய இடத்திலே சொல்பவராக இருந்த காரணத்தாலும், அவரைத் தொடர்ந்து கரந்தை தமிழ்ச் சங்கத்தினுடைய புலவர் பெருமக்களும், இன்றளவும் உள்ள புலவர்களும் தொடர்ந்து போர்க் குரல் கொடுத்த காரணத்தாலும் இன்றைக்கு நாம் ஆட்சிப் பொறுப்பை இங்கே ஏற்று, அங்கே ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களோடு, இருப்பவர்களோடு கொண்டுள்ள உறவின் காரணமாக, எடுத்துச் சொல்லவேண்டியதை, எடுத்துச் சொல்ல வேண்டிய முறையில் எடுத்துச் சொல்லி செம்மொழி என்கின்ற அந்தத் தகுதியை தமிழுக்குப் பெற்றிருக்கின்றோம்.

அதைப்பற்றி எனக்கு முன்னால் இங்கே பேசியவர்கள் சொன்னார்கள் செம்மொழித் தகுதியை நான் பெற்றேன் என்பதையும் நம்முடைய தங்கபாலு சொன்னார், சோனியா காந்தி அவர்கள் அப்போது எழுதிய கடிதத்தையும் இங்கே குறிப்பிட்டார். நான் அந்தக் கடிதத்தை திருச்சியிலே நடைபெற்ற ஒரு மாநாட்டிலே எடுத்துக்காட்டி, படித்துக் காட்டிச் சொன்னேன். இது ஒரு கடிதமாக நான் வைத்துக் காப்பாற்றக் கூடியதல்ல. என்னுடைய கொள்ளுப் பெயரன், கொள்ளுப் பெயர்த்திகள் – இவர்கள் எல்லாம் எடுத்துப் படித்து என்னுடைய தாத்தா காலத்திலே வைக்கப்பட்ட செப்பேடு என்று சொல்லுகின்ற அளவிற்கு இது புகழ் பெற்றக் கடிதம் என்று அப்போது நான் சொன்னேன். சொன்னதற்குக் காரணம் அந்த அளவிற்கு செம்மொழித் தகுதி தமிழுக்குக் கிடைக்காது என்ற நிலை! அந்த நிலையை மாற்றிய பெருமை எனக்கல்ல; தமிழர்களுக்கு மாத்திரமல்ல; அந்த பெருமையை நமக்கு வழங்கியது நம்முடைய உணர்வு என்றாலும் கூட, நம்முடைய இடைவிடாத போராட்டம் என்றாலும் கூட, அதை வழங்க முடிவு செய்து, அது வழங்கப்பட்டது என்று அறிவித்து, அறிவித்த பிறகும் இந்த செம்மொழிக்கான அலுவலகம் தமிழகத்திலேதான் இருக்க வேண்டும், இப்போது கருநாடகத்திலே, மைசூரிலே இருக்கின்றது. இதை மாற்றி நீங்கள் தரவேண்டும் என்று கேட்ட நேரத்தில் அதற்கும் ஒப்புதல் அளித்து அந்த அலுவலகத்தை இன்றைக்கு தமிழகத்திற்கே திருப்பித் தந்து விட்டார்கள். அது மைசூரிலே இருந்த அலுவலகம். அந்த அலுவலகம் அங்கே இருந்து மாற்றப்பட்டு, தமிழ்நாட்டிற்கு, சென்னை மாநகரத்திற்கு அந்த அலுவலகம் வந்துவிட்டது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. அந்த அலுவலகத்தை இங்கே சென்னையிலே வைக்க வேண்டும் என்பதற்கு ஒரு இடம் கிடைக்கவில்லை. அதற்காக சென்னையிலே இருந்து ஒரு பத்து கிலோமீட்டர் தூரத்திலே உள்ள ஒரு பகுதியில் ஒரு இடத்தை வாங்கி அந்த இடத்திலே புதிய கட்டடங்களை எழுப்பிக் கொண்டிருக்கிறோம். அதற்கு இடையிலே அதை ஒரு சிறிய இடத்தில் வாடகைக்கு பிடித்து அதை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இதற்கு இடையில் ஒரு மகிழ்ச்சியான செய்தி உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்த அரசின் சார்பாக எடுக்கப்பட்டுள்ள ஒரு செய்தியை உங்களுக்குச் சொல்கின்றேன். செம்மொழி, இவ்வளவு பாடுபட்டு நமக்குக் கிடைத்த பெரிய வெற்றி. அந்த வெற்றிக்குரிய செம்மொழி அலுவலகத்தை, தலைமை அலுவலகத்தை ஏதோ ஒரு வாடகை இடத்திலே வைத்திருப்பதா, ஏதோ 'பாலாறு இல்லம்' என்று இருந்த விடுதியிலே வைத்திருப்பதா என்று யோசித்து இப்போது நாம் புதிய சட்டசபைக்கு, தலைமைச் செயலகத்திற்கு கட்டடங்கள் கட்டியபிறகு, புதிய சட்டசபையை அங்கே ஆரம்பித்த பிறகு, பழைய சட்டசபை இருந்த கோட்டையையே இந்த செம்மொழித் தமிழ் அலுவலகத்திற்கு என்று நாம் முடிவு செய்திருக்கின்றோம்.

நீங்கள் சென்னைக்கு வந்தால், கோட்டைக்கு வந்தால், அங்கு செம்மொழி அலுவலகத்தைக் காணலாம், செம்மொழி அலுவலகம் செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே அமைகிறது. அதுதான் செம்மொழி அலுவலகம், அந்த அலுவலகத்திலே செம்மொழி ஆய்வுக்கான பல்லாயிரக் கணக்கான புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டு – நான் சென்னைக்குத் திரும்புவதற்குள்ளாக அந்த வேலைகூட முடிந்திருக்கும். அவ்வளவு புத்தகங்களும் வந்து இறங்கிவிட்டன. அவைகள் எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டு இனி செயின்ட் ஜார்ஜ் கோட்டை ''செம்மொழித் தலைமை அலுவலகம்'' என்று இருக்கும் .

நான் அமர்ந்து வேலை பார்த்த முதலமைச்சர் அலுவலகம் – 'செம்மொழித் தலைமை அலுவலகத்தின் தலைவருடைய அலுவலகம்' என்று முதலமைச்சருடைய அலுவலகம் இனிமேல் மாற்றப்பட்டிருக்கும்.

ஆகவே, இவைகளை எல்லாம் சொல்வதற்குக் காரணம் நீங்கள் திடீரென்று சென்னைக்கு வந்து என்ன எல்லாம் ஒரே மாற்றமாக இருக்கிறதே என்று ஆச்சரியப்படக் கூடாது என்பதற்காக முதலிலேயே இந்த மாநாட்டிலே இந்த விவரங்களை எல்லாம் சொல்லி வைக்கின்றேன்.

**வலிவையும் பொலிவையும் சேர்ப்போம்**

இந்த விவரங்களையெல்லாம் சொல்லி வைப்பதற்குக் காரணம், நாம் செம்மொழியைப் பெற்றிருப்பது மாத்திரம் அல்ல; அது வளர, வாழ, வடிவம் பெறத் தேவையான அடித்தளத்தையும் அமைத்துக் கொண்டிருக்கிறோம், அமைத்து விட்டோம், இனியும் அமைப்போம்; அந்த செம்மொழிக்கு எந்த அளவிற்கு வளத்தைச் சேர்க்க முடியுமோ, வலிவைச் சேர்க்க முடியுமோ, பொலிவைச் சேர்க்க முடியுமோ அவ்வளவையும் சேர்ப்போம், செம்மொழி என்ற பெயரை வாங்கிவிட்டால் மாத்திரம் போதாது, அதைத்தான் இங்கே நடைபெறுகின்ற ஆய்வு அரங்கங்களில், கருத்தரங்கங்களில் இங்கே பேசிய தலைவர்களுடைய பேச்சுக்களில் நீங்கள் கண்டீர்கள்.

மொழிப் பெயரை மாற்றி விட்டால் மாத்திரம் போதாது, செம்மொழி என்கின்ற வைர கிரீடத்தை வைத்துவிட்டால் மாத்திரம் போதாது; இந்த மொழிக்கு உரியவர்கள்; எதிர்காலத்திலே உலகமெல்லாம் தங்களுடைய செல்வாக்கை, உலகமெல்லாம் தங்களுடைய புகழைப் பரப்புகின்ற அளவிற்கு – இங்கே உள்ள தமிழர்கள் வேலைவாய்ப்புகளை பெற்று, கணினி உலகத்தில் அவர்கள் களிப்போடு நடைபோடுவதற்கு வழிவகை வேண்டும் என்றெல்லாம் இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றியெல்லாம் நாம் சிந்திக்காமல் இல்லை. சிந்திக்கிறோம்.

இந்த மாநாட்டில் நீங்கள் கட்டளையிடவும், அந்த கட்டளைகளை சிரமேற்கொண்டு நிறைவேற்றவும் தான் நாங்கள் இன்றைக்கு உங்களையெல்லாம் சந்திக்கின்றோமேயல்லாமல், நாங்கள் ஏதோ உங்களுக்குச் சொல்லுகிறோம், இதன்படி நடந்து செல்லுங்கள் என்று அல்ல. நிச்சயமாக கடந்த மூன்று நாட்களாக நீங்கள் தந்துள்ள யோசனைகளை, அறிவுரைகளை, கட்டளைகளை அனைத்தையும் ஆணைகளாக ஏற்று நாளை மறுநாள் நடைபெறுகின்ற இந்த மாநாட்டினுடைய நிறைவு உரை அரங்கத்தில் நம்முடைய மத்திய நிதி அமைச்சர் வரவிருக்கிறார். மத்திய உள்துறை அமைச்சரும் வர இருக்கிறார். அவர்கள் கலந்து கொள்கின்ற அந்த மாநாட்டில் இந்த மாநாட்டிற்கான தபால்தலை வெளியிடப்படவிருக்கிறது. அந்த நிகழ்ச்சிகளோடு நானும் நிறைவுரை ஆற்ற இருக்கிறேன்.

என்னுடைய உள்ளத்திலே நான்கு நாட்களாக பதிந்திருக்கின்ற எண்ணங்களையெல்லாம், இனிப்பான எண்ணங்களையெல்லாம், உணர்வுகளையெல்லாம் ஒன்று திரட்டி வருங்காலத்திலே இந்த செம்மொழி மாநாட்டின் மூலமாகத் தமிழர்களுக்கு, தமிழ் மக்களுக்கு தமிழ் மொழிக்கு என்னென்ன செய்யப் போகின்றோம். ஆக்கப்பூர்வமாக என்னென்ன காரியங்களை செய்யப் போகிறோம். அரசின் சார்பாகவும் உங்களுடைய ஆதரவோடும் என்னென்ன செய்யப் போகின்றோம் என்பதையெல்லாம் நிறைவு விழாவிலே நான் வெளியிட இருக்கின்றேன். கிட்டத்தட்ட ஒரு ''பட்ஜெட்'' படிப்பது போல அந்த நிறைவு விழாவிலே பல செய்திகளைச் சொல்ல இருக்கின்றேன். அங்கே சந்திக்கின்றேன் என்று கூறி விடைபெறுகிறேன்.

★ ★ ★

# செம்மொழி மாநாட்டை வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடாக நடத்தும் முதலமைச்சர் கலைஞருக்கு மனம் நிறைந்த நன்றி!

## கோவையில் 25.6.2010 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் திரு. ஜி.கே. வாசன் அவர்கள் ஆற்றிய உரை.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஒரு பகுதியாக புத்தகக் கண்காட்சி இங்கே நடைபெறுகிறது. இப்புத்தகக் கண்காட்சி தொடக்க விழா நிகழ்ச்சியில் முன்னிலை ஏற்று பங்கேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். பெருமையடைகிறேன்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை கோவை மாநகரில் சீரோடும், சிறப்போடும், வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாடாக நடத்துவதற்கு முன்னின்று வழிகாட்டி வருபவர், மாநாட்டின் வெற்றிக்கு முழுமுதல் காரணமான தமிழக முதல்வர் ஐயா கலைஞர் அவர்களுக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும், தமிழகத்துப் பெருமக்களின் சார்பாகவும், மனம் நிறைந்த பாராட்டுதல்களையும், நெஞ்சு நிறைந்த நன்றியையும், இந்த இனிய வேளையில் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்தப் புத்தகக் கண்காட்சியை, BAPASI என்று அழைக்கப்படும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தனது அரிய, பெரிய முயற்சியால் அற்புதமாக ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்தக் கண்காட்சியில் 136 புத்தக விற்பனை அரங்குகள், மையங்கள் உள்ளன.

இங்கு தமிழ் மொழியின் வரலாறு, இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம் ஆகிய அனைத்தையும் விளக்குகின்ற அரிய நூல்கள் இருப்பதாக அறிகிறேன்.

நல்ல புத்தகங்களை தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும் தேடி அலையாமல் அவர்கள் கூடியிருக்கின்ற இந்த மாநாட்டிலேயே, இப்புத்தகங்களை அவர்கள் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்துவது ஓர் அரிய சாதனை.

இந்த நல்ல முயற்சியை சிறப்பாகச் செய்து முடித்திருக்கும், BAPASI அமைப்பையும், அதன் நிருவாகிகளையும், பதிப்பாளர்களையும், விற்பனையாளர்களையும், நான் அன்போடு பாராட்டுகிறேன்.

தமிழ் இனிமையானது, எளிமையானது, இலக்கிய வளம் கொண்டது, இலக்கண நயம் மிகுந்தது, தொன்மையானது, நவீன இலக்கியங்களை வளர்ப்பது, தமிழர் தம் வாழ்விற்கு ஊனாகவும், உயிராகவும் விளங்குவது.

ஆகவேதான் யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் – எனப் பாடினார் மகாகவி பாரதியார்.

இப்படி எல்லாச் சிறப்பும் மிக்க தமிழ்மொழியை டாக்டர்.மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, அன்னை சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலோடு, தமிழக முதல்வர் ஐயா கலைஞர் அவர்களின் நல்லாதரவோடு செம்மொழி என அறிவித்தது.

அதன் மூலம் தமிழ்ப் பெருமக்களின் நியாயமான நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றியது.

அதற்காக இந்த நல்ல வேளையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு, நமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு சிறந்த ஏற்பாடு செய்து நல்ல முறையில் நடத்திக் கொண்டிருக்கும் தமிழக அரசுக்கும், நிருவாகிகளுக்கும் என் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து நன்றி கூறி விடைபெறுகிறேன். □

# தமிழில் படித்தவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை அளித்திட சட்டம்

**கோவையில் 27.6.2010 அன்று,
உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின்
நிறைவு விழாவில்,
மாண்புமிகு முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
ஆற்றிய நிறைவுரை.**

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு நிறைவு விழா நிகழ்ச்சியின் தலைவர் மத்திய நிதியமைச்சர், நம்முடைய அன்பிற்குரிய நண்பர் பிரணாப் முகர்ஜி அவர்களே, முன்னிலை வகித்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் அருமை நண்பர் ப. சிதம்பரம் அவர்களே,

சிறப்பு அஞ்சல் தலைகளை வெளியிட்ட மத்திய அமைச்சர் தம்பி ராஜா அவர்களே, தமிழக நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களே, துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களே, மத்திய அமைச்சர்கள் மு.க.அழகிரி அவர்களே, தயாநிதி மாறன் அவர்களே, வரவேற்புரையாற்றிய தமிழக அரசின் தலைமைச் செயலாளர் ஸ்ரீபதி.ஐ.ஏ.எஸ்., அவர்களே, நன்றியுரை நவிலவிருக்கின்ற, நன்றிபல பாராட்டப் படவேண்டிய ஐ.ஏ.எஸ். அதிகாரி, இந்த மாநாட்டிற்கான சிறப்பு அலுவலர் அலாவுதீன்,ஐ.ஏ.எஸ்., அவர்களே,

எத்தனையோ இன்னல்களுக்கிடையேயும், இடையூறுகளையெல்லாம் தாண்டி இந்த மாநாட்டை அல்லும் பகலும் உழைத்து வெற்றிகரமாக நடத்துவதற்கு தானும், தன்னுடைய அலுவலாளர்களும் மாவட்டத்திலே உள்ள அதிகாரிகளும் ஒருங்கிணைந்து பணியாற்றி, வெற்றிக் கனியைப் பறித்துத் தந்துள்ள மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் உமாநாத்,ஐ.ஏ.எஸ்., அவர்களே,

பெரியோர்களே, தாய்மார்களே, வெளிநாட்டிலிருந்து வந்துள்ள தமிழ் அறிஞர்களே, என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே,

இந்த மாநாட்டினைத் தொடங்கி வைத்து நம்மை வாழ்த்திப் பாராட்டிச் சென்ற இந்திய நாட்டினுடைய




குடியரசுத் தலைவர் – அவர்களுக்குப் பிறகு இன்று, இந்த மாநாட்டின் நிறைவு விழாவிலே நிறைந்த மனதோடு மகிழ்ச்சிப் பெருக்கோடு வந்து கலந்து கொண்டு நம்மையெல்லாம் மகிழ்ச்சியிலே ஆழ்த்தியுள்ள மத்திய நிதியமைச்சர் பிரணாப் அவர்களுக்கும், மத்திய உள்துறை அமைச்சர் நண்பர் சிதம்பரம் அவர்களுக்கும் என்னுடைய தனிப்பட்ட முறையிலும், இந்த மாநாட்டுப் பந்தலிலே குழுமியிருக்கின்ற உங்கள் அத்தனை பேருடைய சார்பிலும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த மாநாட்டின் விளைவாக என்னென்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் நம்முடைய மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் அவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். நான் பக்கத்திலே நிதியமைச்சர் இருக்கிறார் என்ற தைரியத்தில், அவர் சொன்னதையெல்லாம் செய்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

நடைபெறக் கூடுமென்று எதிர்பார்த்து, முன்கூட்டியே நான் அவைகளையெல்லாம் இந்த மாநாட்டிலே என்னுடைய பேச்சோடு பேச்சாக, இரண்டு நாட்களுக்கு முன்பு நான் அறிவித்தவாறு ஏறத்தாழ ஒரு நிதிநிலை அறிக்கையைப் போல என்னுடைய பேச்சைத் தயாரித்திருக்கின்றேன்.

நிதிநிலை அறிக்கை என்றதும் நம்முடைய பிரணாப் அவர்கள் பயந்து விட வேண்டிய அவசியமில்லை. நான் நம்பிக்கையோடு இருப்பதற்குக் காரணம், பிரணாப் அவர்கள் என்னிடத்திலே கொண்டுள்ள அன்பு – தமிழ் மக்களிடத்திலே அவருக்குள்ள அன்பு, ஆர்வம் – தமிழின்பால் உள்ள பற்று – இவைகளின் காரணமாக நான் இந்த மாநாட்டிலே வெளியிடுகின்ற பல்வேறு காரியங்களுக்கு நிதி உதவி அதிகம் தேவைப்படுகிறது. அந்த நிதி உதவியை மத்தியப் பேரரசுதான் வழங்க வேண்டும். வலது புறத்திலே பிரணாப்பும், இடது புறத்திலே சிதம்பரமும் இருக்கும்போது நான் நிதியைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்ற அந்த உணர்வோடு உங்கள் முன்னால் என்னுடைய உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு நிறைவுரையை வைக்க விரும்புகின்றேன்.

ஐந்து நாட்களாகக் கோவை மாநகரில் எழுச்சியும், ஏற்றமும் கொண்டு நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு இன்று நிறைவு விழாக் காண்கிறது. உள்ளமெல்லாம் தமிழ் நிறைந்திருக்கும் வேளை – ஊனும், உயிரும் தமிழோடு கலந்திருக்கும் வேளை – எதைப்பற்றிப் பேசினாலும், தமிழைப் பற்றிப் பேசிடும் வேளை – எதையும் தமிழோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வேளை என இந்த ஐந்து நாட்களும் நமது சிந்தனை, சொல், செயல் அனைத்தும் தமிழ், தமிழே என்றாகி; இந்த மாநாட்டில் நாம் அனைவரும் மனநிறைவும், மகிழ்ச்சியும் கொள்ளத்தக்க அளவுக்கு விளைத்திருக்கும் பயன்களோ பலப்பல எனப்பாரோர் போற்றிட நடைபெற்று, நிறைவு விழாக் கட்டத்தை இப்போது இந்த மாநாடு எய்தியிருக்கிறது.

விரிந்து பரந்து கிடக்கும் கடல் போல எத்திசை நோக்கினும் – மக்கள் வெள்ளம் கூடியுள்ள பேரழகு கண்ட பெருமித உணர்வோடு இந்த நிறைவு விழாவில் எனது எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் பரவியுள்ள ஒரே இந்திய மொழி என்னும் சிறப்புக்குரியது தமிழ்மொழி. தமிழ்மொழியின் தொன்மையை ஏனைய உலக மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கினால், அதன் அருமையும், பெருமையும் மேலும் உயர்வதை அனைவரும் உணரமுடியும்.

இன்று உலக மொழியாகத் திகழும், ஆங்கில மொழியின் முதல் எழுத்து வடிவம் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

அறிவியல் மொழியாகிய ஜெர்மன் மொழியின் முதல் எழுத்து வடிவம் கி.பி.8ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

பிரெஞ்சு மொழியின் முதல் எழுத்து வடிவம் கி.பி.9ஆம் நூற்றாண்டில்தான் கிடைத்தது. ரஷ்ய மொழியின் பழைமையான எழுத்து வடிவம் கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இலத்தீன் மொழியில் இருந்து உருவான இத்தாலிய மொழி 10ஆம் நூற்றாண்டில்தான் எழுத்து வடிவம் பெற்றது.

ஆனால் கிறித்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே – முதல் எழுத்து ஆவணமாக, தொல்காப்பியம் நூலைப்பெற்று, இலக்கண வரம்பு கொண்டு வாழ்ந்த தமிழ்மொழி இன்றும் சாமானியர் முதல் ஆன்றோர், சான்றோர் வரை வாழும் மொழியாகவும், வளரும் மொழியாகவும், வரலாற்று மொழியாகவும் திகழ்வதனால்தான், இன்று உலக அளவில் அறிஞர்கள் கூடி விழா எடுக்கும் பெருமையைப் பெற்றுள்ளது.

காதல், வீரம் இரண்டும் தமிழர்களுக்கு எத்தகைய உணர்வு பூர்வமான பெருமை அளித்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக நம்முடைய சங்கப்பாடலில் இதோ இரண்டு காட்சிகள்!

"குழந்தைப் பருவத்தில் எனது தாயார் விளையாடியபோது மணலில் அழுத்திய விதை, பின் முளைத்து புன்னை மரமாக வளர்ந்துள்ளதாம். இந்தப் புன்னை மரம், எனக்கு முன் தோன்றியதாம்; எனவே இதனை என் "அக்காள்" என்று எனது அன்னை ஏற்கெனவே கூறியுள்ளாள்.

என் அக்காளாகிய இந்தப் புன்னை மரத்தின் முன் உன்னொடு காதல்மொழி பேச என் மனம் கூசுகிறது; வேறிடம் செல்வோம் வா" எனக் காதலனை வேறிடத்திற்கு அழைக்கிறாள் மங்கையொருத்தி;

சங்க இலக்கியத்தில் – நற்றிணையில் இது கவிதை வரிகளாக வருகின்றது.

**"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே**
**அம்ம நாணுதும் நும்மொடு நகையே"**

– என நற்றிணை நவில்கிறது.

ஒருத்தியின் குழந்தைப் பருவத்தில் – இவளுக்கு மூத்தவளாக இன்னொரு குழந்தை. ஒரு இடத்திலே நட்ட – பதித்துவைத்த விதை வளர்ந்து அது புன்னை மரமாக நின்று கொண்டிருக்கிறது. அதற்குப் பக்கத்திலே காதலனும் காதலியும் சந்திக்கிறார்கள். நெருங்குகிறான் காதலன். அப்போது காதலி சொல்கிறாள். இந்தப் புன்னை எனக்கு அக்காள் முறை. ஏனென்றால் எனக்கு முன்னால் என் தாயாரால் விதை புதைக்கப்பட்டு, அது இங்கே வளர்ந்து நிற்கின்றது. எனவே அது எனக்கு அக்காள் முறை. அந்த அக்காளுக்கு முன்னால் உன்னோடு காதல் பேசுவதற்கு வெட்கமாக இருக்கிறது என்று அந்தக் காதலி சொல்வதாக சங்க இலக்கியத்திலே ஒரு அழகான கவிதை.

இப்படி அகவாழ்க்கையின் நாகரிகத்தைச் சமுதாயத்தில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கட்டிக் காத்துப் புகழ் ஈட்டியுள்ளது தமிழ்நாடு!

ஒரு குழந்தை இறந்தால்கூட – விழுப்புண் படாமல் இறந்துவிட்டதே என வருந்தி வீரச்சின்னம் விளங்க அந்தக் குழந்தையின் மார்பை வாளால் பிளந்து பிறகு குழந்தையைப் புதைத்து, வீரத்தைப் போற்றும் நாடு தமிழ்நாடு! இதனைத்தான்

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆளன்று என்று வாளில் தப்பார்"**

– எனப் புறநானூறு கூறுகிறது.

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்"**

என்று அய்யன் திருவள்ளுவர் கூறியதிலிருந்து, சமதர்ம சமுதாய நெறியைப் போற்றிப் பின்பற்றிய நாடு தமிழ்நாடு!

கி.பி. இரண்டு, மூன்றாம் நூற்றாண்டுகளில் ரோமர்கள் தமிழர்களோடு நெருங்கிய வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். பழைய ரோம் நாணயங்கள் தமிழ்நாட்டுக் கடற்கரைகளில் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் மற்ற இடங்களில் கிடைத்தவற்றை விட, ரோமானிய நாணயங்கள் இந்தக் கொங்கு நாட்டுப் பகுதியில்தான் மிகுதியாகக் கிடைத்துள்ளன. ரோமானியப் பேரரசர்களான அகஸ்டஸ், டைபீரியஸ் காலத்து நாணயங்கள் பொள்ளாச்சியிலும், ஜெர்மானியஸ், கிளாடியஸ் காலத்து நாணயங்கள் வெள்ளலூரிலும்; நீரோ, நெர்வா காலத்து நாணயங்கள் கலையமுத்தூரிலும் கிடைத்துள்ளன. இதிலிருந்து, கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து, மூன்று, நான்கு நூற்றாண்டுகள் ரோமர்கள் கொங்கு நாட்டுப் பகுதியுடன் வாணிகம் செய்து வந்தனர் என்பதை நாம் அறிய முடிகிறது.

கிழக்கே சீனா முதலிய பல நாடுகளுடனும் ஜாவா, சுமத்ரா, மலேயா முதலிய தீவுகளுடனும் தமிழ்நாடு வாணிகம் காரணமாகத் தொடர்பு கொண்டிருந்தது.

தமிழர்களின் கலைத்திறன்கள் உலக அறிஞர்கள் பாராட்டுகளைப் பெற்றுள்ளன. இசை, நடன, நாடகக் கலைச் சிறப்புகளைச் சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை புலப்படுத்துகிறது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் கரிகாற்சோழனால் கட்டப்பட்ட கல்லணை தமிழரின் பொறியியல் கலைத் திறனுக்கு தகுதிமிக்க சான்றாக விளங்குகிறது. கி.பி.6ஆம் நூற்றாண்டு கால மாமல்லபுரச் சிற்பங்கள், தமிழரின் அரிய சிற்பக் கலைச் சின்னங்களாகத் திகழ்கின்றன. அழகோவியமாகத் திகழும் தஞ்சைப் பெரிய கோவில் 10ஆம் நூற்றாண்டில், கட்டடக் கலையில் தமிழகம் பெற்றிருந்த ஆற்றலுக்குச் சான்றாக விளங்குகிறது.

தமிழ்ச் சமுதாயத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தும் முத்திரைக் குறியீடாக இலங்குவது தமிழ்மொழி. தொன்மையால், இலக்கண இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படும் வாழ்வியல் நெறிகளால், நீதி நிருவாக, அறநெறி வழிகளால், இன்ன பிறவற்றால், மிக உயர்ந்த மாண்புகளைக் கொண்டுள்ளது செம்மொழியாகிய தமிழ்மொழி!

தமிழ்ச் செம்மொழியெனும் தகுதிபெறத் தக்க இலக்கியச் செல்வங்களைப் படைத்தளித்த சங்ககாலப் புலவர் பெருமக்களை – சான்றோர்களை – அவர்கள் அனைவரையும் ஆதரித்து தமிழ் வளர்த்த மன்னர்களை இந்த நேரத்தில் நினைவு கூர்ந்து போற்றி வணங்குகிறேன்!

"திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" கண்ட அறிஞர் டாக்டர் கால்டுவெல்; தமிழ்மொழியின் அருமைகளை அவனிக்கு எடுத்துரைத்த ஜி.யு.போப், வீரமாமுனிவர்; தமிழ் செம்மொழியே என அறிவித்த சூரியநாராயண சாஸ்திரி எனும் பரிதிமாற்கலைஞர்;

சங்க இலக்கியச் செல்வங்களை ஓலைச்சுவடிகளில் இருந்து மீட்டெடுத்து, அச்சு நூல் வடிவம் பெறச்செய்த டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர்; அவரைப் போலவே, தமிழ் நூல்களை ஆராய்ந்து, அச்சிட்டு அளித்த சி.வை. தாமோதரம் பிள்ளை; இருபதாம் நூற்றாண்டில் தமிழ் புத்துயிர் பெற உழைத்த தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளார்; தமிழ்த் தென்றல் திரு.வி.க.; நாவலர் வேங்கடசாமி நாட்டார்; மகாகவி பாரதியார்; புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்; ஈழத்து தனிநாயகம் அடிகளார்; வ.அய்.சுப்ரமணியனார், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தந்த தந்தை பெரியார்; தமிழ் – தமிழர் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பேரறிஞர் அண்ணா போன்ற எண்ணற்ற தமிழ்ச் சான்றோர்களையும் இந்த இனிய வேளையில் நினைவு கூர்ந்து, வணங்கிப் போற்றுகிறேன்.

அரசர்களும், புலவர்களும், அறிஞர்களும், கவிஞர்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும், பன்னாட்டு ஆய்வாளர்களும் வளர்த்து வாழ்வித்துள்ள அன்னைத் தமிழ்மொழியை, எதிர்வரும் காலத்தில், நாளும் மலரும் அறிவியல் புதுமைகளுக்கேற்ப, வளர்த்துக் கட்டிக் காப்போம்! வருங்காலத் தலைமுறைக்கு வற்றாத செல்வமாய் வழங்கிக் களிப்போம்! என இந்த மாநாட்டில் நாம் அனைவரும் உறுதியேற்போம்!

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நாள் முதல் இம்மாநாடு வெற்றிகரமாக நடைபெற்று முடிவடைகின்ற இந்நாள் வரை, அல்லும் பகலும் அயராமல், ஒல்லும் வகையிலெல்லாம் ஓய்வின்றி உழைத்துப் பாடுபட்டுள்ள ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்துப் பாராட்ட வேண்டும்; ஆனால், அதற்கு நேரமும், இடமும் பொருந்தாத நிலையில் அனைவரும் என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்து என்னை அணி செய்கிறீர்கள் என்னும் மகிழ்வோடு, உங்கள் அனைவருக்கும் எனது மனம் கனிந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் உரித்தாக்குகிறேன்.

தமிழக அரசின் சார்பில் நான் விடுத்த அழைப்பினை ஏற்று, இம்மாநாட்டிற்கு வருகை தந்து, தங்கள் கருத்துகளைப் பதிவுசெய்து, தமிழ்மொழியின் மேன்மைக்குப் பங்காற்றியுள்ள பல்வேறு நாடுகளைச் சார்ந்த – தமிழகம் உள்ளிட்ட இந்திய மாநிலங்களைச் சேர்ந்த அனைத்துத் தமிழ்ப் பேரறிஞர்களுக்கும், குறிப்பாக, கோவை மாநகர மக்களுக்கும் எனது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டின் சிறப்புக்குக் காரணமாக இருந்த மத்திய, மாநில அமைச்சர் பெருமக்களையும், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும், நான் மனமாரப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது அன்பான அழைப்பினையேற்று, இன்று இங்கே வருகை தந்துள்ள மத்திய அமைச்சர் நண்பர் பிரணாப் முகர்ஜி அவர்களுக்கும், நண்பர் ப.சிதம்பரம் அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன். மாநாட்டைத் தொடங்கி வைத்து, உரையாற்றிய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கும், தொடக்க விழாவில் கலந்து கொண்ட மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கும், எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அறிவிப்புகள்**

தமிழ்மொழி வரலாற்றில் தனி இடம் பெற்றுள்ள இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி, **26.6.2010** அன்று மாநாட்டுப் பந்தலிலே உள்ள தொல்காப்பியர் அரங்கில் பேராசிரியர் ஈழத்து கா.சிவத்தம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்க அமைப்புக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலும் பொது மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட பல்வேறு கருத்துகளின் அடிப்படையிலும் இங்கே நான் சில தீர்மானங்களையும் அறிவிப்புகளையும் வெளியிட விரும்புகிறேன்.

**பாரம்பரிய மரபணுப் பூங்காக்கள்**

**1.** ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்க காலத்தில் தமிழகத்தைச் சூழல் இயலின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நமது முன்னோர் ஐந்திணை நிலங்களாகப் பிரித்திருந்தனர். ஒவ்வொரு சூழல் இயல் பகுதியும், அதற்குகந்த தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் கொண்டவை. இந்த இயற்கை வளம் – உணவு உத்தரவாதத்திற்கும், உடல் நலம் காப்பதற்கும், சித்த மருத்துவத்திற்கும் பேருதவியாக இருந்து வந்துள்ளன. ஐக்கிய நாடுகள் மன்றம் 2010ஆம் ஆண்டினை "உலக உயிரியல் பன்மை ஆண்டு (International Year of Bio-diversity)" என அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பின் நினைவாக, தமிழக அரசு சார்பில், ஐந்திணை நிலவகைகளில் "பாரம்பரிய மரபணுப் பூங்காக்கள் (Genetic Gardens)" அமைக்கப்படும். புகழ் பெற்ற வேளாண் விஞ்ஞானி டாக்டர். எம்.எஸ்.சுவாமிநாதன், எம்.பி அவர்கள் இந்தப் பாரம்பரிய மரபணுப் பூங்காக்களின் அமைப்பாளராக இருப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## இலங்கைத் தமிழர் நலன்

2. இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்து துன்ப துயரங்களுக்கு ஆளாக்கப்படுவதும், அவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல இயலாமல் இன்னமும் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதும், முகாம்களி லிருந்து சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நல்வாழ்வும் பாதுகாப்பும் உறுதியளிக்கப்பட்டு முழுமையான அளவுக்கு மறுகுடியமர்த்தம் செய்யப்படாததும், இலங்கைத் தமிழ் மக்கள் தமது மொழி இன உரிமையை நிலை நாட்டிக் கொள்வதற்கு அவர்கள் நீண்ட நெடுங்காலமாகக் கோரிவரும் அரசியல் தீர்வு காணப்படாததும், அவர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் உறுதி மொழிகள் முறையாக நிறைவேற்றப் படாததும்; கோவையில் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் திரண்டுள்ள இலட்சோபலட்சம் உலகத் தமிழர்களுக்கு வேதனையைத் தருகிறது. எனவே, இலங்கைத் தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கேற்ற முனைப்பான முயற்சிகளை மேற்கொள்ள இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்திட வேண்டுமென்று; இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

## தமிழ் ஆட்சி மொழி

3. மத்தியில் தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட வேண்டுமென்பது தமிழக மக்களின் நீண்ட காலக் கோரிக்கை ஆகும். இந்தியாவின் அனைத்து மாநில மொழிகளையும், மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்குவதில் தாமதம் ஏற்படுமேயானால், முதல்கட்டமாக – செம்மொழியாம் எம் தமிழ்மொழியை மத்திய ஆட்சிமொழியாக ஆக்கவேண்டுமென்று; கோவையில் நடைபெறும் இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

## உயர் நீதிமன்றத்தில் தமிழுக்கு பயன்பாட்டு மொழியாக அங்கீகாரம்

4. சென்னை உயர்நீதிமன்றத்தில், தமிழ் பயன்பாட்டு மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதற்காக; 2006ஆம் ஆண்டு தமிழக அரசு, சட்டப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி, மேதகு தமிழக ஆளுநரின் பரிந்துரையினையும், சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் பரிந்துரை யினையும் பெற்று, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. எனவே, தாமதமின்றி உடனடியாகச் சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் பயன்பாட்டு மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று இந்த மாநாடு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

5. சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கும், ஆய்வுக்கும் வழங்கப்படுவதைப் போன்று; தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், ஆய்வுக்கும் தேவையான அளவு மானியத் தொகையினை வழங்கிட முன்வர வேண்டுமென்று இந்த மாநாடு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

6. இதுவரை இந்திய மொழிகள் அனைத்திலும் சேர்ந்து தோராயமாக ஒரு இலட்சம் கல்வெட்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள், குறைந்தது 60 ஆயிரம் கல்வெட்டுகள் தமிழ்க் கல்வெட்டுகள் ஆகும். இதனையும், இனிக் காணப்பெற வேண்டிய தமிழ்க் கல்வெட்டுகளின் எண்ணிக்கையையும் கருத்தில் கொண்டு; மத்திய அரசு உருவாக்க முடிவு செய்துள்ள "இந்திய தேசியக் கல்வெட்டியல் நிறுவனத்தை (Indian National Institute of Epigraphy)" தமிழகத்தில் அமைத்திட வேண்டுமென, இந்தியப் பிரதமர் அவர்களுக்கு, ஏற்கெனவே நான் எழுதிய கடிதத்தில், எழுப்பியுள்ள கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டு மென்று இந்த மாநாடு மத்திய அரசை வலியுறுத்துகிறது.

## ஆழ்கடல் அகழ்வாராய்ச்சி

7. கடல் கொண்ட பூம்புகார் பகுதியையும், குமரிக் கண்டத்தையும், ஆழ்கடல் அகழ்வாராய்ச்சி செய்திடத் தேவையான திட்டம் வகுத்துச் செயல்படுத்திட வேண்டுமென்று மத்திய அரசை, இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

8. தமிழகத்தின் ஆட்சிமொழியாக – நிருவாக மொழியாகத் தமிழ் ஆக்கப்பட வேண்டும் எனும் நீண்ட நாள் கனவு இன்னும் முழுமையாக நிறைவு பெறவில்லை. அதனை நிறைவேற்றிட தமிழக அரசுக்கு, அலுவலர்களும், பொதுமக்களும் தேவையான ஒத்துழைப்பு வழங்கிச் செயல்பட வேண்டுமென்று இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

9. தமிழில் படித்தவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை அளித்திட, உரிய சட்டம் தமிழக அரசின் சார்பில் இயற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றைத் தேர்வு செய்து, அதனை உருவாக்கியவருக்கு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் வைரமணி மொழிகளை வையகத்திற்குத் தந்துள்ள "கணியன் பூங்குன்றனார்" பெயரில் ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத்

தொகையுடன் விருதும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்ததற்கிணங்க, இன்றைய நிகழ்ச்சியில் அந்த விருதும், ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் பனேசியோ டிரீம் வீவர்ஸ் சாப்ட்வேர் நிறுவனத்திற்கு இந்த மேடையிலே வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசளிப்பு ஆண்டுதோறும் தொடரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழ்ச் செம்மொழிப் பாடம்**

11. தமிழகத்தின் பள்ளி – கல்லூரி – பல்கலைக்கழகப் பாடத் திட்டங்களில்; "தமிழ்ச் செம்மொழி" என்ற தலைப்பு அடுத்த கல்வியாண்டு முதல் இடம் பெறுவதற்கு ஆவன செய்யப்படும் என்ற உறுதியை அளிக்கிறேன்.

**மதுரையில் தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கம்**

12. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் இடம் பெற்று மதுரை மாநகரில் தொடங்கப்பெறவுள்ள "தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் செம்மொழிச் சங்கம்" பின்வரும் பொறுப்புகளை ஏற்று நிறைவேற்றும் :–

(1) குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்; இப்போது இந்த உலகத் தமிழ் மாநாடு பதினைந்து ஆண்டு கால இடைவெளி விட்டு, இதுவரை நடைபெறாமல் இருந்து இப்போதுதான் நடைபெறுகிறது. இனி இப்படிப்பட்ட இடைவெளிகள் ஏற்படாமல் குறிப்பிட்ட கால இடைவெளியில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

(2) திராவிடர் மொழி, கலை, பண்பாடு, வாழ்வியல் ஆகியவற்றைத் தொகுத்து நிரந்தரக் கண்காட்சி ஒன்றை அமைத்தல்;

(3) தமிழ்மொழியின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய ஆவணக் காப்பகம் ஒன்றை உருவாக்கி அதனைப் பராமரிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

(4) பல்வேறு தனித்தனித் தீவுகளைப் போலத் தற்போது சிதறுண்டு கிடக்கும் தமிழ் ஆராய்ச்சி உலகத்தை ஒருங்கிணைத்தல்;

(5) மொழி ஆராய்ச்சி, மொழித் தொண்டு போன்றவற்றில் தன்னலம் கருதாது செயல்படும் தமிழ் அறிஞர்களை உரியமுறையில் ஆதரித்து, அவர்களை தமிழ்மொழி வளர்ச்சிக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுதல்.

(6) உலகம் முழுவதும் உள்ள தமிழறிஞர்களைப் பற்றிய விவரத்துடன் கையேடு தயாரித்து வெளியிடுதல்; உலக அளவில் உள்ள தமிழ் அமைப்புகளுடன் தொடர்புகளை மேற்கொள்ளுதல்.

**கோவையில் செம்மொழிப் பூங்கா**

13. கோவையில் இந்த மாநாட்டின் நினைவு என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யக் கூடிய "செம்மொழிப் பூங்கா" அமையவுள்ள காந்திபுரம் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் களைய ஒரு மேம்பாலம் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக கோவை மக்களிடையே உள்ளது. நகரின் மிக முக்கிய வணிகப் பகுதியான இங்கு பெரிய பேருந்து நிலையங்களும் இருப்பதால் போக்குவரத்து அதிகமாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு குறுக்குச் சாலை (Cross cut Road) மற்றும் நூறு அடிச்சாலை ஆகிய சாலைகள் சத்தியமங்கலம் சாலையைக் கடக்கக் கூடிய சந்திப்புக்களில் ஒரு கிலோ மீட்டருக்கு மேல் நீளமுள்ள பெரும் மேம்பாலம் ஒன்று சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

14. தமிழ்மொழியின் சிறந்த படைப்புகளைப் பிற இந்திய மொழிகளிலும், ஐரோப்பிய ஆசிய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடவும்; பிறமொழி இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்திடவும்; அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணினியியல், மருத்துவம் போன்ற அறிவியல் திறனை வளர்ப்பதற்குத் தேவையான நூல்களை பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்திடவும் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படும்.

**சிறப்பு நிதியம்**

15. கோவையில் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் தொடர்ச்சியாக, தமிழ் வளர்ச்சிக்கென்றே தனியாக தமிழக அரசின் சார்பில் நூறு கோடி ரூபாய் "சிறப்பு நிதியம்" (Fund) உருவாக்கப்பட்டு உரிய முறைகளை வகுத்துக் கொண்டு செயல்படுத்தப்படும்.

நான் இங்கே செய்துள்ள இந்த அறிவிப்புகளுக்கு மத்திய அரசினுடைய உதவியும் எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் தெரிவித்து, அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று மத்திய அரசினுடைய நிதி அமைச்சர் அவர்களையும், அதற்கு துணையாக நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்களையும் பாடுபட வேண்டும், அதை நீங்கள் உங்களுடைய கை தட்டல் மூலமாக அதை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (அவர்களே கை தட்டுகிறார்கள். நன்றி).

இந்த மாநாட்டிற்கு பல்வேறு பகுதிகளிலிருந்து, பல நாடுகளிலிருந்து, தமிழகத்திலே கூட பல்வேறு மாவட்டங்கள், வட்டங்கள், கிராமங்கள், குக்கிராமங்கள் இங்கெல்லாம் இருந்து தமிழை வாழ வைக்க, வலுப்பெற வைக்க, வளர வைக்க, இந்த மாநாட்டை நடத்துகின்ற எங்களுக்கெல்லாம் ஆதரவு தருகின்ற வகையிலே வந்து குவிந்துள்ள இலட்சக்கணக்கான உடன் பிறப்புக்களாகிய உங்களுக்கெல்லாம் நான் என்னுடைய தலைதாழ்ந்த வணக்கத்தையும், என்னுடைய அன்பான நன்றியையும் நெஞ்சைப் பிளந்து காட்டித் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நீங்கள் மாநாடு முடிவுற்று இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, ஊருக்குத் திரும்புகின்ற உடன்பிறப்புக்கள் செல்லுகின்ற கார்களெல்லாம் மிக மெதுவாகவும், வேகமின்றியும் அவசரப்படாமலும் மிகுந்த எச்சரிக்கையோடு ஊர்களுக்குத் திரும்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் பத்திரமாக ஊர் திரும்பினீர்கள் என்று கேள்விப்பட்டால்தான் என் மனம் நிம்மதியாக இருக்கும். இல்லையேல், கவலையில் ஆழ்வேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்த நிலையில் இந்த நான்கைந்து நாட்களாக கோவை மாநகரில் பத்திரிகைகளில் எல்லாம் கூட, பாராட்டி எழுதுகின்ற அளவிற்கும் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்ற அளவிற்கும் மாநாடு நடைபெற்று, அரசியல் சாயலே இல்லாமல் கட்சி சாயலே இல்லாமல் தமிழர்கள், தமிழுக்காகக் கூடினார்கள் என்ற அந்த ஒரே குறிக்கோளுக்காகத்தான் இந்த மாநாட்டை நடத்தினோம். அந்த ஒரே குறிக்கோளை இன்றைக்கு நாம் நிறைவேற்றியிருக்கின்றோம். நிறைவேற்றுவதற்கான கால் நட்டிருக்கிறோம் என்ற அந்த உணர்ச்சியைப் பெற வேண்டும்.

நான் ஐம்பது நாட்களுக்கு முன்பு கோவைக்கு வந்து இந்த மாநாடு நடக்கின்ற இடத்தைக் காண வந்த போது, நானும் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உள்ள நண்பர்களெல்லாம் அகன்று விரிந்த சாலைகளில் சென்றபோது சில இடங்களிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரு வண்ணக் கொடிகள் இருந்ததைப் பார்த்து – நாம் நடத்துகின்ற ஒரு பொது மாநாடு – மொழி மாநாடு – நம்முடைய தாயை வணங்குகின்ற ஒரு நிகழ்ச்சி – அதில் கட்சியின் சாயல் ஒரு குண்டு மணி அளவு இருந்தால்கூட கட்சி மாநாட்டை நடத்தினோம் என்ற களங்கம் நமக்கு ஏற்பட்டுவிடக் கூடும் என்பதற்காகத் தான் மறுநாளே நம்முடைய கழகத்திலே உள்ள தோழர்களுக்கு ஒரு அறிக்கை விடுத்தேன். இது வேண்டுகோள் – இது கட்டளை அல்ல என்று கனிவோடு நான் விடுத்த அந்த அறிக்கையில் எந்த இடத்திலும் நம்முடைய கொடி ஒன்று கூட இருக்கக்கூடாது. காணும் இடமெல்லாம் தமிழ்க் கொடியைத்தான் காண வேண்டும் – நம்முடைய மாநாட்டிற்கான அந்த சின்னத்தைத்தான் காண வேண்டும் என்று சொன்னேன்.

என்னுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு எவ்வளவு கட்டுப்பாடானது இந்த இயக்கம் என்பதை நிலைநாட்டும் வகையில் இங்கே உள்ள – கோவையிலே உள்ள எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த செயல்வீரர்கள் – தமிழ்க் கொடியைத் தவிர, இந்த மாநாட்டுச் சின்னம் அமைந்த கொடியைத் தவிர, வேறு எந்தக் கொடியும் கட்டாமல் எந்த வண்ணத்தையும் காட்டாமல் நடந்து கொண்ட அந்தப் பாங்கு, என்னை மிக மிக மகிழ வைக்கின்றது. அதற்காக இன்னொரு முறை என்னுடைய தலைதாழ்ந்த வணக்கத்தை உங்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொண்டு, இந்த மாநாடு பூரிப்போடு, புன்னகையோடு, குதூகலத்தோடு, கொட்டு முழக்கத்தோடு தொடங்கி, இன்றைக்கு எழிலுடன் நிறைவுறுகிறது.

இதைத் தொடர்ந்து தமிழை வளர்க்க, தமிழுக்கு வலு சேர்க்க, நாமெல்லாம் இந்த மாநாட்டிற்கு வந்தோம், கலைந்தோம் என்றில்லாமல் தொடர்ச்சியாகத் தொடர் பணிகளைத் தொடங்க வேண்டும்; அதற்கான தீர்மானங்களை இந்த மாநாட்டிலே நீங்கள் சொன்ன கருத்துகளை தீர்மானங்களாக ஆக்கி நான் வழங்கியிருக்கின்றேன். மேலும் பல அறிவிப்புகளை செய்திருக்கின்றேன். அறிவிப்புகள் நிச்சயமாக நடைமுறைக்கு வரும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு இந்த மாநாட்டில் கலந்துகொண்டு இடர்ப்பாடுகளையெல்லாம் பொருட்படுத்தாமல் மாநாடு நடத்தியவர்களுக்கும் எனக்கும் மகிழ்ச்சியைத் தந்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை உங்கள் கால் மலர்களில் சமர்ப்பித்து இந்த அளவோடு விடைபெற்றுக்கொள்கிறேன். ★

**தமிழனின் பண்பு**

தமிழர்கள் தங்களை உணரத் தொடங்கி விட்டார்கள் தமிழனின் பண்பு யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல; யாரையும் தாழ்த்துவதும் அல்ல. தமிழகம் உலகின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால் அது யாருடைய வேட்டைக் காடாகவும் இருந்திட ஒரு போதும் ஒருப்பட மாட்டோம்.

**– பேரறிஞர் அண்ணா**

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தமிழ் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும்!

**கோவையில் 27.6.2010 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவு விழாவுக்கு தலைமை வகித்து மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.**

இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதிலும், தலைமை தாங்குவதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழை செம்மொழியாக மத்திய அரசு அறிவித்ததற்குப் பிறகு நடைபெறும் இந்த முதல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை வெற்றிகரமாக நடத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட தமிழக முதல்வர் கலைஞரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவரோடும், இந்தியாவிலும், உலகளவிலும் உள்ள ஏனைய அறிஞர்களோடும் இணைந்து தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிப்பதற்கு ஒரு வகையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி துணை நின்றதை அறிந்து பெருமைப்படுகிறேன்.



இந்த மாநாட்டில் நடைபெற்ற ஆய்வரங்கங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான கட்டுரைகள், 50க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த மாநாடு பெரும் வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஆய்வரங்கங்களில், பொது விவாதங்கள், ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தல் ஆகியவற்றில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றி, விவாதித்து, ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்திருப்பதை அறிகிறேன். முதல்வர் கலைஞரே மிகப் பெரிய அரசியல் மேதையாக, தமிழறிஞராக, கவிஞராக, தலைசிறந்த எழுத்தாளராக பன்முகங்களை பெற்ற ஒருவர். எனவே, இந்த மாநாட்டை அவர் திட்டமிட்டு வெற்றிகரமாக நடத்தியிருப்பதில் ஆச்சரியம் இல்லை.

தமிழக மக்கள் தங்களது சிறந்த பாரம்பரியத்தின் மூலமாக இந்திய வரலாற்றுச் செழுமைக்கு சிறப்பான பங்களிப்பைத் தந்திருக்கிறார்கள். "தமிழ் மொழி, தமிழ்க் கலாச்சாரம், தமிழ் நாகரிகம் இவற்றைப் பொறுத்தவரை இதுவரை காணாத புதிய உற்சாகத்தையும், எழுச்சியையும் எல்லா முனைகளிலும் பெற்றிருப்பதைக் காண முடிகிறது என்று கலைஞர் முன்பு குறிப்பிட்டிருக்கிறார்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ் பரவலாக பயன்படுத்தப்பட்ட பிறகு, இது உண்மை என்பதையும் உணர முடிந்திருக்கிறது.

அதன் தொடர்ச்சியாகத்தான் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுடன், தமிழ் இணைய மாநாடும், உலகத் தமிழ் தகவல் தொழில்நுட்ப அமைப்புடன் சேர்ந்து நடத்தப்படுகிறது. இந்த இணைய மாநாட்டுக்கு சிறப்பான வரவேற்பும் கிடைத்திருக்கிறது. இந்த முயற்சிகள் எல்லாம் தமிழ் இணைய வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.

தமிழ் இணைய மேம்பாட்டு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தமிழ் ஆர்வலர்களின் கருத்துப் பரிமாற்றத்துக்கும் இந்த இணைய மாநாடு பெரிதும் உதவியிருக்கிறது.

இந்த இணைய மாநாட்டுக்கு சிறப்பான வரவேற்பும் கிடைத்திருக்கிறது. இந்த முயற்சிகள் எல்லாம் தமிழ் இணைய வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.

**சங்க இலக்கியச் சிறப்புகள்**

இந்த மாநாட்டில் பல சர்வதேச தமிழறிஞர்கள் சொற்பொழிவாற்றி, தங்களது ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார்கள். பின்லாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல அறிஞர் அஸ்கோ பர்போலா, இம்மாநாட்டில் கலந்து கொண்டு,''சிந்துசமவெளி எழுத்துக்களுக்கான திராவிட தீர்வு'' என்ற ஆய்வுக்கட்டுரையையும் சமர்ப்பித்துள்ளார். அது திராவிடக் கலாச்சாரத்துக்கும், சிந்துசமவெளி நாகரிகத்துக்கும் இருந்த தொடர்பினையும், அக்கால மக்களின் வாழ்க்கை, வரலாறு மற்றும் காலம் ஆகியவற்றை சிறப்பான முறையில் வெளிப்படுத்த பெரும் துணையாக உள்ளது. அது ஒரு சிறந்த கண்டுபிடிப்பாகும். சங்க கால இலக்கியத்தில் இருந்த சிறப்புகள், அதன் சமகாலத்தில் இருந்த வேறு எந்த இலக்கியங்களிலும் காணமுடியாது என்று பர்போலா கூறியிருக்கிறார்.

இம்மாநாட்டில், அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் ஜார்ஜ் ஹார்ட் கலந்து கொண்டு தனது ஆய்வுக் கட்டுரையையும் சமர்ப்பித்தார். அதில் செம்மொழியின் தனித்துவமும், சங்கச் செய்யுள்களின் சிறப்பு குறித்தும், அவர் சொல்லியிருக்கிறார். அது சங்ககால மக்களின் வாழ்க்கை முறையையும் சிறப்பாகச் சொல்வதாக உள்ளது.

இக்காலத் தமிழ் நாவல்களில், பழமை மாறாமல், சங்ககால வார்த்தைகள் அதிகம் பயன்படுத்தப்படுவதைப் பற்றி குறிப்பிடுகிறார். அந்த நாவல்களில் சங்க கால வார்த்தைகளைக் குறிப்பிட்டாலும், அதன்மூலம் அவற்றின் பொருள்களைத் தெளிவாக, துல்லியமாக அவர்கள் விளக்குவதைப் பார்த்து வியப்பதாகவும் ஹார்ட் கூறியிருக்கிறார். அந்த வார்த்தைகளில் பெரும்பாலானவை சங்க இலக்கியங்களில் இருந்து பெறப்பட்டவையாக இருக்கிறது என்றும் அவர் கூறுகிறார்.

தமிழ் மொழியின் வளர்ச்சியையும், அதன் தகுதியையும் உணர்ந்த யாராக இருந்தாலும், அதன் செம்மொழித் தகுதி பற்றி மிகவும் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். உலகத்தில் படைக்கப்பட்ட மிகச்சிறந்த படைப்புகளில் ஒன்றாக சங்க இலக்கியம் விளங்குகிறது என்றும் ஹார்ட் கூறுகிறார். காரணம், அதில் காணப்படும் கருத்துகள் எவையும் கடன் வாங்கப்பட்டவை அல்ல. அவை வாய் மொழியாகவும், இலக்கியம் மூலமாகவும், பரிணாம வளர்ச்சி மூலமாகவும், அந்தப் பழக்க வழக்கங்களும், நுட்பங்களும் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன என்கிறார்.

அத்துடன் மட்டுமல்லாமல், சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த வரலாற்றில், தெற்காசியாவில் உள்ள இலக்கியங்களில் சங்க இலக்கியத்தின் தாக்கம் இருப்பதை காணமுடிகிறது என்றும் ஹார்ட் கூறுகிறார்.

ரஷியாவை சேர்ந்த பேராசிரியர் துபியான்ஸ்கி சங்ககால இலக்கியங்கள் குறித்து வெளிவந்துள்ள புத்தகங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்து, நூல்களை எழுதியிருக்கிறார். அதுமட்டுமின்றி, பனைச்சுவடிகளில் இருந்த சங்க செய்யுள்களையும் ரஷிய மொழியிலும் மொழி பெயர்த்திருக்கிறார். எனவே தமிழ்மொழி செம்மொழியாக உருவாகியிருப்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஒரு அங்கமாக தமிழ் மொழி வரலாறு, கலாச்சாரத்தை விளக்கும் விதமாக பொதுக் கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல் தமிழ் இணையக் கண்காட்சியும், புத்தகக் கண்காட்சியும் நடத்தப் பட்டிருக்கிறது. இந்தக் கண்காட்சிகள் மிகவும் பிரபலம் அடைந்து ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள், அவற்றைக் கண்டு ரசித்திருக்கிறார்கள். இவை, தொடர்ந்து மக்கள் கூட்டத்தை ஈர்த்து வருகின்றன. அதன் காரணமாக இந்தக் கண்காட்சிகளை ஜூலை 4ஆம் தேதி வரை நீட்டிக்க, அதன் ஏற்பாட்டாளர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

**இனியவை நாற்பது**

அதுமட்டுமின்றி மாநாட்டின் தொடக்க நாளில் நடத்தப்பட்ட முக்கிய அம்சமான ''இனியவை நாற்பது'' என்ற அலங்கார ஊர்தி அணிவகுப்பு, தமிழ்க் கலாச்சாரம், வரலாறு, நாகரிகம், இலக்கியம், பாரம்பரியம், கலை, கட்டடக் கலை ஆகியவற்றின் பல்வேறு வடிவங்கள் சிறப்பான முறையில் விளக்குவதாக இருந்தது.

இந்த கண்கவர் அணி வகுப்பானது சிந்தையைக் கவரும் வகையில் இருந்ததால், அதனை சாலையின் இருபுறங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் கண்டுகளித்தார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன்.

முதல்வர் கலைஞர் எதையும் சிறப்பாகச் செய்பவர். அவரது சிறப்பான முயற்சி மற்றும் வழிகாட்டுதலால், இந்த மாநாடு சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளது என்பதில் எந்தவொரு ஆச்சரியமும் இல்லை.

இந்த மாநாடு இத்தகைய சிறப்பான ஒரு வெற்றி பெற சிறப்பான முயற்சிகளை மேற்கொண்ட முதலமைச்சருக்கும், அவருக்குத் துணையாக இருந்த மற்றவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் மூலம் கற்ற பாடங்கள், பிற்காலத்தில் தமிழ்வளர்ச்சிக்கு சிறப்பாகச் செயல்பட தூண்டுகோலாக, உதவியாக இருக்கும்.

★

*திராவிட மொழிகள் அனைத்திலும் மக்கள் பேசும் மொழிக்குரிய தன்மையைப் பெற்றுள்ள மொழி தமிழ்மொழியே*

**– சிலேட்டர் பெருமகன்**

# இனிய தமிழில் பேச வேண்டும்!
# இனிய தமிழில் எழுதவேண்டும்!!

**கோவையில் 27.6.2010 அன்று,**
**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின்**
**நிறைவு விழாவில்,**
**மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர்**
**திரு. ப. சிதம்பரம் அவர்கள் ஆற்றிய உரை.**

கடந்த 23 ஆம் நாள் தொடங்கி இன்று 27ஆம் நாள் வரை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், தமிழ் மொழி வளர்ச்சிக்கான நூற்றுக்கணக்கான ஆய்வுகள், கருத்தரங்கங்கள், பட்டிமன்றங்கள், கலை, இலக்கிய, நாட்டிய நிகழ்வுகள் நடைபெற்று முடிந்து, தமிழ் மொழியின் வரலாற்றில் பல புதிய அத்தியாயங்கள் எழுதப்பட்டுள்ளன.

இந்தப் பெருமையை எண்ணிப்பார்க்கிற போது, இந்தத் தருணத்தில், தமிழ் மொழிக்கு அளப்பரிய தொண்டாற்றிய அறிஞர்களின் ஒரு சில குறிப்பிடத்தக்க அறிஞர்களின் பங்களிப்பை நாம் நினைவு கூறாமல் இருக்க முடியாது. குறிப்பாக, தெலுங்கு, மராட்டியம், ஆங்கிலம் எனப் பல நூற்றாண்டுகளாகப் பிறமொழி ஆதிக்கத்தில் கட்டுண்டு கிடந்த தமிழ்மொழியை மீட்டு தமிழர்களைத் தலைநிமிரச் செய்த உ.வே. சாமிநாத அய்யர், மறைமலை அடிகள், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், தேவநேயப் பாவாணர், பரிதிமாற் கலைஞர், டாக்டர் மு.வரதராசனார், சிதம்பரநாதன் செட்டியார், ரா.பி.சேதுப்பிள்ளை, ச.வையாபுரிப் பிள்ளை, மயிலை சீனி வேங்கடசாமி, ஆபிரகாம் பண்டிதர், வீரமாமுனிவர், டாக்டர் கால்டுவெல், ஜி.யூ.போப் போன்ற அறிஞர்களுக்குத் தமிழ் மொழியும் தமிழ்ச் சமுதாயமும் என்றும் கடமைப்பட்டிருப்பதை இந்த நேரத்தில் நான் நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.



**கனவு மெய்ப்பட்டது**

இந்த மாநாட்டின் தொடக்க விழாவில் உரையாற்றிய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழ் மொழியின் தொன்மையை – இந்திய மொழிகளில் தமிழே மூத்த மொழி என்பதை – ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார்கள். "திராவிட மொழிகள் அனைத்திலும் உயர்தனிச் செம்மொழியாக நிலைபெற்று விளங்குவது தமிழ்'' என்று 148 ஆண்டுகளுக்கு முன் தமிழறிஞர் டாக்டர் கால்டுவெல் எழுதிய "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'' என்ற ஆராய்ச்சி நூல் குறிப்பிடுகிறது. அன்று டாக்டர் கால்டுவெல் அவர்கள் கண்டது ஒரு கனவு. "கனவு மெய்ப்பட வேண்டும்'' என்ற மகாகவியின் வாக்கு தமிழ் மொழியைப் பொறுத்தவரை மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. 2004ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் நாள் நம்முடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்தது. ஒரு செம்மொழிக்கு உரிய அனைத்துத் தகுதிகளும் தமிழ் மொழிக்கு உண்டு என்பதை – அறிஞர்கள் பல்லாண்டுகாலமாகக் கூறி வந்ததை – தமிழ் கூறும் நல்லுலகம் பல்லாண்டுகளாக விரும்பி எதிர்பார்த்ததை – நம்முடைய கனவு மெய்ப்படும் என்று நாம் நம்பியதை – நம்முடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஏற்றுக் கொண்டது என்ற மகிழ்ச்சியில் நாம் திளைத்திருக்கிறோம்.

**வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி**

ஒரு செம்மொழியின் தகுதிகள் என்ன? 1,500 ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கியங்கள் அந்த மொழியில் இருக்க வேண்டும். 1,500 ஆண்டுகளுக்கு முன்பே அந்த மொழியின் இலக்கணங்கள் தோன்றியிருக்க வேண்டும். அந்த இலக்கியங்களும், இலக்கணங்களும் எந்த ஒரு பிற மொழியையும் தழுவாமல், சுயமாக, அந்த மொழியிலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும். மொழியியல் அறிஞர்கள் வகுத்துள்ள இந்தத் தகுதிகள் தமிழ் மொழிக்கு முழுமையாக உண்டு. இந்தக் கூற்றை மறுப்பாரும் இல்லை, தடுப்பாரும் இல்லை. எனவேதான் நம்முடைய தமிழ் மொழிக்குச் செம்மொழி என்ற அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ஒரு மொழியின் இலக்கியங்களும், இலக்கணங்களும் அந்த மொழி பேசும் மக்களுடைய வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள். ஒரு மொழியின் வரலாறு மற்றும் பரிணாம வளர்ச்சி அந்த மொழிக்குச் சொந்தம் கொண்டாடும் மக்களுடைய வரலாற்றையும், வளர்ச்சியையும் ஒட்டியே அமைந்திருக்கும். ஆதிமனிதன் எவ்வாறு தன்னுடைய எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளிப் படுத்தினான்? அவனுடைய 'மொழி' என்ன? சைகைகள், உடல் அசைவுகள் தாம் அவனுடைய மொழி. திருந்தாத பண்புதான் ஆதிமனிதனின் வாழ்க்கை முறை. காலப்போக்கில் ஆதிமனிதனின் வாழ்க்கை முறையில் பல திருத்தங்கள் ஏற்பட்டன. மனிதன் திருந்துகிறான் என்றால் என்ன பொருள்? மனிதன் பண்படுகிறான், நல்ல பண்பாடுகளைப் பின்பற்றுகிறான் என்று பொருள். ஆதிமனிதன் திருந்தும் போது அந்தத் திருத்தங்களின் பிரதிபலிப்பாக ஒலி பிறக்கிறது. ஓர் எண்ணத்தை ஓர் உணர்வை மீண்டும் மீண்டும் ஒரே ஒலிக் குறிப்பின் வாயிலாக வெளிப்படுத்தும் போது சொல் பிறக்கிறது. ஒரு குறிப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்ற தேவை பிறக்கும் போது மொழிக்கு வரி வடிவம் கிடைக்கிறது. வரி வடிவம் பெற்ற மொழியில் இலக்கியங்கள் படைக்கப்படுகிறது. இலக்கியம் பெற்ற மொழிக்கு இலக்கணம் வகுக்கப்படுகிறது. இவையெல்லாம் நாம் அறிந்த செய்திகளே!

ஒலிக்குறிப்பு, வரிவடிவம், இலக்கியம், இலக்கணம் என்ற பண்புகளை ஒரு மொழி பெறும் பொழுது அம்மொழி செம்மைப்படுகிறது. ஒரு மொழி பேசும் மக்கள் செம்மைப்பட்டதால் அந்த மொழி செம்மைப்பட்டது என்றும் சொல்லலாம்; ஒரு மொழி செம்மைப்படும் போது, அந்த மொழியைப் பேசும் மக்கள் செம்மைப்படுகிறார்கள் என்றும் சொல்லலாம். பரிதிமாற் கலைஞர் கூறியதை நினைவு கூர்கிறேன்; ''திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய மொழிதான் செம்மொழி'', அந்தத் திருந்திய பண்பும், அந்தச் சீர்த்த நாகரிகமும் மொழிக்கு மட்டுமா பொருந்தும்? அந்த மொழிக்குச் சொந்தக்காரர்கள் பண்புகளற்றவர்களாக, நாகரிக வாழ்க்கை முறைகளை ஏற்காதவர்களாக இருந்திருந்தால், அவர்கள் பேசும் மொழி மட்டும் எப்படிச் செம்மையான மொழியாக இருக்க முடியும்?

ஆகவேதான் நான் பெருமையோடு சொல்வேன். 2,500 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழ்ச் சமுதாயம் பண்புகளும், நாகரிகமும் நிறைந்த சமுதாயமாக விளங்கியிருக்க வேண்டும். அப்படி விளங்கியதால்தான் தமிழ் மொழியும் 2,500 ஆண்டுகளாக ஒரு செம்மொழியின் தகுதிகளோடு கோலோச்சி வந்திருக்கிறது.

**தமிழர் நாகரிகம்**

தமிழர் பண்பு வேறு தமிழ் இலக்கியங்கள் போற்றும் பண்புகள் வேறு என்பதை ஏற்றுக் கொள்ள இயலாது. இலக்கியங்களில் மிகைபடச் சொல்லப்படும், ஆனால் நடைமுறை வேறு என்பதை ஏற்றுக் கொள்ள இயலாது. தமிழர் நாகரிகம்தான் தமிழ் இலக்கியங்களில் விவரிக்கப்படும் நாகரிகம். தமிழரின் பண்பு திருந்திய பண்பாக இருந்தது. அவர்கள் நாகரிகம் சீர்த்த நாகரிகமாக இருந்தது. பேராசிரியர் டாக்டர் தமிழண்ணல் அவர்கள் இது குறித்து எழுதும்போது "சமயம், நுண்கலைகள், தொழில்கள், மருத்துவம், இலக்கியம் போன்றவை தமிழின அடிப்படையில் அமைந்தவை'' என்று எழுதியுள்ளார். இதே உண்மையைக் கலைஞர் அவர்கள் குறிப்பிடும் போது "ஏறத்தாழ 2,500 ஆண்டுகளுக்கும் மேலாக, இலக்கண இலக்கியங்கள் மூலமாகத் தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைகளை உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் சீரிய மொழி தமிழ் மொழி'' என்று எல்லோருக்கும் புரியும்படி எளிய தமிழிலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆக, அந்தக் காலம் உயர்வான காலம், தமிழுக்கும், தமிழருக்கும் அது ஒரு வசந்த காலம்.

நம்முடைய காலத்திற்கு வருகிறேன். இன்று தமிழ் செம்மொழியாகப் போற்றப்படுகிறது. தமிழ் உலக மொழியாக உயர வேண்டும் என்ற ஆசை நமக்கிருக்கிறது. நாளையும், அடுத்த நூற்றாண்டிலும், வரும் ஆயிரம் ஆண்டுகளிலும், அதற்குப் பின்னரும் தமிழ் செம்மொழியாகப் போற்றப்பட வேண்டும் என்பதே நம்முடைய குறிக்கோள்.

**தமிழில் பேச வேண்டும்**

ஒரு மொழியினுடைய ஆதாரமே பேச்சுத்தான். தமிழில் பேசினால் தான் தமிழ் வாழும். வழக்கொழிந்த மொழிகள் என்று பல மொழிகளை அறிஞர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். லத்தின், பாலி மொழிகள் வழக்கொழிந்து விட்டன. கிரேக்க மொழியும் ஏறத்தாழ வழக்கொழிந்த நிலைக்கு வந்தது; இப்பொழுது கிரேக்க நாட்டில் அம்மொழியை மீண்டும் உயிர்ப்பிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வடமொழியின் நிலை என்ன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ஆனால், தமிழ் வாழும் மொழி, இன்றும் தமிழ் நீடூழி வாழ வேண்டுமென்றால், தமிழர்கள் மற்றும் தமிழ்நாட்டில் வாழும் பிற மொழியினர் தமிழில் பேச வேண்டும்.

அதற்காக, அவரவர்கள் தமது தாய் மொழிகளில் பேசக்கூடாது என்று பொருளல்ல. ஆங்கிலம் அல்லது வேறு மொழிகளைக் கற்றுக் கொள்ளக்கூடாது என்று பொருளல்ல. ஆனால் பேசும் போது, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளை மட்டும் விடுத்து, தமிழில் பேச வேண்டும். குறிப்பாக, குழந்தைகள் தமிழில் பேச வேண்டும், பெற்றோர்கள் தம் குழந்தைகளுடன் தமிழில் பேச வேண்டும்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். 'வட்டார வழக்கு' என்றிருக்கிறது. வட்டார வழக்கு மொழியிலும் நல்ல தமிழ்ச் சொற்கள் உள்ளன. அவற்றைப் பயன்

படுத்துவதில் தவறில்லை. நிலத்தைத் தழுவித்தான் வாழ்க்கை முறைகள் அமைகின்றன என்பது தமிழ் இலக்கணம். வட்டார வழக்கு மொழி என்பது எல்லா நாடுகளிலும் உள்ளது. ஆனால் வட்டார வழக்கு என்ற பெயரில் ஒரு மொழி சிதைக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள இயலாது. தமிழ்நாட்டில், குறிப்பாக நகரங்களில், இந்தப் போக்கைக் காண முடிகிறது. தமிழ் மொழியைக் கொச்சையாகப் பேசுவது; அருவருப்பான தமிழில் இல்லாத புதிய சொற்களை உருவாக்குவது; அசிங்கமான அர்த்தங்களைச் சொற்களில் புகுத்துவது என்பதையெல்லாம் வட்டார வழக்கு என்று ஒப்புக் கொள்ள முடியாது. வழக்கு மொழி வழுக்கு மொழியாக மாறி பிறகு இழுக்கு மொழியாக மாறி விடுமோ என்று நான் கவலைப்படுகிறேன்.

**தமிழ் வரை ஊக்கமளிப்பு**

தமிழில் பேச வேண்டும் என்று சொன்னேன். எத்தகைய தமிழில் பேச வேண்டும் என்று கேள்வி எழுகிறது. "தமிழுக்கு அமுதென்று பேர்" என்றான் பாரதிதாசன். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று பாரதி பாடினார். தமிழ் என்றால் இனிமை. இனிக்க இனிக்கப் பேசுபவர்களின் பேச்சைக் கேட்டால், ஆகா. இன்னும் கொஞ்சம் நேரம் இவர் பேச மாட்டாரா என்று ஏங்குகிறோம் அல்லவா ? இனிய தமிழில் பேச வேண்டும். அதேபோல் இனிய தமிழில் எழுத வேண்டும். பேசும் போதும், எழுதும் போதும் சுடுஞ் சொற்களைத் தவிர்த்து, இனிய தமிழில் பேச வேண்டும், எழுத வேண்டும் என்று பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

**"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது"**

என்ற வள்ளுவரின் கேள்வி நம் காதுகளில் பேசும் போதும், எழுதும் போதும் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும்.

புதிய இலக்கியங்கள் தொடர்ந்து படைக்கப்பட்டால் தான் ஒரு மொழி வாழும் மொழியாக இருக்கும். ஆனால், இலக்கியங்கள் மட்டுமே ஒரு மொழியின் வளர்ச்சிக்குப் போதுமானவையல்ல. இலக்கியங்களோடு உறவாடும் வாய்ப்பும், வசதியும் சிலருக்கே கிடைக்கின்றன. அவர்கள் அதிர்ஷ்டக்காரர்கள். மிகப்பெரும் பகுதி மக்களுடைய வாழ்க்கைக்கு அந்த மொழி பயன்பட்டால்தான் அம்மொழி வாழும் மொழியாக இருக்க முடியும். இலக்கியத் தமிழ் ஒரு வகை. அதைப் போல் மருத்துவத் தமிழ், சட்டத் தமிழ், பொருளாதாரத் தமிழ், மேலாண்மைத் தமிழ், புள்ளியியல் தமிழ், அறிவியல் தமிழ், உளவியல் தமிழ், கணிதத் தமிழ், கணினித் தமிழ் என்ற புதிய வகைகளுக்கும் ஊக்கமளித்தால்தான் பல்லாண்டு, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டுகளுக்கு தமிழ் ஓங்கி, வளர்ந்து, உயர்தனிச் செம்மொழியாக விளங்க முடியும்.

நான் குறிப்பிட்ட துறைகளில் போதிய நூல்கள் இல்லை என்பது மிகப் பெரிய குறை. படிப்பவர்களும், பயிற்றுவிப்பவர்களும் இருந்தால்தானே அத்தகைய நூல்களை நாங்கள் எழுத முடியும் என்று நூலாசிரியர்கள் கூறுகிறார்கள். நூல்கள் எழுதி வெளியிடப்பட்டால்தானே நாங்கள் அவற்றைப் படிக்க முடியும் அல்லது பாடநூலாக வைக்க முடியும் என்று ஆசிரியர்களும், மாணவர்களும் கூறுகிறார்கள். எது உண்மையோ, தமிழில் பல துறைகளிலும் பல இயல்களிலும் புதிய நூல்கள் – காலத்திற்குத் தேவையான நூல்கள் – வெளியிடப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

**உலக மொழியாக உயர்ந்து வாழ்க**

இன்று சில பல்கலைக்கழகங்கள் சில இயல்களில் சில பாடநூல்களைப் பதிப்பித்து வெளியிடுகிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். ஆனால், சில பல்கலைக்கழகங்களின் இந்த முயற்சிகள் மட்டும் போதாது, காற்று வந்தால் கொடி அசையுமா, கொடி அசைந்தால் காற்று வருமா என்று எனக்குத் தெரியாது; கவிஞருக்கே தெரிய வில்லை, நமக்கு எப்படித் தெரியும் ? ஆனால், "நூலாசிரியர்களே, நூல்களை எழுதுங்கள், பாடநூல்களை எழுதுங்கள்; பயிற்சி நூல்களை எழுதுங்கள்; பாமரர்களும் படிக்கக் கூடிய அறிவு சார்ந்த, பயன்தரக்கூடிய நூல்களை எழுதுங்கள். பதிப்பாளர்களே புதிய நூல்களை வெளியிடுங்கள். நூலாசிரியருக்கு உரிய சன்மானத்தை நாங்கள் தருகிறோம். முதல் பதிப்பு வெளியிடுவதற்கான செலவை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்" என்று தமிழக முதல்வர் அவர்கள் கொடியசைத்தால், புதிய நூல்கள் மளமளவென்று வெளிவரும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

நூலாசிரியருக்கு ரூ.5 இலட்சம் சன்மானம் தர வேண்டும். பதிப்பாளருக்கு ரூ.5 இலட்சம் பதிப்புச் செலவுகளுக்கும், இலாபமாகவும், தரவேண்டும். ஒரு நூலுக்கு ரூ.10 இலட்சம் தேவைப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் 100 புதிய நூல்களை வெளியிடுவதற்கு ஆண்டுக்கு ரூ.10 கோடி தேவைப்படும். தமிழக அரசுக்கும், தமிழ் புரவலர்களுக்கும் இது பெரிய தொகை அல்ல. ஆண்டுக்கு பத்துக் கோடி செலவழித்தால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு தமிழ் மொழி செம்மொழியாக, உலக மொழியாக ஒளி வீசும் என்று பணிவுடன் தெரிவித்து, இந்தப் பெருஞ்செயலை இந்த மாநாட்டிலேயே முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்க வேண்டும். அதுவே இம் மாநாடு தமிழ் மக்களுக்கு அளித்த மிகப் பெரிய கொடையாக இருக்கும் என்று கூறி,

*தமிழ் வாழ்க, செம்மொழியான*
*தமிழ் மொழியே வாழ்க !*

*உலகமொழியாக உயர்ந்து வாழ்க !*

*என்று வாழ்த்தி நன்றி தெரிவித்து விடை*
*பெறுகிறேன்.*

★ ★ ★



# புதிய வரலாற்றைப் படைத்திடும் புரட்சிகரமான கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் 21 இலட்சம் குடிசை வீடுகள் 6 ஆண்டுகளில் கான்கிரீட் வீடுகளாகின்றன

சுதந்திரத் திருநாள் விழாவையொட்டி,

15-8-2010 அன்று

சென்னை புனித ஜார்ஜ் கோட்டை முகப்பில்

தேசியக் கொடியை ஏற்றிவைத்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

ஆற்றிய உரை.

அருமைத் தாய்மார்களே! அன்புப் பெரியோர்களே! மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே! உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களே! நீதியரசர்களே! அமைச்சர் பெருமக்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே! அரசின் உயர் அதிகாரிகளே! வெளிநாட்டுத் தூதர்களே! அலுவலர்களே! என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே!

அனைவருக்கும் எனது இனிய வணக்கத்தையும், சுதந்திர தின வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

ஏறத்தாழ 200 ஆண்டுகாலம் நடைபெற்ற இந்திய நாட்டுக்கானச் சுதந்திரப் போரில் – விடுதலை முழக்கமிட்ட நமது தியாக சீலர்கள் பலரை அன்னிய அரசு சித்திரவதை செய்து சீரழித்தது; அந்த ஆட்சியை, அண்ணல் காந்தியடிகளின் அறப்போராயுதமாகிய, "அகிம்சை" – "சத்தியாக்கிரகம்" எனும் பிறருக்குத் துன்பம் தராது, தன்னைத்தானே வருத்திக் கொள்ளும் ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் அகற்றி; நமது இந்தியத் திருநாடு 1947, ஆகஸ்டு 15இல் சுதந்திரத் திருநாடாக மலர்ந்தது.

இன்று நம் இந்தியத் திருநாட்டின் 64ஆவது சுதந்திரத் திருநாள்!

நமது சுதந்திரத்தை நிலை நாட்டிட; தமது இன்னுயிரை ஈந்த மாவீரர்கள் அனைவருக்கும் தமிழக



● 1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டம்;

● குறைந்த விலையில் பாமாயில், துவரம் பருப்பு, முதலிய பொருள்கள்;

● மானிய விலையில் 25 ரூபாய்க்கு 10 மளிகைச் சாமான்கள்;

என்ற இத்திட்டங்களின் மூலம் தமிழகத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் உணவுப் பாதுகாப்பு உன்னதமான வகையில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்று உச்சநீதிமன்றம் கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டி ஏடுகள் பாராட்டியிருக்கின்றன!

மக்கள் சார்பில் நன்றிப் பெருக்குடன், வீரவணக்கம் செலுத்துகிறேன்.

சுதந்திரத் திருநாளில் மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றி வைத்திடும் உரிமையை 1974ஆம் ஆண்டு தமிழகத்தின் சார்பில் நான் வலியுறுத்தியபோது, அதை வழங்கிய அன்றைய பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்களுக்கு இதய நன்றியை வழங்கி பெருமிதம் கொள்கின்றேன்.

சுதந்திரம் என்பது தேசியக் கொடியை ஏற்றி வைப்பதற்கு மட்டும் பயன்படுவதல்ல!

நமது நாட்டு மக்கள் நல்வாழ்வு – நலவாழ்வு – வள வாழ்வு பெறத்தக்க திட்டங்களைத் தீட்டி – அவற்றை முறையாகச் செயல்படுத்தி – அரசியல் – கல்வி – சமூக – சமதர்ம – பொருளாதார நிலைகளில் உயர்ந்து – எல்லோர்க்கும் எல்லாப் பயனும் கிடைக்கத்தக்க வகையில் விழிப்போடும், விரைவோடும், கனிவோடும், கடமை உணர்வோடும் செயல்பட வேண்டியது – சுதந்திர நாட்டு அரசின் தலையாய கடமையாகும்.

**உச்ச நீதிமன்றம் பாராட்டு**

இந்த உணர்வோடு 2006 சட்டப்பேரவை தேர்தலுக்குப் பின் ஐந்தாவது முறை, தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், அந்த விழா மேடையிலேயே தேர்தல் அறிக்கையில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தொடங்கினேன். நான்கு ஆண்டுகள் முடிவடைந்து, ஐந்தாவது ஆண்டு ஆட்சி நடைபெறும் இந்த வேளையில், இதுவரை ஆற்றிய பணிகள் அனைத்தையும் நினைவு கூர்வதற்கு காலம் இடம் தராது என்பதால்; ஒருசிலவற்றை மாத்திரம் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத வகையில்;

பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களிலிருந்து தொழிற்பட்டப் படிப்புகளில் இந்த ஆண்டு சேர்ந்துள்ள முதல் தலைமுறையைச் சேர்ந்த ஏறத்தாழ 70 ஆயிரம் இளைஞர்களுக்கு முதல் முறையாகக் கல்விக் கட்டணம் ரத்து;

பள்ளிக் கல்வித் துறைக்கு தமிழக வரலாற்றிலேயே முதல்முறையாக இந்த ஆண்டு 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு!

அரசின் சார்பில் புதிதாக 5 அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள்; 6 மருத்துவக் கல்லூரிகள், 11 பொறியியல் கல்லூரிகள், 14 கலை அறிவியல் கல்லூரிகள் என உயர் கல்விக்கான வாய்ப்புகள் பெருமளவுக்கு உருவாக்கப்பட்டுள்ளன.

கோவையில் 2010 ஜூன் திங்கள் 23 முதல் 27 வரை 5 நாட்களுக்கு தமிழக அரசின் சார்பில் மிகுந்த எழுச்சியோடும் ஏற்றத்தோடும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தப் பட்டது. அதில் ஆயிரக்கணக்கான ஆய்வறிஞர்களும், இலட்சோப இலட்சம் தமிழ் மக்களும் கலந்துகொண்டு, தமிழ் மொழியின் ஆக்கத்திற்கும் மேம்பாட்டிற்கும் தேவையான பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன.

அதுபோலவே, உலகப் புகழ் குவித்துள்ள மாமன்னர் இராஜராஜனின் தஞ்சைப் பெரிய கோவில் கட்டி முடிக்கப்பட்ட ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவினை செப்டம்பர் 25, 26 தேதிகளில் மிகச் சிறப்புடன் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன

இஸ்லாமியர்க்கு 3.5 சதவிகித இடஒதுக்கீடு; அருந்ததியர்க்கு 3 சதவிகித உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டு, நலிந்த சமுதாயங்களைச் சேர்ந்த அவர்கள் உயர்கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். இதுவரை, அரசுத் துறைகளில் 4 இலட்சத்து 65 ஆயிரம் இளைஞர்கள் நிரந்தர வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

- வருமுன் காப்போம் திட்டம்;
- இளம் சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம்;
- பள்ளிச்சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம்;
- பள்ளிச்சிறார் கண்ணொளித் திட்டம்;
- அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் இயங்கும் திட்டம்;
- அவசரகால மருத்துவ ஊர்தி 108 சேவைத் திட்டம்;
- அரசு ஊழியர்க்கான புதிய காப்பீட்டு திட்டம்;
- உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்;

போன்ற பல்வேறு மருத்துவத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, இலட்சக்கணக்கான ஏழை எளியோர் தரமான மருத்துவ வசதிகளை இலவசமாகப் பெற்று வருவதால், பொது சுகாதாரம் பேணுவதில் தமிழகம் முன்னணி மாநிலமென அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

**அன்னை தெரசா நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாட முடிவு**

ஏழையெளியோர், நோய்வாய்ப்பட்டோர், அனாதைகள் ஆகியோர் மீது அன்பும் பரிவும் கொண்டு அவர்களைப் பராமரிப்பதையே தமது வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து, நோபல் பரிசு பெற்ற – மறைந்த அன்னை தெரசா அவர்கள் பிறந்த நூற்றாண்டு 2010 ஆகஸ்ட் 26 அன்று தொடங்குவதையொட்டி தமிழக அரசின் சார்பில் அவரது நினைவைப் போற்றும் வகையில் சிறப்பாக அதனைக் கொண்டாடுவ தென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் தேவைப்படும் இடங்களிலெல்லாம் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுக்குக் குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. கழக அரசு பொறுப்பேற்ற பிறகு இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை 630 கோடி ரூபாய்ச் செலவில் நிறைவேற்றி முடித்திருக்கிறோம். தற்போது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் 1,929 கோடி ரூபாய்ச் செலவில் வேகமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது. இவைகளைத் தொடர்ந்து 1,712 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை, கோவை, நாகை, விருதுநகர், சிவகங்கை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் ஐந்து கூட்டுக் குடிநீர் திட்டங்களையும், ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு நிருவாக ஒப்புதலும் அளிக்கப் பட்டுள்ளது.

தமிழகமெங்கும் புதிய புதிய கட்டடங்கள் – சாலைகள் – பாலங்கள் – மேம்பாலங்கள் எனப் பல்வேறு வகையிலும் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன; குறிப்பாக சென்னை மாநகரில் 14,600 கோடி ரூபாய்ச் செலவில் "மெட்ரோ–ரெயில்" திட்டம் வேகமாக நடை பெற்று வருகிறது.

**ஊரக வேலை உறுதித் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடி**

ஏழை எளியோர் பயன் பெறுகின்ற மத்திய அரசின் திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைத் தமிழக அரசு மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி, இந்தியாவின் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. அதனால், தமிழகம் உச்சநீதி மன்றத்தின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 80 ரூபாய் தினக்கூலி, இந்த அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் பயனாக, 1.1.2010 முதல் 100 ரூபாயாக உயர்த்தி வழங்கிட, மத்திய அரசு முன்வந்துள்ளது என்பதையும் சுட்டிக் காட்டுவதோடு – அதற்காக மத்திய அரசுக்கு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைபோன்ற பல்வேறு திட்டங்களின் வரிசையில் மேலும் ஒரு சில புதிய திட்டங்களைத் தொடங்குவது குறித்து, இந்தச் சுதந்திர தின விழாவில் குறிப்பிட விரும்புகிறேன்.

குடிசை வீடுகளே தமிழகத்தில் இல்லை எனும் புதிய வரலாற்றைப் படைப்பதற்காகத் தமிழகத்தின் ஊராட்சிப் பகுதிகளிலுள்ள 21 இலட்சம் குடிசை வீடுகளையும், தமிழ்நாடு அரசின் முழு நிதியுதவியுடன், 6 ஆண்டுகளில் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் "கலைஞர் வீடு வழங்கும் திட்டம்" எனும் புதிய – புரட்சிகரமான திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், முதல்கட்டமாக நடப்பாண்டில் 3 இலட்சம் குடிசைகளுக்குப் பதில், புதிய கான்கிரீட் வீடுகளைக் கட்டுவதற்காக, வீடு ஒன்றுக்கு 60 ஆயிரம் ரூபாய் வீதம், 1,800 கோடி ரூபாயைத் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி தெரிவு செய்யப்பட்டுள்ள 3 இலட்சம் பயனாளிகளுக்கும் இன்று

முதல் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கான "பணி ஆணைகள்" (Work Orders) வழங்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒவ்வொரு கான்கிரீட் வீட்டிற்காகவும் அரசின் சார்பில் 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுமென்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும்; திருச்சி மாநகரில் நடைபெற்ற இதற்கான தொடக்க விழாவின்போது என்னிடம் தெரிவிக்கப்பட்ட கோரிக்கையினையேற்று, மேலும் 15 ஆயிரம் ரூபாய் கூடுதலாக்கி, ஒவ்வொரு வீட்டிற்கும் 75 ஆயிரம் ரூபாய் வீதம் மானியமாக வழங்கிட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்ற மகிழ்ச்சிகரமான அறிவிப்பையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓட்டைக் குடிசையிலே – ஒன்றரைச் சாண் பாயிலே – கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் – வாடிக்கிடந்த மக்களுக்கு வாழ்வில் விடிவளிக்கும் இத்திட்டத்தை இன்று தொடங்கி வைப்பதில் உள்ளம் எல்லாம் இன்ப வெள்ளம் நிறைந்தது போன்ற உணர்வைப் பெறுகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒருவர் வீதம், இங்கு வந்துள்ள 31 பேருக்கு, இன்று பணி ஆணைகள் வழங்கப்பட்டு, இந்த மகத்தான வீடு வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது என்ற செய்தியை தெரிவிப்பதில் நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

எந்த மாநில அரசும் இதுவரை மேற்கொள்ளாத மிகப்பெரிய திட்டமாக – அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப் படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 10 ஆயிரத்து 104 கிராம ஊராட்சிகளில், 2 ஆயிரத்து 41 கோடி ரூபாய்ச் செலவில், அனைத்து அடிப்படை வசதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்த ஆண்டினை "உலக இளைஞர்கள் ஆண்டு" (International Year of Youth) என அறிவித்திருப்பதையொட்டி; வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெறுவதற்கேற்ற பயிற்சிகளைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன், புதிய திட்டம் ஒன்றும் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு படித்த இளைஞர்கள்– பொறியியல், இளங்கலை முதுகலைப் பட்டம் பெற்றுள்ள இளைஞர்கள் ஆகியோருக்கு வேலைவாய்ப்புக்கான திறன் வளர்ப்புப் பயிற்சி இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும். பயிற்சி பெற்ற இளைஞர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களில் உரிய வேலைவாய்ப்புகளைப் பெற இத்திட்டம் வழி வகுக்கும்.

நடப்பு ஆண்டில் ஒரு இலட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவிருக்கும் இத்திட்டத்தைச் செயல்படுத்த முதற்கட்டமாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கான அரசு ஆணை இந்நன்னாளில் வெளியிடப்படுகிறது.

தமிழகத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில், கடந்த நான்காண்டுகளில் மட்டும் 3 ஆயிரத்து 465 கோடி ரூபாய் மதிப்பிலான சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் சாலைகளை நேர்த்தியான முறையில் சீரமைத்திட, இந்த ஆண்டில் சிறப்பு நிதியாக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழகத்தின் புகழ் தரணியெங்கும் பரவிட உழைக்கும் தமிழக அரசு**

தமிழகம் முழுவதிலும் பயன்படுத்தப் பட்டுவரும் பல விவசாய பம்பு செட்டுகள், திறன் குறைந்தவையாக இருப்பதால், மின்சாரம் அதிகம் செலவாகிறது. இதுவும் மின் பற்றாக் குறைக்கு ஓரளவு காரணமாகும். இத்தகைய பம்பு செட்டுகளுக்கு பதில், திறன்மிக்க புதிய பம்பு செட்டுகளைப் பொருத்துவதன்மூலம், 20 சதவீத அளவுக்கு மின்சாரத்தைச் சேமித்திட முடியும். சிறு, குறு விவசாயிகளின் பம்பு செட்டுகளில் உள்ள பழைய மின் மோட்டார்களை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக, புதிய மின் மோட்டார்கள் அரசின் சார்பாக இலவசமாகப் பொருத்தித் தரப்படும். மற்ற விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்துடன், புதிய மோட்டார்கள் பொருத்தித் தரப்படும்.

இப்படி தமிழகம் வளம்பெற்று – மக்களின் வாழ்க்கைத் தரம் உயர – ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் மெய்வருத்தம் பாராமல் – கண் துஞ்சாமல் – பசிநோக்காமல் – சிலரால் அள்ளி வீசப்படும் அவதூறுக் கணைகளை அலட்சியப்படுத்தி;

ஆக்க பூர்வமான பணிகளால், நமது தாய்த் தமிழகத்தின் புகழ் தரணியெங்கும் பரவி நிலைபெற வேண்டும் எனும் ஒரே நோக்கத்துடன்;

"காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது" எனும் முதுமொழிக்கொப்ப,

ஒவ்வொரு நொடியும் தமிழக மக்களுக்குப் பயன் தரவேண்டும் எனும் எண்ணத்தோடு உழைத்துவரும் நிலையில்;

உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது சுதந்திர தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்!

நன்றி; வணக்கம்! ★

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

2010 ஆகஸ்ட் 27,28 ஆகிய நாட்களில்

ஆற்றிய உரை.

**மா**ண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
தலைமைச் செயலாளர் அவர்களே!
அரசு உயர் அலுவலர்களே!
மாவட்ட ஆட்சித் தலைவர்களே!
நண்பர்களே!
அனைவருக்கும் எனது வணக்கம்.

2006–இல் ஆட்சிப் பொறுப்பேற்றதுமுதல், கடந்த நான்கு ஆண்டுகளில் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை எல்லாம் வாய்மையுடன் நிறைவேற்றி – வாக்குறுதியில் இடம் பெறாத பல புதிய திட்டங்களையும் உருவாக்கி தமிழக மக்களின் மனமார்ந்த பாராட்டுகளை இந்த அரசு தொடர்ந்து பெற்று வருகிறது என்பதனை நானும், நீங்களும் நன்கு அறிவோம்! இந்தப் பணிகள் மேலும் தொடரவேண்டும்; அதற்குரிய வகையில் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் மக்களுக்கு எந்தெந்த வகையில் பயன் அளிக்கின்றன; அவை, மேலும் பயனளித்திட எந்தெந்த வகையில் செயலாற்றிட வேண்டும்; இந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களை எப்படி குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிறைவேற்றிட வேண்டும் என்பதைப் பற்றி முடிவு செய்வதற்கும்; அதில் கள அனுபவங்களோடு நீங்கள் வழங்கும் ஆலோசனைகளைக் கேட்டு அறிவதற்கும் வாய்ப்பாக இந்த மாநாடு நடைபெறுகிறது.




ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம், எரிவாயு இணைப்புடன் அடுப்புகள் வழங்கும் திட்டம், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டம், வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் என்பன போன்ற திட்டங்களையெல்லாம் எப்படி

இவர்களால் தொடர்ந்து செயல்படுத்த முடியும் – என்று அய்யப்பாடு எழுப்பியோரை எல்லாம் புறந்தள்ளி, மக்கள் பணியே மகேசன் பணி என்பதை மட்டுமே கருத்தில் கொண்டு, அந்தத் திட்டங்களை எல்லாம் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறோம்.

கடந்த ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்தான் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை நடத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, கோவை மாநகரில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளோம். பல இலட்சம் மக்கள் கூடிய அந்த மாநாட்டில் அனைத்துப் பணிகளையும் மிகச் சிறப்பாக மேற்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் அனைவரையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

ஆதிதிராவிடர் சமுதாய மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்திவரும் இந்த அரசு, இதுவரை இல்லா அளவில் 2010–2011ஆம் நிதியாண்டில், ஆண்டுத் திட்ட மொத்த நிதியில், 19 விழுக்காட்டிற்கும்மேல் 31 ஆயிரத்து 828 கோடி ரூபாயை ஆதிதிராவிடர் நலனுக்காக ஒதுக்கீடு செய்து, பல சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. ஒதுக்கப்பட்ட தொகை முழுதும் ஆதிதிராவிடர் நலனுக்காகச் செலவழிக்கப்பட வேண்டும் என்பது இந்த அரசின் குறிக்கோளாகும்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே அனைத்து நியாயவிலைக் கடைகள் மூலம் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியையும், குறைந்த விலையில் மளிகைப் பொருள்களையும் வழங்கி மக்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு வழங்கும் ஒரே மாநிலம் தமிழகம் மட்டுமே என்ற பெருமையை நாம் பெற்றுள்ளோம். இச்சூழ்நிலையில், நியாய விலைக் கடைகள் பொதுமக்களின் தேவைகளையும், எதிர்பார்ப்பு களையும் நிறைவு செய்திடும் வண்ணம் மேலும் நேர்த்தியான முறையில் செயல்படுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழு ஈடுபாட்டுடன், ஆக்கப்பூர்வமாகச் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 52 இலட்சத்து 80 ஆயிரம் பெட்டிகள் கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்டு, இதுவரை ஒரு கோடியே 35 இலட்சத்து 86 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எல்லோர்க்கும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கி; வரும் டிசம்பர் மாதத்திற்குள் இலக்கை நிறைவேற்றிட அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் முனைப்புடன் செயல்பட வேண்டுமென விரும்புகிறேன்.

உடல் உழைப்பையே மூலதனமாகக் கொண்டு வேலை செய்து வரும் விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியம் உட்பட 32 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் 2 கோடியே 7 இலட்சத்து 6 ஆயிரத்து 375 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, 18 இலட்சத்து 20 ஆயிரத்து 326 அமைப்பு சாராத் தொழிலாளர் குடும்பங்களுக்கு சுமார் 855 கோடியே 43 இலட்சம் ரூபாய் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குடிசைகளே இல்லை எனும் நிலையை உருவாக்கும் நோக்கில், மாநிலம் முழுவதிலும் உள்ள 21 இலட்சம் குடிசைகளையும் கான்கிரீட் வீடுகளாக மாற்றிடும், **'கலைஞர் வீடு வழங்கும் திட்டம்'** தொடங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தில், முதற்கட்டமாக இந்த நடப்பு நிதியாண்டில் ஒரு பயனாளிக்கு 75 ஆயிரம் ரூபாய் மானியத்துடன் 2 ஆயிரத்து 250 கோடி ரூபாய்ச் செலவில் 3 இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டித் தர திட்டமிடப்பட்டுள்ளது. முழுவதும் மாநில அரசின் நிதியில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து 12 ஆயிரத்து 618 ஊராட்சிகளிலும் ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த மகத்தான திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சியர்கள் மிகுந்த முன்னுரிமை அளித்து, முனைப்புடன் செயலாற்றி 3 இலட்சம் கான்கிரீட் வீடுகளையும் 31.3.2011க்குள் கட்டி முடித்திட உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்திரா காந்தி நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடியிருப்பும் மத்திய அரசு வழங்கும் 33,750 ரூபாயுடன் தமிழக அரசு வழங்கும் 26,250 ரூபாயையும் சேர்த்து இதுவரை 60 ஆயிரம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒரு குடியிருப்புக்கு தமிழக அரசு வழங்கும் நிதி 26,250 ரூபாய் என்பதில், மேலும் 15,000 ரூபாய் கூடுதலாகச் சேர்த்து இனிமேல் 41,250 ரூபாயாக வழங்கிட தமிழக அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்திரா காந்தி நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ்; ஒவ்வொரு குடியிருப்பையும் இனி 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் 2,514 ஊராட்சிகளில் 507 கோடியே 82 இலட்சம் ரூபாய்ச் செலவில் இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்துப் பணிகளையும் விரைவாகவும், தரமாகவும் நிறைவேற்றிட மாவட்ட ஆட்சியர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நிதியாண்டின் இறுதியில் இத்திட்டம் நிறைவுறும்பொழுது, நாட்டிலேயே ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு நூலகம் மற்றும் ஒரு விளையாட்டு மைதானம் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்த ஒரே மாநிலம் என்ற பெருமையினைத் தமிழ்நாடு பெறும் என்பதை நினைவில் கொண்டு இத்திட்டப் பணிகளில் சிறப்புக் கவனம் செலுத்திட வேண்டுகிறேன்.



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பதிவு செய்த அனைவருக்கும் தொடர்ந்து பணிகள் வழங்கிடுவதையும், தொழிலாளருக்குரிய வாராந்திர ஊதியத் தொகையில் – குறைபாடுகளின்றிச் சரியாகவும், தாமதமின்றியும் வழங்கப்படுவதையும் மாவட்ட ஆட்சியர்கள் இடைவிடாது கூர்ந்து கண்காணித்திட வேண்டுகிறேன்.

நிலவரி, நன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 50 ரூபாய் என்று இருந்ததை 5 ரூபாய் என்றும், புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 15 ரூபாய் என்று இருந்ததை 2 ரூபாய் எனவும், இந்த அரசு குறைத்ததால் 2009 ஜூலை முதல் ஏறத்தாழ 50 இலட்சம் விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள்.

செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பம் நெல் உற்பத்தித் திறனை 30 சதவீதம் வரை உயர்த்தியுள்ளது. எனவே, இத்தொழில்நுட்பத்தை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி அதிக பரப்பில் செம்மை நெல் சாகுபடி மேற்கொள்ளத் தேவையான அனைத்து முயற்சிகளையும் ஊக்கப்படுத்திட வேண்டுகிறேன்.

தென்னிந்திய தென்னைச் சாகுபடியாளர்கள் சங்கத்தின் கோரிக்கைகளையேற்று தென்னை விவசாயிகள் நல வாரியம் அமைக்கப்படுமென்றும், தென்னை விவசாயத்தை தோட்டக் கலைத் துறையின் கீழ் சேர்க்கப்படும் என்றும், விவசாயிகளிடமிருந்து உரித்த தேங்காயைக் கொள்முதல் செய்வது குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்திருக்கிறேன். இவற்றின் மீது தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் 2,514 ஊராட்சிகளில் 507 கோடியே :2 இலட்சம் ரூபாய்ச் செலவில் இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்துப் பணிகளையும் விரைவாகவும், தரமாகவும் நிறைவேற்றிட மாவட்ட ஆட்சியர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.**

ஏழை எளிய மக்களுக்கு உயிர்காக்கும் உயர் சிகிச்சைகளை உடனடியாக அளித்திடும், **'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்'** 23.7.2009 அன்று தொடங்கப்பட்டது. 19-8-2010 முடிய இத்திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 1 கோடியே 33 இலட்சத்து 60 ஆயிரத்து 439 குடும்பங்களில் இருந்து; ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 81 ஏழை மக்களுக்கு 470 கோடியே 99 இலட்சம் ரூபாய்ச் செலவில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகளைச் செய்து சாதனை படைத்துள்ளது இந்த அரசு.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய சமூகநலத் திட்டங்களில் வழங்கப்படும் நிதியுதவியை 1.4.2010 முதல் 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியுள்ளது இந்த அரசு. 2006-2007 முதல் இந்நாள் வரை பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் மொத்தம் 4 இலட்சத்து 27 ஆயிரத்து 787 பெண்களுக்கு 663 கோடியே 76 இலட்சம் ரூபாய் திருமண நிதியுதவி வழங்கியதோடு, நடப்பு ஆண்டிற்கு மேலும் 300 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏழை எளிய பெண்களின் வாழ்வு மலர வழிவகுக்கும் இத்திட்டங்களின் மூலம் உரிய நிதி, முழுவதும் - குற்றங்குறைகளுக்கு இடமில்லாமல் உரிய நேரத்தில் உரியவர்களுக்கு வழங்கப்பட விழிப்போடு செயலாற்றிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது சிந்தையில் எப்பொழுதும் நிறைந்திருப்பது மக்கள் நலப் பணிகள் மட்டும் தான். ஒவ்வொரு நொடிப் பொழுதையும் மக்கள் நலனுக்காகவே நான் செலவழித்து வருகிறேன். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் - கிராமத்தில் பிறந்தவராயினும், நகரத்தில் பிறந்தவராயினும், அவர் - எல்லா வசதி வாய்ப்புகளையும் பெற்று வாழ வேண்டும்; அவர்கள் அப்படி வாழ்ந்திடத் தேவைப்படும் அடிப்படை வசதிகள் ஒவ்வொன்றையும் அவர்களுக்கு அளித்தாக வேண்டும் என்பதுதான் இந்த அரசின் குறிக்கோள்.

அதற்கேற்ப, கடந்த நான்காண்டுகளில் தமிழக அரசு செயல்படுத்திவரும் சமூக நலத் திட்டங்களால் மனிதவளக் குறியீட்டில் நாம் முன்னிலையில் இருக்கிறோம். தமிழகத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஏதாவது ஒரு நலத்திட்ட உதவியைப் பெற்று மகிழ்ந்துள்ளது என்பது இந்த ஆட்சிக்குக் கிடைத்திருக்கும் நற்சான்றிதழ் ஆகும்.

உணவு உற்பத்தி தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. தொழில் துறை, சிறுதொழில் துறை, தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றில் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறோம்.

இவை காரணமாக, தமிழகத்தை மத்திய அரசு பாராட்டுகிறது. உச்சநீதிமன்றம் பாராட்டுகின்றது; அயல்நாட்டுப் பிரதிநிதிகள் பாராட்டுகிறார்கள்; அண்டை மாநில அரசுகள் பின்பற்றுகின்றன. இந்தப் பாராட்டுகளையெல்லாம் தொடர்ந்து நாம் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அந்த அளவுக்கு நம்முடைய பணியை மேற்கொள்ளத் திட்டமிடும் நிகழ்வாக இந்த மாநாடு அமைய வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்து, மாநாட்டை தொடங்கி வைத்து, உங்களுடைய ஆலோசனைகளை எதிர்நோக்கி அமைகிறேன்.

சென்னை, தலைமைச் செயலகத்தில்
28–8–2010 அன்று நடைபெற்ற
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்
காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**
ஆற்றிய தொடக்க உரை

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
தலைமைச் செயலாளர் அவர்களே!
காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே!
அரசு உயர் அலுவலர்களே!
மாவட்ட ஆட்சித் தலைவர்களே!
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களே!
காவல்துறை அலுவலர்களே!
நண்பர்களே!
அனைவருக்கும் எனது வணக்கம்.

இன்று நடைபெறும் மாநாட்டின் வாயிலாக உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்".

"குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்."

– என்பது அய்யன் திருவள்ளுவர் வழங்கியுள்ள அறிவுரை.

இந்த அறிவுரையின்படி தமிழகத்தில் வாழும் குடிமக்கள் ஒவ்வொருவரையும் பாதுகாத்திட வேண்டும்; பொதுமக்களின் அமைதியான வாழ்வுக்குப் பங்கம் விளைத்திடும் எவரையும் –எந்தவிதமான சலுகையும் காட்டாமல் அவரைச் சட்டத்தின்முன் நிறுத்தி, அவருக்கு உரிய தண்டனைகளை வழங்குவதன் மூலம் நாட்டில் பொது அமைதியை – பொது மக்களின் நல்வாழ்வினை நிலைநாட்டிட முடியும் என்று இந்த அரசு கருதுகிறது; இதனை இதயத்தில் தாங்கிய வண்ணமே காவல் துறை பணிகளை நிறைவேற்றி வருகிறது. இந்த வகையில் அரசுக்குத் துணை புரிந்துவரும் காவல் துறை அதிகாரிகளாகிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளாக சட்டம் ஒழுங்கு சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. காவல்துறையினர் தொடர்ந்து குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் முனைந்து செயல்பட்டு, குற்றங்கள் புரிவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, ஏழை, எளிய மக்களின் உரிமைகளுக்கும், நலன்களுக்கும் பாதுகாவலர்களாகத் திகழ்ந்து, தமிழகத்தை அமைதியின் உறைவிடமாக்கி, அரசின் நலத்திட்டங்கள் தங்குதடையின்றி மக்களைச் சென்றடைவதற்குப் பெரிதும் துணைபுரிய இந்த மாநாடு வழிவகுக்கும் என நம்புகிறேன்.



மாநிலத்தில் பொது அமைதியைப் பாதிக்கும் வகையில் சாதி, மத பேதங்களைத் தூண்டிவிட்டுப் பூசல்களை ஏற்படுத்துவோர் மீதும்;

கள்ளச்சாராயம், போதை மருந்து, மணல் மற்றும் ரேஷன் அரிசி கடத்தல் போன்ற சமுதாயக் குற்றங்களில் ஈடுபடுவோர் மீதும்;

சொத்துக்களை ஆக்கிரமித்தல், காலி செய்தல், ஆட்களைக் கடத்தி, மிரட்டி பணம் பறித்தல் போன்ற பொதுமக்களை நேரடியாகப் பாதிக்கும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீதும்;

பெண்களுக்கெதிரான குற்றங்களில் ஈடுபடுவோர் மீதும்

எந்தவிதமான பாரபட்சமுமின்றித் தடுப்புக் காவல் சட்டங்களின் கீழான நடவடிக்கைகள் உட்பட அனைத்து வகையிலும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொய்வின்றித் தொடர்ந்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

பயங்கரவாதச் செயல்களை எதிர் கொள்வதற்காக நாட்டிலேயே முதன்முதலாக –

நெருக்கடி கால மேலாண்மைத் திட்டம் (Crisis Management Plan),

செயலாற்றுதற்குரிய வரையறுக்கப்பட்ட நடைமுறை களைத் (Standard Operating Procedures) தயார் செய்து,

அதிரடி நடவடிக்கைக் குழுக்கள் (Quick Reaction Teams),

வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் குழுக்கள் (BDDS)

– ஆகியவற்றை உருவாக்கிச் செயல்படுத்தியும், தமிழ்நாடு காவல் துறை, கப்பற்படை, கடலோரப் பாதுகாப்புப் படை ஆகியவை

"Operation Barricade",
"Operation Rakshak",
"Operation Hamla"

– என்ற பெயர்களில் கூட்டு ஒத்திகைப் பயிற்சிகளை நடத்தி, நெருக்கடியான காலங்களில் ஒருங்கிணைந்து செயல்படும் திறத்தை மேம்படுத்தியும் நமது மாநிலம் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கி வருகிறது.

இத்தகைய முறையில் துல்லியமாகத் திட்டமிட்டு, ஒருங்கிணைந்து செயல்பட்டுத் தமிழகத்திற்குப் புகழ் சேர்த்துவரும் காவல்துறை அதிகாரிகளை மெத்தவும் பாராட்டுகிறேன்.

காவல் துறையினர், வழக்குகளில் குற்றவாளிகளைக் கைது செய்யும் போதும், விசாரணைக்கு உட்படுத்தும் போதும், தனி மனித சுதந்திரமும், மனித உரிமைகளும் பாதிக்கப்படாத வகையில் உச்சநீதிமன்றமும், அரசும் அவ்வப்போது அளித்து வரும் அறிவுரைகளைத் தவறாது கடைப்பிடித்து, குறிப்பாகக் காவல் கைதி மரணங்கள் எதுவும் நிகழ்ந்து விடாமல் விழிப்புடன் கடமையாற்றிட வேண்டும்.

பொதுமக்கள் காவல் நிலையங்களுக்கு வரும்போது அவர்களைக் கண்ணியமாக நடத்துவதுடன், அவர்கள் அளிக்கும் புகார்களின் பேரில்

**“தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளாக சட்டம் ஒழுங்கு சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. காவல்துறையினர் தொடர்ந்து குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் முனைந்து செயல்பட்டு, குற்றங்கள் புரிவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, ஏழை, எளிய மக்களின் உரிமைகளுக்கும், நலன்களுக்கும் பாதுகாவலர்களாகத் திகழ்ந்து, தமிழகத்தை அமைதியின் உறைவிடமாக்கி, அரசின் நலத்திட்டங்கள் தங்குதடையின்றி மக்களைச் சென்றடைவதற்குப் பெரிதும் துணைபுரிய இந்த மாநாடு வழிவகுக்கும் என நம்புகிறேன்.”**

எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் வழக்குகளைப் பதிவு செய்து, மேல்நடவடிக்கைகள் எடுத்து, குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் பெற்றுத்தந்து சட்டத்தின் மாட்சிமை மீது மக்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையை ஏற்படுத்திட வேண்டுமெனக் காவல்துறை அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையினர், குற்றத்தடுப்பு செயல்களிலும், கண்டுபிடிக்க முடியாத வழக்குகளிலும் தீவிர கவனம் செலுத்தித் தலைமறைவாக இருந்து வரும் எதிரிகளைத் தேடி உடனுக்குடன் கைது செய்திட வேண்டும். பொதுமக்களிடையே குற்றங்கள் நிகழாமல் தடுப்பதுகுறித்த விழிப்புணர்வை வளர்ப்பதுடன், குற்றத்தடுப்பு நடவடிக்கைகளில் பொதுமக்களை ஈடுபடுத்தி, எங்கும் குற்றங்கள் நிகழாத இயல்பான சூழ்நிலை உருவாக விழிப்புடன் செயலாற்றிட வேண்டும்.

காவல்துறையினர், மக்களின் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் அணுகி, அவர்களது அனைத்துக் குறைகளையும் தீர்த்து வைத்து, பொதுமக்கள் தங்களை இனிய நண்பர்களாகக் கருதி மதிக்கும் வகையில் பணியாற்றிட வேண்டும். அப்படிப் பணியாற்றுவதன்மூலம் காவல்துறைப் பணிகளில் தமிழகத்திற்கு இருந்து வரும் புகழையும், பெருமையையும் தொடர்ந்து கட்டிக் காத்திட முடியும் என்று நம்புகிறேன்.

காவல் துறையில் சார் நிலையில் உள்ள – குறிப்பாக களத்தில் உள்ள காவலர்கள், தலைமைக் காவலர்கள் போன்றோர், பணிபுரியும்போது தங்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைந்து, தங்களைக் காப்பதற்கு உயரதிகாரிகள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையுடன் பணியாற்றும் வகையில், சார்நிலை அலுவலர்களிடம் பரிவுகாட்டி, அவர்களை அரவணைத்து வழிகாட்டி காவல்துறையின் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றிட முன்வர வேண்டுமென உயர் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

2006இல் இந்த ஆட்சி அமைந்த பிறகு, 15 ஆயிரத்து 84 காவலர்களும், 950 உதவி ஆய்வாளர்களும் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 9 ஆயிரம் காவலர்களையும், 1,095 உதவி ஆய்வாளர்களையும் நியமனம் செய்திட உரிய தேர்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. காவல் துறையில் பணிபுரிவோர்க்கு, கடந்த 4 ஆண்டுகளில், 362 கோடி ரூபாய்ச் செலவில் 7 ஆயிரத்து 596 காவலர் குடியிருப்புகள் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 330 கோடி ரூபாய்ச் செலவில் 5 ஆயிரத்து 787 குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை விரைவாக முடித்து, பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பணிகளை விரைவாகவும், செம்மையாகவும் நிறைவேற்றிட வேண்டும்.

முதியோருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை முற்றிலும் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கணினியைப் பயன்படுத்தி செய்யப்படும் குற்றங்களைத் தடுத்து, குற்றம் புரிந்தோர் மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்வதில் தனிக்கவனம் செலுத்திட வேண்டும்.

சாலை விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்கும் வகையில் சாலை விதிகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, சாலைக் குறியீடுகள், போதிய விளக்கு வசதிகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திடவும், பொதுமக்களுக்கு சாலைப் பாதுகாப்பு விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் தீவிர கவனம் செலுத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அரசின் இத்தகைய கருத்துகளோடு தமிழகம் அனைத்து வகையிலும் சீரான முன்னேற்றத்தைக் காணும் வகையில், தமிழகக் காவல்துறை ஆற்றிவரும் பணிகளை – அளித்து வரும் ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்தி மேம்படுத்துவதற்குரிய ஆலோசனைகளை நீங்கள் பணியாற்றும் மாவட்டங்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டுவரும் உங்கள் அனுபவங்களையொட்டி இந்த அரசுக்கு எடுத்துரைத்திடுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை**

காலையிலிருந்து இதுவரையிலே பல்வேறு மாவட்டங்களின் காவல் துறை அதிகாரிகளும் மாநில அளவில் உள்ள காவல் துறை அதிகாரிகளும் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும் என்ற நிலையில் எடுத்துள்ள செயல்களையும், எடுக்க வேண்டிய செயல்களையும் பற்றி விரிவாகப் பேசியிருக்கிறீர்கள். காவல் துறை ஒன்று தான் எந்தவொரு அரசானாலும் அந்த அரசில் முதன் முதலாக எதிர்க் கட்சிகளால் குற்றஞ்சாட்டப்படுகின்ற ஒரு துறையாகும். அதிலே நாம் எந்த அளவுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும், குற்றங்கள் எதுவும் நம் மீது சுமத்தப்படாமல் இருப்பதற்கு – அவைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் கவனத்துடன் இருக்க வேண்டும்; மிகுந்த பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

“ **ஒரு நாட்டினுடைய – குறிப்பாக, மாநிலத்தினுடைய அமைதி, நல்வாழ்வு, மக்களின் உரிமைகள் காப்பாற்றப்படுகின்ற நிலை – இவைகளெல்லாம் அரசின் பலதரப்பட்ட அதிகாரிகளின் மூலம் நடத்தப்பட்டாலும்கூட, எல்லாவற்றையும் மிகுந்த பொறுப்போடு கவனிக்க வேண்டிய – பாதுகாக்க வேண்டிய அந்தப் பொறுப்பு காவல் துறையிடம் இருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது.** ”

ஒரு நாட்டினுடைய – குறிப்பாக, மாநிலத்தினுடைய அமைதி, நல்வாழ்வு, மக்களின் உரிமைகள் காப்பாற்றப்படுகின்ற நிலை – இவைகளெல்லாம் அரசின் பலதரப்பட்ட அதிகாரிகளின் மூலம் நடத்தப்பட்டாலும்கூட, எல்லாவற்றையும் மிகுந்த பொறுப்போடு கவனிக்க வேண்டிய – பாதுகாக்க

வேண்டிய அந்தப் பொறுப்பு காவல் துறையிடம் இருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது.

எனவேதான், இன்றைக்கல்ல; நான் முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அந்தக் காலத்திலேயிருந்து, இதுவரையிலே காவலர்களுடைய கோரிக்கைகள், அவர்களுடைய தேவைகள், இவைகளை நிறைவேற்றுவதில் மிகுந்த அக்கறை கொண்டவனாகவும், அதை முறையாகச் செயல்படுத்துவதில் ஆர்வம் கொண்டவனாகவும் இருக்கிறேன். இன்றைக்கு இந்தியாவிலேயே, மூன்று போலீஸ் கமிஷன்களை அமைத்து, காவல் துறையிலே உள்ளவர்களுடைய கவலைகள் நீங்கவும், அவர்கள் மேலும் பொறுப்புகளை ஏற்கக் கூடிய அளவிற்கு ஆறுதலான பல காரியங்கள் நடைபெறவும் வழிவகுத்தேன் என்பதை நீங்கள் மறந்திருக்க முடியாது.

இப்போதும் நான் அவற்றைச் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், அடுத்தடுத்து ஒரு மாநிலத்திலே ஏற்படக்கூடிய, அமைதிக்குக் குந்தகமான அல்லது தேவையற்ற பிரச்சினைகளை எழுப்பக்கூடிய எதுவானாலும், அவற்றைக் களைவதும், கட்டுப்படுத்துவதும் – மாநிலத்திலே உள்ள அரசு செய்கின்ற நற்காரியங்கள் மக்கள் மன்றத்தில் செல்லக்கூடிய வகையில் பயன்பெறக் கூடியவர்களாகவும் காவல் துறை நண்பர்கள் இருக்க வேண்டும் என்பது மிகமிக முக்கியமான பணியாகும்.

இன்றைக்குக் காலையிலேயிருந்து ஒவ்வொருவரும் ஆற்றிய உரையை – எடுத்துக் காட்டிய நிலைமைகள் – எப்படிக் குற்றங்களைக் களைவதற்கு முயற்சிகள் எடுத்தோம் என்றும், முனைப்பான நடவடிக்கைகளை எடுத்தோம் – என்பவைகளைப் பற்றியெல்லாம் நீங்கள் கூறியிருக்கிறீர்கள். என்றாலும்கூட, இவைகளையும்மீறி, நாங்கள் கவலைப்படுகின்ற அளவிற்கு சில நிகழ்வுகள் மாநிலத்திலே அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை மறந்துவிடக் கூடாது. காலையிலே எழுந்து பத்திரிகைகளைப் பார்க்கும்போது, இன்றைக்கு என்ன செய்தி – யாரைப் பற்றி வருகிறதோ – எப்படி வருகிறதோ ? – நம்முடைய அரசைக் குறை கூறுகின்ற அளவிற்குச் செய்தியா ? என்பதையெல்லாம் பரபரப்போடு பார்க்க வேண்டியிருக்கிறது.

காரணம், அப்படி உடனுக்குடன் பார்த்து, அதைத் தீர்த்து வைப்பதுதான் ஒரு அரசின் கடமை. அந்தக் கடமையை அரசு நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டிய ஆர்வம் உங்களுக்கும் – காவல் துறையிலே உள்ள மற்ற அதிகாரிகளுடைய பொறுப்புணர்விலும், கடமையுணர்விலும் சேர்ந்து இருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது.

அவற்றையெல்லாம் உங்களுக்கு ஞாபகப்படுத்து வதற்குக் காரணம், இது மிக மிக முக்கியமான நேரம். நாம் கடந்த ஆண்டுகளில் பல முறை சந்தித்திருக்கிறோம் என்றாலும்கூட, அந்த மாநாடுகளிலே நம்முடைய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கிறோம் என்றாலும்கூட, இது எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு மாநாடு. ஆம் – நாம் மிக விரைவில் தமிழ்நாட்டிலே தேர்தலைச் சந்திக்க இருக்கிறோம்.

தேர்தல் நேரம் பார்த்து அரசுக்கு ஏதாவது களங்கம் ஏற்படுத்த வேண்டும், பழி சுமத்த வேண்டும், தேவையற்ற பிரச்சினைகளை – தெருவுக்குத் தெரு, வீதிக்கு வீதி, ஊருக்கு ஊர், மாவட்டத்திற்கு மாவட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று கருதுகின்ற சில எதிர்கட்சியினர் இருப்பார்கள். நான் எல்லா எதிர்க்கட்சியினரையும் சொல்ல மாட்டேன். இதற்கென்றே, தங்களுக்கு தொண்டர்கள் இருக்கிறார்களோ இல்லையோ, கிளைகள் இருக்கின்றனவோ இல்லையோ, அமைப்புகள் இருக்கின்றனவோ இல்லையோ ஆனால் இது போன்ற காரியங்களில் விஷமத்தான பிரச்சாரங்களில் ஈடுபட்டு, பிரச்சினைகளை உருவாக்கி – சாதிக் கலவரம், மதக் கலவரம் போன்ற இத்தகைய செயல்களால் அரசுக்கு எப்படி கெட்ட பெயரை உருவாக்கலாம், அரசை நிர்வகிக்கின்ற அதிகாரிகளுக்கு எப்படி கெட்ட பெயரை உருவாக்கலாம் என்று எண்ணுகின்ற நிலைமை இருப்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் அவைகளை எல்லாம் முன் கூட்டியே தவிர்க்க வேண்டுமென்று சொல்ல மாட்டேன், ஏனென்றால் ஒரு சுதந்திர நாட்டில் பேச, எழுத எல்லோருக்கும் உரிமை உண்டு. எந்த வகையில் எழுதலாம் என்பதற்கு ஒரு அளவும் உண்டு. இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அரசைக் குறை கூறுகிறார்கள் என்றால் – அரசை பழி சுமத்துகிறார்கள் என்றால் – அரசுக்கு எதிர்ப்பான

காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்றால் அவர்களை உடனடியாக அடக்கி ஒடுக்க வேண்டுமென்று எண்ணுகின்ற ஆட்சி அல்ல இந்த ஆட்சி என்பதை நீங்களே நன்கறிவீர்கள். எந்த அளவிற்கு விட்டுக் கொடுத்துப் போக வேண்டுமோ அந்த அளவுக்கு விட்டுக் கொடுத்து – அந்த அளவுக்கு ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற ஒரு ஆட்சி தான் இந்த ஆட்சி. இந்த உண்மையை நீங்கள் மனதார உணர்வீர்கள். உணர்ந்ததை வெளிப்படையாக மக்களுக்கு எடுத்துச் சொல்ல உங்களால் முடியாவிட்டாலுங்கூட, உணர்ந்ததை உளமார உணர்ந்ததை, நீங்கள் செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள், என்னுடைய கோரிக்கை. உங்களுடைய கோரிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றி வருகின்ற இந்த அரசுக்கு பிரதி உபகாரமாக நீங்கள் எங்களுடைய கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்க மாட்டேன். என்னுடைய கோரிக்கை எல்லாம், கட்சி சார்பற்ற முறையில் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நீங்களும் நானும் சேர்ந்து தமிழ்நாட்டிலே பொது அமைதியை நிலவச் செய்வோம், ஜனநாயகம் தமிழகத்திலே காப்பாற்றப்பட பாடுபடுவோம் என்பது தான் என்னுடைய கோரிக்கை. அதைத் தான் நான் உங்கள் முன்னால் வைக்கிறேன். அந்த அளவிற்கு நாம் பாடுபட வேண்டும்.

தமிழ்நாட்டிலே இந்த அரசு பொறுப்பேற்று என்னைப் பொறுத்தவரையில் ஐந்து முறை முதலமைச்சராக இருந்து ஆற்றிய பணிகளை சிந்தாமல், சிதறாமல் நீங்கள் எண்ணிப் பார்த்து இந்த ஆட்சி தொடர வேண்டுமா, வேண்டாமா என்ற முடிவுக்கு வரவேண்டிய பொறுப்பும் கடமையும் சுதந்திரமாக உங்களுக்கு இருக்கிறது. அதிலே நான் தலையிடவும் மாட்டேன். மறுப்புக் கருத்து சொல்லவும் மாட்டேன். மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்திட ஏற்ற நடவடிக்கைகளையெல்லாம் நீங்கள் உங்களுடைய அமைதியான பணியினால் – நீங்கள் காட்டுகின்ற பொறுப்புணர்வால் – இந்தப் பணியிலே நீங்கள் காட்டுகின்ற பண்பாட்டால் – மக்கள் பயனடைய ஆற்றுகின்ற தொண்டால் – அவைகளையெல்லாம் சந்திக்க வேண்டும். அப்படிச் சந்தித்தால் தான் ஒரு நல்ல ஆட்சியை அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்று நான் சொல்ல மாட்டேன் – ஒரு நல்ல ஆட்சி தமிழகத்திலே நடைபெற நீங்களும் நாங்களும் சேர்ந்து பணியாற்றுகிறோம், உழைக்கிறோம் என்று பொருள். அந்தப் பொருளை உணர்ந்து நீங்கள் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்தக் காவல் துறை சார்பாக சில கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டுள்ளன. அவைகளைப் பற்றி சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

காவல் துறை அலுவலர்களின் கோரிக்கையை ஏற்று, 3 ஆயிரம் காவலர்கள் ஒரே நேரத்தில் பயிற்சி பெற வசதி கொண்ட "காவலர் பயிற்சி மையம்" அமைக்கப்படும்.

காவலர்களுக்கு தற்போது ஒதுக்கீடு செய்யப்படும் குடியிருப்புகளின் பரப்பளவு 550 சதுர அடியாக உள்ளது. இந்தக் குடியிருப்புகளின் பரப்பளவைக் கூடுதலாக்க வேண்டுமென்ற காவலர்களின் நெடுநாளைய கோரிக்கையை ஏற்று, கூடுதலாக 100 சதுர அடி சேர்த்து, (கூடுதல் படுக்கையறை) இனி 650 சதுர அடி பரப்பளவு கொண்ட குடியிருப்புகள் கட்டப்படும்.

காவல் துறையினருக்கு இராணுவத்தில் பணிபுரிவோர்க்கு உள்ளது போல, குறைந்த விலையில் பொருட்களைப் பெறுவதற்கு வசதியாக, மதிப்புக் கூட்டு வரி விலக்கு பெற்ற கேன்டீன் வசதி செய்து தரப்படும்.

விபத்துக்களைத் தவிர்த்திட சாலைகளில் செல்லும் வாகனங்கள் – குறிப்பாக, இரு சக்கர வாகனங்கள் அனைத்திலும் இரவில் ஒளியைப் பிரதிபலிக்கும் சாதனம் (Reflector) பொருத்தப்படுவது கட்டாயமாக்கப்படும்.

விபத்துகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் வாகனம் ஓட்டி தவறு இழைக்கும் ஓட்டுநர்களுக்கு, சிறப்புப் பயிற்சி அளிப்பதற்கு மையம் ஒன்று அமைக்கப்படும்.

இந்த அறிவிப்புகளோடு நீங்களும் இந்த அரசின் சார்பில் நானும் சேர்ந்து தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் ஒரு நல்ல ஆட்சி அமைவதில் தான் இருக்கிறது என்பதை உணர்ந்து அதற்கு இடையூறாக நாமே இருந்து விடக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்டி என் உரையை நிறைவு செய்கிறேன்.

❖ ❖ ❖

# தமிழகத்தில் தொழில் வளம், வேலைவாய்ப்பு, ஏற்றுமதி பெருகிட தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மேலும் பல இடங்களில் திறக்கப்படும்!

2-8-2010 அன்று
கோயம்புத்தூர் டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா
திறப்பு விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
ஆற்றிய உரை.

இன்று நடைபெறுகின்ற இந்த விழா கோவை நகரத்திலே பெரும் சிறப்பையும், செழிப்பையும் எதிர்காலத்திலே தரக்கூடிய அளவிற்கு வளரக் கூடிய தகவல் தொழில்நுட்பப் பூங்காவினுடைய திறப்பு விழாவாக அமைந்திருக்கின்றது. இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்கா என்ற பெயரை உச்சரிக்கும் போதே எனக்கு வருகின்ற நினைவு 1996-97ஆம் ஆண்டுகளில் நான் வரவு செலவு திட்டத்தை தமிழகச் சட்டப் பேரவையிலே வைப்பதற்காக தயாரித்துக் கொண்டிருந்த போது அப்போது டெல்லியிலே இருந்த தம்பி முரசொலி மாறன் தொலைபேசியின் மூலமாக என்னைத் தொடர்பு கொண்டும், கடிதங்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டும் – மறந்து விடாமல் தயவு செய்து இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தகவல் தொழில் பற்றி கொள்கை வகுக்கப்படும் என்ற அறிவிப்பைச் செய்யுங்கள் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

நான் இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்கா வளருகிறது, விரிவடைகிறது, தமிழ்நாடு முழுதும் பரவுகிறது, இந்தியாவிலே ஏற்றம் மிகு இடத்தைப் பெற்றிருக்கிறது என்றெல்லாம் சொல்லும்போது, எண்ணும்போது நாம் மறைந்த முரசொலி மாறனுக்குத்தான் நினைவஞ்சலியை செலுத்த வேண்டும், நன்றியைக் கூற வேண்டும். அந்த அளவிற்கு இந்தத் திட்டத்தை – இந்தத் தொழில்நுட்பப் பூங்காக்களை ஆங்காங்கு அமைத்திடும் பணியினை நாம் மேற்கொள்ள எடுத்துக்காட்டாக – ஆரம்பக் கர்த்தாவாக இருந்தவர் தம்பி முரசொலி மாறன். அவருடைய வலியுறுத்தலின் காரணமாகத்தான் கணினியில் பல்வேறு முன்னேற்றமான காரியங்கள் – பல்வேறு எழுத்துக்களை எப்படியெல்லாம் மாற்றியமைத்து இந்தத் திட்டத்தை கணினியின் மூலமாக நிறைவேற்றலாம் என்ற ஏற்பாடுகள் – அதற்காகத் தொடர்பு கொண்ட



வல்லுநர்கள், மேதைகள் இவர்கள் எல்லாம் அதை எனக்கு நினைவூட்டாமல் இருந்ததில்லை.

அப்படிப்பட்ட ஒரு பெரிய, ஆனால் தொடக்கத்தில் சிறிதாகக் காணப்பட்டு இன்று பெரிய அளவுக்கு வளர்ந்துள்ள இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்கா இந்தியா முழுவதிலும் பல்வேறு இடங்களிலே ஆயிரக்கணக்கிலே உருவாகி இருக்கின்றது என்றாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இது ஏறத்தாழ 3,000 இடங்களில் இன்றைக்கு அமைந்திருக்கின்றது என்பதை நான் மிகுந்த பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கோவையில் இந்தச் சிறப்பு அமைந்திருக்கிறது என்பதை எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். கோவைக்கு இத்தகைய சீரும் சிறப்பும் வந்ததற்கு நான் காரணம் என்றெல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் கோவை மாவட்டத்திற்கு நான் ஆற்ற வேண்டிய கடன் இது. நான் காட்ட வேண்டிய நன்றி இது. ஏனென்றால் 1947–48ஆம் ஆண்டுகளில் இதே கோவை மாநகரத்திலே வாழ்ந்தவன் நான். எனவே நானும் ஒரு வகையிலே கோவை மாவட்டத்திற்கு சொந்தக்காரன்தான். அந்த வகையிலே தான் இங்கே நடைபெறுகின்ற இந்த விழாச் சிறப்புகளை எண்ணியெண்ணி நானும் இந்த மாவட்டத்திற்குச் சொந்தக்காரன்தானே, ஆகவே இதிலே என்ன ஆச்சரியம் இருக்க முடியும் ? சொந்தக்காரன், சொந்தக்காரர் களுக்கு இந்த நல்ல காரியத்தை வழிகாட்டி நடத்தி வைப்பது உடன்பாடுடைய ஒன்றுதான், கடமைதான், அந்தக் கடமையைத்தான் நான் இன்றைக்கு நிறைவேற்றி யிருக்கிறேன் என்ற பெருமிதம் எனக்கு ஏற்படுகிறது.

### கோவை மாநகருக்கு ஆற்ற வேண்டிய கடமைகள்

கோவைக்கு நான் வரும்போதெல்லாம் என்னுடைய பழைய நண்பர்களைப் பற்றி எண்ணுவதும், அவர்களைக் காண்பதும், அவர்களோடு உரையாடுவதும், அவர்களால் நான் வளர்ந்ததும், என்னால் அவர்கள் எழுச்சி பெற்றதும் என்றைக்கும் மறக்கக் கூடியவைகள் அல்ல. நான் கோவையை நினைவிலே வைத்துக் கொண்டது மாத்திரமல்ல. நான் ஏற்றுக் கொண்ட பொறுப்பின் காரணமாக கோவை மாநகருக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பலவற்றை ஆற்றியிருக்கிறேன். உதாரணமாக 1969ஆம் ஆண்டு பஞ்சாபுக்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். பஞ்சாப் மாநிலத்தின் அன்றைய முதலமைச்சர் குர்னாம் சிங் அவர்கள் என்னை அழைத்திருந்தார். அங்கே நானும் மறைந்த அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களும், முரசொலி மாறனும், நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தியும் சென்றிருந்தோம். சென்று திரும்பிய பிறகு கோவைக்குத்தான் என்னால் இயன்ற நன்மையைச் செய்ய வேண்டும் என்று கருதினேன். என்ன நன்மை அது ? பஞ்சாப் மாநிலத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைக் காணவேண்டுமென்று தமிழக முதல் அமைச்சராக அந்த மாநிலத்திற்குச் சென்றிருந்த என்னை பஞ்சாப் முதலமைச்சர் குர்னாம் சிங் அவர்கள் அழைத்தார்கள். அந்தப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று பார்வையிட்டேன். அதைப் பார்த்த போதே தமிழ்நாட்டிலே இப்படியொரு பல்கலைக்கழகத்தை வேளாண்மைத் துறைக்கென்று அமைக்க வேண்டுமே என்று எண்ணிய போது – எங்கே அமைக்கலாம் என்ற கேள்விக்கு எனக்குக் கிடைத்த பதில் கோவையிலே அமைக்கவேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையிலேதான் அந்த எண்ணத்திலே விளைந்ததுதான் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம்.

ஆனால் தருமபுரி சம்பவத்திற்குப் பிறகு எண்ணிக் கொண்டேன். நாம் ஏன் கோவையிலே வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை அமைத்தோம், அமைத்த காரணத்தால்தானே அந்தப் பல்கலைக்கழக மாணவிகள் எல்லாம் சுற்றுப் பயணம் சென்றார்கள், அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட காரணத்தினால் தானே தருமபுரியிலே உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார்கள் என்றெல்லாம் எண்ணிய போது – ஐயோ, இந்த ஊரிலே நாம் அந்தப் பல்கலைக்கழகத்தை அமைத்தோமே என்று கூட வருத்தப்பட்டது உண்டு.

### கோவையில் ஆற்றிய பணிகளில் சிறந்தது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ஒரு பல்கலைக்கழகத்தை வேளாண்மைத் துறைக்காக அமைக்க வேண்டுமென்று எண்ணியபோது என் கண்ணிலே பட்டது, என் நெஞ்சிலே தோன்றியது கோவை தான். காரணம் நான் முன்பேயே சொல்லியிருக்கிறேன். கோயம்புத்தூர் என்னை வளர்த்த ஊர்களிலே ஒன்று, என்னை ஆளாக்கிய ஊர்களிலே ஒன்று. அதுவும் கலைத்துறையிலே நான் வளர்ந்தது கோயம்புத்தூரிலே தான். இங்கு தான் ஆரம்பம் ஆனது. அப்படி ஆரம்பமான, எனக்கு ஊக்கத்தைத் தந்த கோவையில் நான் ஆற்றிய பணிகளில் தலைசிறந்த பணியாக முத்தாய்ப்பாக அமைந்தது தான் கடந்த சில நாட்களுக்கு முன்பு இங்கே நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்பதையும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

அந்தச் செம்மொழி மாநாடு நடந்த பிறகு இங்கே பேசிய நம்முடைய தொழில் துறை செயலாளர் கூட, தமிழிலே தான் இங்கே பேசவேண்டுமென்று எண்ணித் தவித்தார். அது செம்மொழி மாநாடு தந்த ஊக்கம். தமிழிலே பேச வேண்டும், முதல் அமைச்சர் இருக்கும் போது, துணை முதலமைச்சர் இருக்கும்போது, அரசு அதிகாரிகள் எல்லாம், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் எல்லாம் இருக்கும்போது, இவ்வளவு அமைச்சர்கள் இருக்கும்போது, செம்மொழி மாநாட்டிலே கலந்து கொண்ட பெரியவர்கள், தாய்மார்கள், கோவை மக்கள் இவர்கள் எல்லாம் கூடியிருக்கின்ற இந்த இடத்தில் நாம் பிற மொழியிலே

பேசினால் என்ன எண்ணிக் கொள்வார்களோ என்று, செம்மொழி மாநாட்டின் எண்ணத்தின் காரணமாக, தமிழிலே பேசத் தொடங்கி – இங்கே தத்தளித்தார். நான்தான் அவரை, நீங்கள் சொந்த மொழியிலே ஆங்கிலத்திலேயே பேசுங்கள், தமிழை "கொலை செய்ய'' வேறு யாராவது வருவார்கள், அதை அவர்களிடத்திலே விட்டு விடுங்கள் என்று நான் சொன்னேன்.

இது நம்முடைய தொழில் துறை செயலாளருக்கு ஒரு தாக்கத்தை, ஊக்கத்தை ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சியாக அமைய வேண்டுமேயல்லாமல், இதைக் கேட்டு அவர் சுணங்கி விடக்கூடாது, சோர்ந்து விடக் கூடாது. மேலும் மேலும் முயற்சி செய்ய வேண்டும். 18 முறை முயற்சி செய்து கஜினி முகமது வென்றான் என்றெல்லாம் சரித்திரத்திலே படித்திருக்கிறோம். இப்படி ஒவ்வொரு விழாவிலும் முயற்சித்து, முயற்சித்து நீங்கள் வெல்ல வேண்டும். உங்களைப்போல பலரும் வெல்வதற்கு முயற்சிக்க வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு நானே உங்களுக்கு – நீங்கள் தமிழிலே பேசி, இங்கே இருக்கின்ற மாணவர்களின் கைதட்டலை, வேறுவிதமான கைதட்டலை பெறுவதை நானே பொறுத்துக் கொள்ள முடியாமல் தான் உங்களைக் காப்பாற்றுவதற்காக ஆங்கிலத்திலே பேசுங்கள் என்று சொன்னேன். இது ஒரு நிகழ்ச்சியிலே, இரண்டு நிகழ்ச்சியிலே நடைபெறலாம். மற்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் இப்படி நடைபெற்று அங்கெல்லாம் மாற்றி மாற்றி மொழிகளைப் பயன்படுத்த முடியாது. ஆகவே இனியாவது நம்முடைய அதிகாரிகள் தமிழிலே மேடைகளில் பேசுவதும் – தமிழிலே மக்களுக்குச் சொல்ல வேண்டிய விவரங்களை, கருத்துகளைச் சொல்ல பழகிக் கொள்ள வேண்டும். மிக முக்கியமாக – நம்முடைய தலைமைச் செயலாளரும் இங்கே இருக்கின்ற காரணத்தால் – சொல்லுகிறேன்.

எங்களுக்கு வருகின்ற கோப்புகள் எல்லாம் கூட ஒன்றிரண்டு கோப்புகள் ஆங்கிலத்திலே வருகின்றன. அப்படி ஆங்கிலத்திலே வருகின்ற காரணம், அதிகாரிகளின் குற்றம் அல்ல. தலைமைச் செயலாளர் அவர்களுக்கெல்லாம் கட்டளை பிறப்பிக்கவில்லை என்று அர்த்தம் அல்ல. தலைமைச் செயலாளருக்கும் எவ்வளவு தமிழ் ஆர்வம் உண்டு என்பதை இங்கே அவருடைய உரையிலிருந்து நீங்களும் நானும் கண்டிருக்கிறோம். அதனால் தான் சொல்லுகிறேன். இனி நம்முடைய அதிகாரிகள், ஐ.ஏ.எஸ்.ஆக இருந்தாலும், ஐ.பி.எஸ்.ஆக இருந்தாலும் – யாராக இருந்தாலும் – நாம் செம்மொழி மாநாடு நடத்திய பிறகாவது – நம்முடைய கோப்புகள் தமிழில் தயாரிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு ஏதோ தமிழ்தான் தெரியும், ஆங்கிலம் தெரியாது, ஆகவே படித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. என்னைப் போலவும் அமைச்சர்கள் இருப்பார்கள் அல்லவா? அவர்களும் புரிந்து கொள்வதற்காகச் சொல்லுகிறேன். அவர்களும் தெரிந்து கொள்வதற்காகச் சொல்லுகிறேன்.

ஆகவே பல கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டிய எண்ணம் இருந்தாலுங்கூட, அதை வெளிப்படுத்துகின்ற மொழியாக நம்முடைய தமிழ் மொழியைப் பயன்படுத்த முடியவில்லை என்றால், அப்படி பயன்படுத்துவதற்கு பழகிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அகில இந்திய சர்விஸ் என்ற முறையில் அதைப் பயின்று வருகிறவர்கள், அதிலே தோய்ந்து வருகிறவர்கள் தமிழகத்திற்கு வந்தால் ஆங்கிலத்திலே தான் பேசுவது என்று இருந்தால் தமிழ் மொழிக்கு நல்லதல்ல. எத்தனை மாநாடுகள் நடத்தினாலும் நம்முடைய மொழியை வாழ வைக்க முடியாது. நம்முடைய மொழிக்கு வலிவு சேர்க்க முடியாது. வளம் சேர்க்க முடியாது. ஆகவே நம்முடைய அதிகாரிகள் கூடுமான வரையில் – தமிழைப் பயன்படுத்திக் கொண்டு – இப்போது பேசியதைப் போலப் பேசாமல் – எதிர்காலத்தில் நல்ல தமிழிலே நல்ல கருத்துக்களை – சொல்ல வேண்டிய விஷயங்களை மக்களுக்குச் சொல்ல தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பூங்காவை பொறுத்தவரையில் நம்முடைய ராஜா அவர்களும், நம்முடைய பூங்கோதை அவர்களும், பொங்கலூர் பழனிச்சாமி அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும், அதிகாரிகளும், நிரம்ப விளக்கி இருக்கின்றார்கள். மேலும், மேலும் வளர்வதற்கும் – வாழ்வதற்கும் இன்றைய விழா பயன்பெறும்.

**12 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்**

இந்த பூங்காக்கள் வளர்ந்தால்தான் வேலை வாய்ப்பு பெருகும். இப்பொழுது இந்த ஒரு பூங்காவின் மூலம் 12 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதும், அப்படி கிடைக்கின்ற காரணத்தால் வேலைவாய்ப்பு இல்லை, என்கிற அந்தத் தொல்லையிலே இருந்து விடுபடலாம் என்பதால், இதை நாம் வளர்க்க வேண்டும்.

முதன் முதலாக சென்னையிலே வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்த பொழுது அவரை அழைத்து திறந்து வைக்கப்பட்டதுதான் சென்னை தகவல் தொழில்நுட்பப் பூங்கா அதற்குப் பிறகு இத்தகைய பல பூங்காக்கள், இந்தியாவில் பல பூங்காக்கள் இதுபோன்று திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் திறக்கப்பட இருக்கின்றன. அப்படிப்பட்ட பூங்காக்கள் திறக்கப்பட, திறக்கப்பட தொழில் வளம் பெருகும், ஏற்றுமதிகள் மேலும், மேலும் விரிவடையும், பல நாட்டு தொடர்புகள் நமது இந்திய நாட்டிற்கு – குறிப்பாக தமிழகத்திற்கு ஏற்படவும் வாய்ப்புகள் உருவாகும் என்பதை எடுத்துச் சொல்லி இந்த தொழில்நுட்பப் பூங்கா இன்று திறக்கப்படுகின்ற இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்தித்ததற்காக எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து விடை பெறுகிறேன்.

★ ★ ★

# எந்தத் துறையானாலும் அதிலே நாம் நம்முடைய ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்க வேண்டும்

சேலத்தில் 20-8-2010 அன்று நடைபெற்ற விழாவில்
மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் –
அதிநவீன சிறப்பு மருத்துவமனையைத் திறந்துவைத்து
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

விழா நகரமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற சேலம் மாநகரத்தில், உங்களையெல்லாம் கடந்த சில மணி நேரமாக, தொடர்ந்து காண்பதிலும் உங்களோடு உரையாடுவதிலும் உங்களுடைய திட்டங்களுக்காக வாதாடி, போராடி, வந்த திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது என்பதைப் பற்றியெல்லாம் கலந்து பேசி வருவதுமாக, நேரத்தைச் செலவழிப்பது எனக்கு மிக, மிக உற்சாகத்தையும், இன்னும் சேலத்திற்கு நிறைய செய்ய வேண்டும் என்கின்ற ஆவலையும், உருவாக்கித் தந்திருக்கின்றது.

சேலத்திற்கு செய்வது என்பது என்னை தமிழகத்திலே வளர்த்த நகரங்களிலே ஒன்று சேலம். நான் பிறந்த ஊர் திருக்குவளை என்றாலும், அந்த ஊருக்கு ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றியிருக்கிறேன், ஆற்றிக் கொண்டும் வருகிறேன். வளர்ந்த ஊர் திருவாரூர் என்றாலும், அந்த ஊருக்கு ஆற்ற வேண்டிய பணிகளை, சாதனைகளை, முன்னேற்றங்களை உருவாக்கியிருக்கிறேன், உருவாக்கிக் கொண்டும் இருக்கிறேன்.

அதைப் போலவே தமிழகத்திலே உள்ள பல பகுதிகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒன்றாக இருக்கின்ற பகுதி, சேலம் பகுதியாகும். இதற்கு அடுத்து கோவையைச் சொல்லலாம். இறுதியாகத்தான் சென்னையைச் சொல்ல வேண்டும். இந்த சேலத்தில் இங்கே உரையாற்றிய போது சொன்னார்களே, அதைப் போல "கோட்டை"ப் பகுதியிலே வாழ்ந்தவன் நான். அதனால்தான் போலும், கோட்டைப் பகுதியிலே முதன் முதலாக இங்கே குடியிருந்ததின் காரணமாக, ஐந்து முறை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே அமரக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.



இங்கே கோட்டைப் பகுதியில் நான் குடியிருந்த போது, சேலம் மக்களின் துயரங்களை அனுபவ ரீதியாக அறிவேன். ஏன் நேரடியாகவே அறிவேன். இவைகளையெல்லாம் தீர்ப்பதற்கு நம்முடைய அரசு வர வேண்டுமே, நம்முடைய ஆட்சி நிருவாகம் வர வேண்டுமே என்று நண்பர்களோடு அமர்ந்து பேசி கவலைப்பட்ட காலம் எல்லாம் உண்டு. ஆனால் அந்த நிருவாகமும் வந்து, இவைகளையெல்லாம் தீர்த்துவைக்கின்ற அந்தப் பெரும்பணிகளை நிறைவேற்றுகின்ற வாய்ப்பும் எனக்குக் கிட்டியிருப்பதுதான் உள்ளபடியே நான் அடைந்த மகிழ்ச்சிகள் அனைத்துக்கும் உச்சக்கட்ட மகிழ்ச்சியாகும் என்று சொன்னால் அது மிகையாகாது.

**மாவட்டத்திற்குத் தேவையான திட்டங்கள்**

சேலத்தைப் பொறுத்தவரையில் இங்கே நம்முடைய பேராசிரியர் குறிப்பிட்டார் – சேலத்துக்கு அல்லது சேலம் மாவட்டத்துக்கு எதைப் பெற வேண்டுமென்று எண்ணினாலும், அதை நேரம் பார்த்துக் கேட்டு, வாதாடிப் போராடி பெறுவதிலே திறமைசாலியாக நம்முடைய வீரபாண்டி ஆறுமுகம் விளங்குகிறார் என்று பேராசிரியர் குறிப்பிட்டார்.

இன்றைக்கு தமிழகத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் பல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் கட்டப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், 1996ஆம் ஆண்டு முதல் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு மாவட்ட ஆட்சியருடைய அலுவலகங்கள் எந்தெந்த மாவட்டங்களிலே அமைந்தது என்பதை எண்ணிப் பார்த்தால் –

தூத்துக்குடியில் நான்கு கோடி ரூபாய்ச் செலவிலும் –

சென்னையில் ஒன்பது கோடி ரூபாய்ச் செலவிலும் –

விழுப்புரத்தில் 4 கோடியே 3 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் –

திருவண்ணாமலையில் 5 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவிலும் –

நாமக்கல்லில் 6 கோடியே 14 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் –

கரூரில் 6 கோடியே 16 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் –

திருவாரூரில் 6 கோடியே 93 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் –

நாகப்பட்டினத்தில் 6 கோடியே 49 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் –

திருவள்ளூரில் 5 கோடியே 61 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் –

தேனியில் 5 கோடியே 94 இலட்சம் ரூபாய்ச் செலவிலும்

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கழக ஆட்சியிலேதான் கட்டப்பட்டன. இப்படி பத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்ட மொத்தம் 60 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவிட்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு அவைகளையெல்லாம் அமைத்து நிருவாகம் நடத்துகிறது. அந்த வட்டாரத்து மக்களுடைய வசதிகள் பெருகிக்கொண்டிருக்கின்றது. மக்கள் தேவைகளுக்கு ஈடுகொடுத்துக் கொண்டிருக்கிறது.

இந்த 2006ஆம் ஆண்டிற்குப் பிறகு என்று எடுத்துக் கொண்டால் கூட இந்த நான்காண்டு காலத்தில் நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டு 17.2.2008 அன்று திறக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் 10 கோடி ரூபாய்ச் செலவிலே கட்டப்பட்டு, 26.2.2008 அன்று திறக்கப்பட்டிருக்கிறது.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கூடுதல் கட்டடம் 12 கோடியே 1 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் – அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் 12 கோடியே 88 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் – தருமபுரியில் கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் 2 கோடியே 39 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் கட்டப்படுகின்றன.

**பிரம்மாண்டமாக அமைந்துள்ள**
**சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்!**

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் பழமையானதாகவும் நெரிசல் மிக்கதாகவும் இருந்ததால் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தைக் கட்ட இந்த அரசு அனுமதி வழங்கியது. 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கான புதிய கட்டடம் கட்ட 14.9.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் 18.8.2010 அன்று அனுமதிக்கப்பட்ட 37 கோடியே 62 இலட்சம் ரூபாய் திருத்திய மதிப்பீட்டின்படி – 2 இலட்சத்து 54 ஆயிரத்து 570 சதுர அடி பரப்புடைய ஐந்து தளங்கள் அமைத்துக் கட்டப்பட்டுள்ளது. வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவில் சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களும் இயங்கும் வகையில் இந்தக் கட்டடம் கட்டப்பட்ட காரணத்தால் இப்படி பிரமாண்டமாகக் கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கட்டடத்தில் வேறு எங்கும் இல்லாத அளவிற்கு அரசுத்துறை




அலுவலகங்கள் 51 அலுவலகங்கள் இங்கே இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏறத்தாழ 600 பேர் அமரக் கூடிய அளவில் 4 ஆயிரத்து 775 சதுர அடி பரப்புடைய கூட்ட அரங்கம் இரண்டாம் தளத்தில் கட்டப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு தளத்திலும் ஏறத்தாழ 1,400 சதுர அடி பரப்பு உடைய சிறிய கூட்ட அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஆறு லிப்ட் வசதிகளும் இந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இத்துணை பெரிய கட்டடமாக உருவாகிட முழு முதற்காரணம்**

இப்படி மாவட்டந்தோறும், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்களைக் கட்டுவது மிக மிக முக்கியம் என்பதை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உணர்ந்த காரணத்தால்தான் ஏறத்தாழ 15 மாவட்டங்களில் அந்த அலுவலகக் கட்டடங்களை பிரமாண்டமான முறையிலே அமைத்திருக்கிறோம். அவற்றிலே ஒன்றுதான் இன்று சேலத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த மாபெரும் கட்டடம் என்பதையும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

ஆனால் சேலம் மாவட்ட ஆட்சியரின் அலுவலகக் கட்டடம் அமைவதற்கு இந்த அரசு தானாக முன் வந்து இது அமைக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அதைத்தான் இங்கே பேசிய நண்பர்கள் – பல்வேறு பொறுப்புக்களிலே உள்ளவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். இவ்வளவு பெரிய கட்டடம் இத்தனை வசதிகள் வாய்ப்புகள் நிறைந்து தமிழகத்திலே எங்குமில்லாத அளவில் இந்தக் கட்டடம் அமைவதற்கு முழு முதல் காரணமாக – தொடர்ந்து முயற்சிகளை எடுத்துக் கொண்டது – கட்டி முடித்தது கழக அரசு என்றாலுங் கூட – அதிலே ஒவ்வொரு கல்லும் வீரபாண்டி ஆறுமுகத்தின் பெயர் சொல்லும் என்கின்ற அளவிற்கு இந்தக் கட்டடம் இன்றைக்கு உயர்ந்து நிற்பதற்கு நான் என்னுடைய மகிழ்ச்சியை, பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**புதுடெல்லி 'எய்ம்ஸ்' மருத்துவமனைக்கு நிகராக சேலத்தில் அமைந்திடும் மருத்துவமனை**

இந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தை அன்னியில் – ஒரு மருத்துவமனைக் கட்டடம் ஒன்று இங்கே எழுந்து நிற்கின்றது. புது டெல்லியிலே உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக (எய்ம்ஸ்) மருத்துவமனைக்கு இணையாக சேலம் மாநகரில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி, அதி நவீன மருத்துவமனைக்கு 14.9.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு 139 கோடியே 39 இலட்சம் ரூபாய்ச் செலவிலே இது கட்டி முடிக்கப்பட்டு இன்றைக்கு உங்களுடைய அன்பான வாழ்த்துகளோடும், பாராட்டுக்களோடும் திறக்கப்பட்டிருக்கிறது என்றால் இந்த 139 கோடி ரூபாயில் – 100 கோடி ரூபாய் மத்திய அரசின் நிதியாகக் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை நான் நன்றி உணர்வோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**மத்திய அரசுக்கு – நமது மனமார்ந்த நன்றி!**

இதை நான் இந்த மேடையிலே சொல்லாவிட்டால், ஏதோ கருணாநிதி தமிழக அரசின் செலவிலேதான் இதைக் கட்டியதாகச் சொல்லிக் கொள்கிறார், இல்லை என்று யாராவது நாளைக்கு மறுப்புச் சொல்லி, மத்திய

அரசின் நிதியும் இதிலே இருக்கிறது என்று யாராவது சொல்வார்களேயானால், நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன் – மத்திய அரசின் நிதி, மாநில அரசின் நிதி – இரண்டுக்கும் ஒன்றும் பெரிய வித்தியாசம் இல்லை. இதே கரன்சிதான் அங்கும் – அதே நாணயம்தான் இங்கேயும். நாம் செலுத்துகின்ற வரி மத்திய அரசுக்குச் செல்கிறது. அந்த வரியை அவர்கள் பங்கிடும்போது மாநில அரசுக்கு அதிலே ஒரு பங்கு வருகிறது. எனவே, இதிலே மத்திய அரசு, மாநில அரசு என்றெல்லாம் பிரிக்கத் தேவையில்லை. இருந்தாலும் சில அதிகாரங்களை – சில அனுமதிகளை வழங்க வேண்டிய பொறுப்பு அரசியல் சட்டப்படி – அரசியல் சட்டம் வகுத்திருக்கின்ற நெறிமுறைகளின்படி – இன்றளவில் அதிலே உள்ள நிலைகளின்படி – மத்திய அரசின் கையிலேதான் இருக்கின்ற காரணத்தால் மத்திய அரசினுடைய அனுமதியையும் பெற்று – அவர்களிடம் நிதியையும் கேட்டுப் பெற்று – 139 கோடி ரூபாய்ச் செலவிலே 100 கோடி ரூபாய் மத்திய அரசு பொறுப்பேற்று – இந்த அழகான சூப்பர் ஸ்பெஷாலிட்டி, அதிநவீன சிறப்பு மருத்துவமனையை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

இந்த மருத்துவமனையிலே பணியாற்றுகிறவர்கள் எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டும் என்பதை நம்முடைய பேராசிரியர் அவர்களும், தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தம்பி பன்னீர்செல்வம் அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

எவ்வளவு பெரிய கட்டடமாக இருந்தாலும், எவ்வளவு பெரிய உயர்ந்த கோபுரங்களை புதிதாக அமைத்தாலும், அந்தக் கட்டடத்திலே இருந்து பணியாற்றுகின்றவர்கள், அவர்கள் மக்களுக்கு ஆற்றுகின்ற தொண்டு – அந்தத் தொண்டு தூய தொண்டாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறை உள்ளவர்கள் இருந்தால்தான் எவ்வளவு செலவழித்து உருவாக்குகின்ற மணிமண்டபமாக மருத்துவ மனைகள் இருந்தாலுங்கூட, மனிதர்கள் நலமாக வாழ முடியாத – மனிதர்கள் தங்கள் உடல் நலத்தைப் பேண முடியாத – ஒரு நிலை இருக்குமேயானால், செலவழிக்கப்பட்ட பணம் பெரிதல்ல – கட்டப்பட்ட மாளிகை பெரிதல்ல – எனவே தான் செவிலியர் ஆனாலும், மருத்துவர்கள் ஆனாலும் அவர்கள் இந்த மருத்துவமனை ஏன் கட்டப்பட்டது, நாம் வாழவா அல்லது மற்றவர்களை வாழ வைக்கவா என்ற இந்தக் கேள்விக்கு நியாயமாகப் பதிலளிப்பார்களேயானால், மருத்துவமனைக்காக செலவழிக்கப்பட்ட ஒவ்வொரு காசுக்கும் பயன் உண்டு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். என்ன தான் மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டிலே நாம் உருவாக்கினாலுங்கூட, ஒரு வார காலமாக அல்லது சில நாட்களாக – வருகின்ற செய்திகள் நம்மை மிகவும் பாதிக்கத் தக்கவைகளாக – வருந்தத்தக்கவைகளாக – கவலை கொள்ளச் செய்யத் தக்கதாக உள்ளது.

நான் பத்திரிகைகளிலே ஒரு செய்தி பார்த்தேன். இனிமேல் மருத்துவக் கல்லூரிகள் எல்லாம் மத்திய அரசின் பொறுப்பிலே – மாநில அரசுகளின் பொறுப்புக்களிலே மாத்திரமல்லாமல் – வரும் என்றும் – அப்படி வருகின்ற காரணத்தால், இனி நுழைவுத் தேர்வும் உண்டு என்றதொரு செய்தி வந்தது.

**மருத்துவ நுழைவுத் தேர்வு கூடாது**

நுழைவுத் தேர்வை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நாம் சட்டமியற்றி ரத்து செய்து விட்டோம். நுழைவுத் தேர்வு வந்தால் கிராமப்புற மாணவர்கள் முன்னேற முடியாது. அவர்கள் உயர்ந்த பதவிகளுக்கு வர இயலாது. இடையிலே தடுக்கப்பட்டு விடுவார்கள் என்பதற்காகத்தான் மக்கள் நல்வாழ்வுத் துறையிலே பயிலுகின்ற – இருக்கின்ற மாணவர்களுக்கு வழி அடைபட்டுவிடக்கூடாது என்பதற்காக நுழைவுத் தேர்வு என்கின்ற ஒரு வாசல் வேண்டாம்; அவர்கள் நேரடியாகவே நுழைவுத் தேர்வு இல்லாமலே வளரட்டும் என்று ஒரு திட்டத்தை அறிவித்து, அதைச் சட்டமாகவே ஆக்கினோம். அதிலே தமிழகத்திலே இருக்கின்ற எந்தக் கட்சிக்கும் வேறுபாடான கருத்து கிடையாது. நான் பட்டவர்த்தனமாகச் சொல்கிறேன், வெளிப்படையாகச் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சி இதிலே நம்மிடம் வேறுபடாத கட்சி. பா.ம.க. நாம் சொல்லுகின்ற இதே கருத்தை உடைய கட்சி. இன்னும் சொல்லப்போனால் எதிர்க்கட்சியாக இருக்கின்ற அ.தி.மு.க. கூட நுழைவுத் தேர்வு கூடாது, தேவையில்லை என்ற நம்முடைய வாதத்தை ஏற்றுக் கொண்ட இயக்கம்தான். நான் நேற்றைக்குக் கூட பத்திரிகைகளிலே பார்த்தேன். அ.தி.மு.க. தலைவி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இனிமேல் மத்தியிலே நுழைவுத் தேர்வை கொண்டு வரப்போகிறார்கள். நம்முடைய முதல் அமைச்சர் என்ன செய்யப் போகிறார்? இவருக்கு தெரிந்தது எல்லாம் மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதுதான் என்று எதிர்க்கட்சித் தலைவி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். எனக்கு கடிதம்தான் எழுதத் தெரியும், வேறு அதற்காக வாதாடத்தெரியாது, அவருக்குத் தைரியம் இல்லை என்று அறிக்கை விட்டு, அதைப் பின்பற்றி சில பத்திரிகைகள் கூட தமிழ்நாட்டில் எழுதியிருப்பதைப்பார்த்தேன். கடித இலக்கியம், கடிதக் காவியம் என்றெல்லாம் நான் எழுதுகின்ற கடிதங்களை

அதே நேரத்தில் டெல்லிக்குத் தெரிவிக்கின்ற தகவல்களைக் கூட கேலி செய்பவர்கள் இருக்கின்றார்கள்.

என்ன கடிதம்? இந்தச் செய்தியைப் பார்த்தவுடன், நாங்கள் கலந்து பேசினோம், செயலாளர்களோடு பேசினோம், அமைச்சர்களோடு பேசினோம், உடனடியாக பிரதமருக்கு – காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா அவர்களுக்கு – இதைச் சொல்லுகின்ற விளக்குகின்ற கடிதங்களை எழுதினோம். என்ன எழுதினேன் என்றால், கிராமப்புரத்திலே இருக்கின்ற சாதாரண, சாமானிய மக்களுடைய வாழ்வைப் பாழாக்குகின்ற வகையில் இந்த நுழைவுத் தேர்வு அமைந்து விடும், ஆகவே நுழைவுத் தேர்வை நடத்தக் கூடாது என்று தமிழ்நாட்டு மக்களுடைய மனக் கொதிப்பை நான் வெளியிட்டு, பிரதமருக்கு கடிதம் எழுதினேன். அது என்ன? சாதாரணக் கடிதம் என்று அவர்கள் விட்டுவிட்டார்களா? இவர் என்ன கடிதம் எழுதுவது, நாம் என்ன அதைக் கவனிப்பது என்று சொல்லி விட்டார்களா, இருந்து விட்டார்களா என்றால் இல்லை. கடிதம் எழுதினால் பலன் இல்லை என்று சொன்னவர்களுக்கு நான் ஒரு தகவலைச் சொல்லுகிறேன்.

**நமது கருத்துக்கு மதிப்பளித்த மத்திய அரசு!**

நான் கடிதம் எழுதிய காரணத்தால்தான் இன்றைய மாலைப் பத்திரிகைகளிலே "மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வு – நிறுத்தி வைப்பு – மத்திய அரசு அறிவிப்பு'' என்று செய்தி வந்திருக்கிறது. மருத்துவப் படிப்புக்கு நுழைவுத் தேர்வு கூடாது என்பது தமிழகத்திலே உள்ள தி.மு.க., அ.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட எல்லாக் கட்சிகளின் எண்ணம். ஆனால் அதைச் சொல்லுகின்ற ஒரு வாய்ப்பாக இருக்கின்ற ஆளுங்கட்சியான தி.மு.க., அதை எடுத்துச் சொல்லி, அதற்கு மதிப்பளித்து, பிரதமரும், டெல்லியில் உள்ள அமைச்சர்களும், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி அம்மையாரும் கலந்தாலோசித்து – மத்திய அரசின் சுகாதாரத் துறைச் செயலாளர் செய்தியாளர்களிடம் இன்று கூறும் போது, நுழைவுத் தேர்வு நடத்துவதை ஒத்திப் போட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்.

நான் கடிதம் எழுதியதோடு நின்று விடவில்லை. உச்ச நீதிமன்றத்திலே கூட நடைபெற்று வந்த வழக்கில் நேற்றைய தினம் நம்மை இணைத்துக் கொண்டிருக்கிறோம். இது எங்களுடைய மாணவர்களுக்கு ஆகாது; தீங்கு, இதை நீங்கள் நிறுத்தி வைக்க வேண்டுமென்று உச்ச நீதி மன்றத்திலும் ஒரு மனுவினைத் தாக்கல் செய்து, அந்த வழக்கிலும் நாம் நம்மை ஒரு வாதியாக இணைத்துக் கொண்டிருக்கிறோம்.

அப்படிப்பட்ட நிலையில் நான் இந்த அறிவிப்பின் மூலம் மகிழ்ச்சி அடைந்தாலுங்கூட – இதற்குப் பிறகும் தொடர்ந்து தமிழகத்திலே இருக்கின்ற மாநில உரிமைகளை மத்திய அரசு எடுத்துக் கொள்ளுகின்ற முறையிலே நடந்து கொள்ளுமேயானால், எங்களுடைய ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

நேற்றைக்குக் கூட டெல்லியில் நிதியமைச்சர்களின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நம்முடைய அரசின் சார்பாக தம்பி துரைமுருகன் சென்று கலந்து கொண்டார். அவர் மூலமாக நாம் தெரிவித்திருக்கின்ற கருத்து – மாநில அதிகாரங்களையெல்லாம் பறித்து விடக் கூடாது – ஏற்கெனவே பல அதிகாரங்கள் மாநிலங்களிடமிருந்து பறிக்கப்பட்டு – நாம் கோரி வருகின்ற "மாநில சுயாட்சி''யின் முழு உருவம் மூளியாகிக் கொண்டிருக்கின்றது. ஆகவே நீங்கள் கொண்டு வருகின்ற எந்தத் திட்டமானாலும், அது நுழைவுத் தேர்வானாலும் – சரக்கு மற்றும் சேவை வரி முறைகளில் கொண்டு வருகின்ற திருத்தங்கள் ஆனாலும், அவற்றில் எல்லாம் மாநிலங்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்து நிதானமாக முடிக்க வேண்டுமென்றுதான் தமிழகத்தின் சார்பாக நேற்றைய கூட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகவே நான் இங்கிருந்து எழுப்புகின்ற குரல், இது போன்ற பொதுவான விஷயங்களிலே கூட, ஒருமித்தக் குரலாக இருக்க வேண்டும். எல்லோரும் ஓர் குரலில் ஒலிக்க வேண்டும். அப்படி ஒலித்தால் மத்திய அரசு நம்முடைய நியாயங்களை உணர்ந்து நம்முடைய உரிமைகளை வழங்க என்றைக்கும் தயாராக இருக்கும். மத்திய அரசை குறை கூற வேண்டுமென்பதற்காக சிறுசிறு பிரச்சினைகளையெல்லாம் பூதாகரமாகப் பெரிதுபடுத்தி – மத்திய அரசுக்கும், இந்த மாநில அரசுக்கும் இடையே மனஸ்தாபம் ஏற்படாதா, கலகம் தோன்றாதா, நாம் இடையிலே புகுந்து ஏதாவது சூழ்ச்சி புரிய முடியாதா என்று எண்ணுகின்ற கட்சிகளைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் பொதுவாக ஒரு கருத்தை எல்லோரும் சேர்ந்து ஒரு இலட்சியத்தை நிறைவேற்ற பொதுவான ஒரு குறிக்கோளாக எடுத்துக் கொண்டு ஒற்றுமையோடு பாடுபட வேண்டும். அது கல்வித் துறையானாலும், மருத்துவத்துறை ஆனாலும், சட்டத்துறை ஆனாலும் எந்தத் துறை ஆனாலும் அதிலே நாம் நம்முடைய ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு – இந்த இனிய விழாவிலே உங்களோடு பங்கேற்று சில கருத்துகளைச் சொல்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக மகிழ்ந்து விடை பெறுகிறேன்.

★ ★ ★

# பகுத்தறிவுத் துணைகொண்டு ஆட்சியின் நிருவாகத் திறமையினால் குடிநீர்த் திட்டம் போன்ற பல்வேறு சாதனைகள்

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர், காட்டுப்பள்ளியில், 31-7-2010 அன்று நடைபெற்ற
கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தைத் திறந்துவைத்து,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை.




கோவை செம்மொழி மாநாட்டில் தொடர்ந்து இருக்கிறேனா அல்லது மீஞ்சூரில் நடைபெறுகின்ற கடல் நீரைக் குடிநீராக்குகின்ற விழாவிலே இருக்கின்றேனா என்று எனக்கே புரியாமல் இன்னும் அதே நினைவோடு உங்களையெல்லாம் நோக்கிக் கொண்டிருக்கிறேன்.

கோவையில் நடைபெற்ற தமிழ்ச் செம்மொழி மாநாடு எப்படி மீஞ்சூருக்கு வந்தது என்று எனக்கே வியப்பாக இருக்கிறது. அந்த நினைப்பில்தான் போலும், நம்முடைய அசோக் வரதன் ஷெட்டி அவர்கள் ஒரு அலுவலருக்குரிய உரையை ஆற்றாமல், ஒரு புலவருக்குரிய உரையை இங்கே நிகழ்த்தினார். அவருக்கும் கோவை மாநாட்டினுடைய தாக்கம் இங்கே இருக்கிறது என்பதை அவருடைய பேச்சு எனக்கு விளக்கியது. அந்தத் தாக்கம் ஷெட்டிக்கு மாத்திரமல்ல; தமிழ்நாட்டில் வாழ்கின்ற அனைவருக்கும் ஏற்படும் – ஏற்பட்டே தீரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்ற காரணத்தால்தான், அந்த நம்பிக்கை நிச்சயமாக பலிக்கும் என்ற உறுதியை அளிக்கின்ற வகையில், இன்றைக்குச் சென்னையிலே நான்கு அல்லது நான்கரை மணிக்குப் புறப்பட்டு அங்கிருந்து இங்கே வருகின்ற வழியெல்லாம் இருமருங்கிலும் ஆடவர், பெண்டிர், முதியோர், இளைஞர், தொழிலாளர்கள், மீனவர்கள் என்ற அளவிற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் எங்களை வாழ்த்தி வழியனுப்பினார்கள்.

### பேரறிஞர் அண்ணாவின் ஆட்சி தொடர்ந்து கொண்டேயிருக்கும்

எனக்குக் கூட ஒரு சந்தேகம். நாம் மீஞ்சூரில் இந்த விழாவை நடத்தச் செல்கின்றோம். வடசென்னையிலே, தென்சென்னையிலே வருகின்ற வழியிலே இருக்கின்ற மக்களெல்லாம் இவ்வளவு ஆர்வத்தோடு நமக்கு வாழ்த்து முழக்கம் செய்து வழியனுப்புவதற்கு என்ன காரணம் என்று

யோசித்தேன். அவர்களுக்குள்ள ஒரு பெருமை – எனக்குள்ளே அதைப்போல ஒரு பெருமிதம். நான் வருகிற வழியிலே என்ன நினைத்துக் கொண்டு வந்திருப்பேன் என்று கருதுகிறீர்கள்? நீண்ட நாட்களாக நினைத்து, நினைத்து 1972ஆம் ஆண்டு அண்ணா அவர்களுடைய ஆட்சி நிறைவுற்று, ஆனால் அண்ணாவுடைய ஆட்சி என்றைக்கும் நிறைவுறாது, தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் – எனக்கு முன்பு உரையாற்றிய தம்பி ஸ்டாலின் குறிப்பிட்டதைப் போல, குடிநீர் வசதியை சென்னை மாநகர மக்களுக்கு எப்படிச் செய்வது? தயங்காமல், தட்டாமல், பதறாமல், தாமதமில்லாமல் அவர்களுடைய தாகத்திற்கு தண்ணீர் அளிக்க – அவர்களுடைய தேவைக்கு தண்ணீர் அளிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தபொழுதுதான், ஏற்கெனவே பல திட்டங்கள் இருந்த போதிலும் கூட, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஸ்டாலின் குறிப்பிட்டதைப் போல திட்டங்கள் உருவாகி இருந்த போதிலும் கூட, இதற்குப் பிறகும் இன்னும் திட்டங்கள் தேவை என்று நாம் நினைப்பதைப் போல – அன்றைக்குத் திட்டங்கள் தேவைப்பட்ட அந்தக் காலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையை எப்படி சமாளிப்பது, எப்படி இந்தப் பிரச்சினையை தீர்ப்பது என்று எண்ணிய காரணத்தினாலேதான் – நம்முடைய மறைந்த நண்பர் செ.கந்தப்பன் அவர்களைத் தலைவராகக் கொண்டு, குடிநீர் வாரியம் என்ற பெயரால் ஒரு வாரியத்தை அமைத்து, அந்த வாரியத்தின் பணிகளால் சென்னையினுடைய குடிநீர் தேவை முழுமையாக அல்ல, ஓரளவு தீர்க்கப்பட்டது என்பது உண்மை.

**சென்னை மக்களின் தாகம் தீர்க்க 12 ஆயிரம் குழாய்கள்**

ஒரு சமயம் மறைந்த நம்முடைய நண்பர் வேலூர் நாராயணன் அவர்கள் சென்னை மாநகரத்தின் மேயராக இருந்தபோது – கடும் வறட்சி, சென்னையை அந்த வறட்சி கடுமையாகத் தாக்கியது. மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் சங்கடப்பட்டார்கள். தாகத்திற்காக தண்ணீர் கொடுக்க மாட்டீர்களா? என்ற ஏக்கக் குரல் எங்கெங்கு திரும்பினாலும் கேட்டது. அப்பொழுது, மேயராக வேலூர் நாராயணன் இருந்தார். அவர் மேயராக இருந்தபோதிலும், நான் முதலமைச்சர் பொறுப்பிலே இருந்து ஏறத்தாழ 12 ஆயிரம் குழாய்களை ஓரிரு நாட்களில் சென்னை மாநகரம் முழுவதும் எல்லா தெருக்களிலும் – எல்லா பகுதிகளிலும் 12 ஆயிரம் குழாய்களை அமைக்கச் செய்து, (அதிலே மேயர் வேலூர் நாராயணனுக்குக் கூட வருத்தம். நான் மேயராக இருக்கும் போது எனக்குத் தெரிவிக்காமலே முதலமைச்சர் இப்படி செய்துவிட்டாரே என்று கூட வருத்தப்பட்டார். ஒரு நல்ல காரியம் செய்யும்போது, முதலமைச்சர் தனக்குள்ள பொறுப்பிலே அதைச் செய்வது தவறல்ல என்று நான் குறிப்பிட்டேன்.) சென்னை மாநகர மக்களினுடைய தேவைகளை அதிலும் மிக மிக குறிப்பாக தண்ணீர் தேவையை – குடிநீர் தேவையை தீர்த்து வைக்க எல்லோருக்கும் அக்கறையும், ஆர்வமும் உண்டு. அதைவிட எனக்கு பன்மடங்கு ஆர்வமும், அக்கறையும் உண்டு என்ற காரணத்தால் நான் ஓரிரு நாட்களில் 12 ஆயிரம் குழாய்களை சென்னை நகரத்திலே அமைத்து ஓரளவு, அப்பொழுதும் கூட முழுமையாக குடிநீர்த் தேவையை தீர்த்து வைத்து விட்டேன் என்று சொல்ல முடியாது.

அதற்குப் பிறகு கிருஷ்ணா தண்ணீர் வேண்டுமென்ற நிலை ஏற்பட்டு ஆந்திரத்தினுடைய முதலமைச்சரோடு உரையாடி – கலந்து பேசி – ஏற்கெனவே எம்.ஜி.ஆர். காலத்திலே அவர் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டும் கூட அப்போது வராத தெலுங்கு கங்கைத் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு என்.டி.ராமாராவ், சந்திரபாபு நாயுடு போன்றவர்கள் அதற்கான உதவிகளையெல்லாம் செய்து நாம் அந்தத் திட்டத்தை ஓரளவு வெற்றிகரமாக முடித்து கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்குக் கிடைத்தது. அப்படி கிடைத்தபோதும், சென்னை நகர மக்களினுடைய தாகம் முழுமையாக நிறைவேறவில்லை. காரணம் மக்கள் தொகை, அதனுடைய பெருக்கம், தண்ணீர் பற்றாக்குறையினால் என்ன செய்யலாம் என்று யோசித்தபோது கிருஷ்ணா தண்ணீரும் சரியாகக் கிடைக்கவில்லை. சில கரைகள் ஒழுங்குப்படுத்தப்படாமல் இருந்ததால் சில பகுதிகளிலே தண்ணீர் ஒழுங்காகச் சென்று குறிப்பிட்ட இடத்தை அடைய முடியாமல் இருந்த காரணத்தாலும் என்ன செய்யலாம் என்று யோசித்தபோது நம்முடைய கவலையை உணர்ந்து புட்டபர்த்தி சாய்பாபா அவர்கள் அதைக் கேள்விப்பட்டு அவரே நேரில் என்னுடைய இல்லத்திற்கு வந்து, இந்த கிருஷ்ணா நீர் திட்டத்தில் இருக்கின்ற குறைகளை அகற்றி அதை நான் நிறைவேற்றித் தருகின்றேன். அதற்கு நீங்கள் அரசின் சார்பில் அனுமதிக் கொடுங்கள் என்று கேட்டபோது, யாராவது வர மாட்டார்களா என்றுதான் நான் எண்ணியிருந்தேன். சாய்பாபா அவர்களே, நீங்களே நேரில் வந்துவிட்ட காரணத்தால் தாராளமாக செய்யுங்கள் என்று நான் அவரிடத்திலே எடுத்துச் சொல்லி அவரும் சுமார் ஐம்பது கோடி ரூபாய் செலவிலே அந்தத் திட்டத்தை முழுமைப்படுத்தி தருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். இவ்வளவிற்கும் பிறகு தமிழகத்தினுடைய நகரங்களிலே மாத்திரமல்ல, தமிழகத்தில் பல பகுதிகளில் தண்ணீர் தேவையை நிறைவு செய்வதற்காக நாம்

எடுத்துள்ள முயற்சிகளையெல்லாம் இங்கே நம்முடைய துணை முதலமைச்சர் தம்பி ஸ்டாலின் அவர்கள் எடுத்து விளக்கி இருக்கின்றார்கள். நான் உங்களுக்கு அவைகளையெல்லாம் திரும்பச் சொல்ல வேண்டும் என்று விரும்பவில்லை.

**கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்**

தமிழ்நாடு நீர்வளம், நிலவளம் பொருந்திய நாடு என்று அழகுக்காக சொல்லலாம். ஆனால் நீர்வளம் இல்லாத நாடு. நிலவளம் இருக்கின்ற நாடு தமிழ்நாடுதான். நீர்வளம் குறைந்த நாடு தமிழ்நாடு. நாம் தண்ணீருக்கு பக்கத்திலே உள்ள மாநிலங்களைத்தான் தேடிச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்தப் பக்கத்திலே சென்றால் ஆந்திரா, கிருஷ்ணா. இன்னொரு பக்கம் சென்றால் கர்நாடகா, காவிரி நீர் நமக்குத் தேவைப்படுகிறது. இப்படி எந்தப் பக்கம் சென்றாலும், அந்தப் பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்கள் நமக்கு உதவினால்தான் நம்முடைய தண்ணீர் தேவை நிரந்தரமாக சரிசெய்யப்படும். அதனால் ஏற்படுகின்ற சண்டைகளை, சச்சரவுகளை, கலவரங்களை நீங்கள் அறிவீர்கள். நான் ஏதோ அண்ணா வழியில், பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்களுடன் ஒரு நல்லுறவு வைத்திருக்கின்ற காரணத்தால், நான் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று யாரையும் தூஷிக்காமல் இருக்கின்ற காரணத்தால், நமக்குள்ள பங்கினை நாம் பெறுவதற்கு நியாயமான, சட்டரீதியான வழிமுறைகளை கையாண்ட தாலும் அண்டை மாநிலங்கள் ஓரளவு நம்மிடத்திலே நட்புணர்வு கொண்டு, நம்முடைய தேவைகளை நிறைவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் கூட, குறிப்பாக மழை இல்லாவிட்டால், தமிழ்நாடு மாத்திரமல்ல, தென்னகம் முழுவதும் மழை பொய்த்துவிட்டால், கர்நாடகத்திற்கு தண்ணீர் எப்படிக் கிடைக்கும்? அவர்களைக் கேட்டால், மழை பொழிந்தால் தண்ணீர் தருகிறேன் என்பார்கள். மழை பொழிவதற்கு நாம் என்ன செய்ய முடியும்? மழை பொழியாவிட்டால் அங்கேயும் தண்ணீர் இல்லை. நமக்கும் தண்ணீர் இல்லை. இப்படி மழையே பொய்த்து விட்டால் அந்த நேரத்தில் ஒரு பெரிய முயற்சியை செய்ய வேண்டும் என்று நினைத்து, அப்படிப்பட்ட முயற்சியிலே நாம் பெற்றிருக்கின்ற வெற்றிகளிலே ஒன்றுதான் இந்தக் கடல்நீரை குடி நீராக்கும் திட்டம் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு செலவு, எவ்வளவு பேருடைய உழைப்பு, எவ்வளவு பெரிய திட்டம். இங்கே இந்தப் பகுதி முழுவதும் வளைத்துப் போட்டு கட்டடங்களைக் கட்டி, அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றியுள்ளோம். இதைப் போலவேதான், இராமநாதபுரம் மாவட்டத்திலே நரிப்பையூரிலே கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தைத் தொடங்கி, அது சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுதும் அந்தத் திட்டத்தால்தான் அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீரை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

பல மாவட்டங்கள் தமிழகத்தில் வறண்ட மாவட்டங்களாக இருக்கின்றன. நம்முடைய பழைய கதைகளை எடுத்துப் படித்தால், தமிழ்நாட்டைப் பற்றி எழுதுகின்ற புலவர்கள் முதல் வரியிலேயே, நீர் வளம், நிலவளம் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் – நீர் வளம் நிலவளம் நிறைந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் – நீர்வளம், நிலவளம் நிறைந்த நெல்லை பகுதி என்று தான் பழைய கதைகளில் எழுதுவார்கள். ஆனால் இங்கே நீர்வளமும் இல்லை, நிலவளமும் இல்லை. ஏதோ கதைக்கு எழுத வேண்டிய முதல் வரிக்கு அதைப் பயன் படுத்துவார்களேயல்லாமல் உண்மையிலே தமிழகத்திலே நீர் வளம் குறைவு. நிலவளம் கொஞ்சம் அதிகம். நீர் வளம் இல்லாவிட்டால், நிலவளமும் இருக்க முடியாது. எனவேதான், இந்த இருவளமும் பெருக தமிழகத்திலே நம்முடைய ஆட்சியின் மூலமாக பல காரியங்கள் இன்றைக்கு நிறைவேற்றப்படுகின்றன. அப்படி நிறைவேற்றப்படுகின்ற காரியங்களிலே ஒன்றுதான் இந்தத் திட்டம். இந்தத் திட்டம் நிறைவேறாவிட்டால் இந்தப் பகுதி மக்கள் என்ன ஆவார்கள்? இந்தப் பகுதி மக்கள் என்று சொல்லும்பொழுது, இங்கே நீங்கள் தண்ணீரை சேமித்து அதை சென்னைக்குக் கொடுக்கிறீர்கள். உங்களுடைய தாராள மனதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். ஒரு பக்கத்திலே நாம் தண்ணீரை சேமித்து இன்னொரு பகுதி மக்களுக்கு வழங்குகிறோம் என்றால், தண்ணீர் கொடுப்பதிலே உள்ள புண்ணியம் சாதாரண மானதல்ல என்று சொல்வார்கள். தவித்த வாய்க்கு தண்ணீர் கூட கொடுக்க மாட்டானா என்று? ஏன் என்றால் தவித்த வாய்க்கு தண்ணீர் கொடுக்காவிட்டால் பெரிய பாவச்செயல். நாம் இப்போது தவிக்காத வாய்க்கு – சென்னையிலே இருக்கிற மக்களுக்கு தண்ணீரைக் கொடுக்கின்ற பெரிய திட்டத்தை தொடர்ந்து தொடங்கி இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இதற்கு இந்த வட்டாரத்திலே இருக்கின்ற தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் தங்களுடைய ஒத்துழைப்பை தந்ததற்காக அவர்களுக்கெல்லாம் நான் என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**'திராவிட சகாப்தம்' என்றைக்கும் தொடரும்**

இதுபோன்ற திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. அதைத்தான் தம்பி ஸ்டாலின் இங்கே பேசும்போது குறிப்பிட்டார். நாம் மாமல்லபுரம்

சாலையிலே உள்ள நெம்மேலி என்கின்ற அந்தப் பகுதியில் இதுபோன்ற இன்னொரு திட்டத்தை தொடங்கி, ஓராண்டு காலத்திற்குள்ளாக, அல்லது இரண்டாண்டு காலத்திற்குள்ளாக அந்தத் தண்ணீரும் சென்னைக்குப் பயன்படுகின்ற அளவிற்கு நாம் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று ஸ்டாலின் இங்கே குறிப்பிட்டார். இதை கணக்குப் போட்டுப் பார்த்தால், இந்த ஆட்சிக்கே இன்னும் ஓராண்டு காலம்தானே இருக்கிறது ? எப்படி இரண்டு ஆண்டு காலத்திலே எப்படி நிறைவேற்ற முடியும் என்று யாராவது கணக்குப் போட்டிருக்கலாம். நீங்கள் போடுகிறீர்களோ இல்லையோ சில பத்திரிகைகள் இருக்கின்றன இதற்காகவே. வாரப் பத்திரிகைகள். அவைகள் எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து, 2 ஆண்டு காலத்திலே எப்படி நிறைவேறும் ? அதைப் போல ஒகேனக்கல் திட்டம் இரண்டு ஆண்டு காலத்திலே 2011லே நிறைவேறும் என்று ஸ்டாலின் சொன்னார். எப்படி 2011, 2012இல் நிறைவேற முடியும். இந்த ஆட்சிதான் அதற்குள் முடிந்து விடுமே என்று அவர்களும் சொல்லக் கூடும். ஒரு ஆட்சி முடியலாம். ஆனால் "திராவிட சகாப்தம்" முடியாது என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். திராவிட சகாப்தத்தில் இது போன்ற ஆட்சிகள் என்னுடைய தலைமையிலே உள்ள ஆட்சியாக இருந்தாலும் இருக்கலாம், அல்லது இந்த இயக்கத்திலே உள்ள மற்றவர்களுடைய தலைமையிலே உள்ள ஆட்சியாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் திராவிட சகாப்தத்திற்கு முடிவில்லை. திராவிட சகாப்தம் என்றதும் "திராவிட" என்ற அடைமொழியைக் கொண்டவர்கள் எல்லாம் ஓ! – நம்மையும் சேர்த்துத்தான் சொல்கிறார் என்று கருதி ஏமாந்து விட வேண்டாம். "திராவிட" என்றால், பெரியாரால் உருவாக்கப்பட்ட திராவிடம் – அண்ணாவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திராவிடம் – அந்தத் திராவிடமே தவிர, நீங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற ''தீராவிடம்'' அல்ல. இது திராவிடம். திராவிடம் என்பது ஒரு இனம், ஒரு உணர்வு. அந்த இன உணர்வைக் கொண்டுதான் இன்றைக்கு இந்த ஆட்சியில் பல திட்டங்கள் அந்த உணர்வின் அடிப்படையிலே நிறைவேற்றப்படுகின்றன. அப்படிப்பட்ட நிறைவேற்றப் படுகின்ற திட்டங்களிலே ஒன்றுதான் இந்தத் தண்ணீர் திட்டம்.

**பல்வேறு திட்டங்கள் நிறைவேற தொடர்ந்து ஆதரிப்பீர்!**

தண்ணீருக்கு எவ்வளவு கஷ்டமும் கவலையும் இருந்தது என்பதை நம்முடைய புராணங்கள் கூட சொல்லுகின்றன. பகீரதன் தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்பதற்காக கங்கைக்குச் சென்றான். கங்கை எங்கே இருந்தது என்றால், பரமசிவனுடைய சடாமுடியிலே இருக்கிறாள். இவர் அங்கிருந்து கங்கைக்கு கொண்டு வரவேண்டும். இவர் போய் கேட்டால் வருவாளா ? சொன்னால் பரமசிவன் அனுப்பி வைப்பாரா ? இவரே போய் சண்டைபோட்டு கங்கையை உலகத்திற்குக் கொண்டு வர போராடினார். போராடி முன்னேறி ஜெயித்து கொண்டு வந்தார் கங்கையை. அதற்குப் பெயர்தான் பகீரத பிரயத்தனம். இப்பொழுது கூட பழமொழி சொல்வார்களே – அவர் ரொம்ப கஷ்டப்பட்டு கொண்டு வந்தார் என்பதற்கு அவர் பகீரத பிரயத்தனம் செய்து கொண்டு வந்தார் என்று சொல்வார்கள். பகீரத பிரயத்தனம் என்றால் பரமசிவனுடைய சடா முடியில் இருக்கின்ற கங்கையை பூமிக்கு கொண்டு வந்த முயற்சியை பகீரத பிரயத்தனம் என்று சொல்வார்கள். இப்போது ஏன் இந்தியாவில், தமிழ்நாட்டில் உலகத்தில் எங்கே தண்ணீர் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் பகீரதர்கள் தேவைப்படுகிறார்கள். பகீரதர்கள் அன்றைக்கு ஒரு தேவனாக – கடவுளாக வந்தார்கள். ஒரு ரிஷியாக வந்தார்கள். இன்றைக்கு பகீரதர் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்களாக மாறி மக்கள் குடித்து உதவ தண்ணீர் தேவையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட பகீரத பிரயத்தனத்தால் அல்ல, பகுத்தறிவு துணை கொண்டு, நாம் நடத்துகின்ற ஆட்சியின் நிருவாகத் திறமையினால், நாம் உருவாக்கிய முயற்சிகளால், நம்முடைய உள்ளத்திலே ஏற்பட்ட கவலைகளால், நம்முடைய மக்கள் தண்ணீர் இன்றி வாடக்கூடாது, அதை தீர்த்து வைக்க வேண்டும் என்று நாம் கருதிய அந்த உறுதியால், நம்மால் இப்படிப்பட்ட பல நன்மைகளை, சாதனைகளை செய்ய முடிகிறது. அப்படி செய்யப்பட்டு வருகின்ற ஆயிரக் கணக்கான, நூற்றுக்கணக்கான சாதனைகளில் ஒன்றுதான் தண்ணீர் தேவையை – குடிதண்ணீர் தேவையை நிறைவு செய்தது இந்த சாதனையாகும். இந்த சாதனையை ஏற்படுத்தி வருகின்ற நம்முடைய அரசுக்கு இதைப் போன்ற ஆதரவை வழங்கிக் கொண்டிருப்பீர்களேயானால் சென்னை மாநகரத்திற்கு இப்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த இரண்டு குடிநீர் திட்டங்கள் மாத்திரமல்ல – இன்னும் பத்து திட்டங்கள் வேண்டுமானாலும், அவைகளை நிறைவேற்றக் கூடிய அந்த வலுவும், வளமான எண்ணமும் கொண்ட அரசு இந்த அரசு என்பதையும், இந்த அரசுக்கு நீங்கள் தொடர்ந்து தருகின்ற ஆதரவு தான் உங்களை வாழ வைக்கும் என்பதையும் எடுத்துச் சொல்லி – நீங்கள் எனக்குத் தந்த வரவேற்புக்கு வழியெங்கும் திரண்டு நின்று நீங்கள் காட்டிய நன்றி விசுவாசத்திற்கு – பாராட்டுக்கு – வாழ்த்துக்கு என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்து இந்த அளவில் உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன்.

★ ★ ★

# அறிவிக்கப்படும் அனைத்துத் திட்டங்களையும் விரைந்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் அரசு

**திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர், காட்டுப்பள்ளியில், 31-7-2010 அன்று நடைபெற்ற கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத் திறப்பு விழாவில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய தலைமையுரை.**

கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் திறப்பு விழா நிகழ்ச்சியில் திரளாகப் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கும் பெரியோர்களே, தாய்மார்களே, பயனாளிகளே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இன்று சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியமும், சென்னை வாட்டர் டிசாலிநேசன் நிறுவனமும் ஒருங்கிணைந்து இந்த சிறப்பான திட்டத்தினை நிறைவேற்றியுள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கோபாலபுர இல்லத்தில் இருந்து மாலை 4 மணிக்கு புறப்பட்டு இரண்டரை மணி நேரத்தில் இந்த இடத்திற்கு வந்து சேர்ந்துள்ளார். பொதுவாக சென்னையில் இருந்து காரில் வந்தால் ஒரு மணி நேரத்தில் இங்கு வந்துவிடலாம். இரண்டரை மணி நேரம் ஆனதற்கான காரணம். வரும் வழி எங்கும் சாலையின் இருபுறமும் மதில் சுவர் அமைத்தது போல பெண்கள், இளைஞர்கள், முதியோர்கள், மாணவர்கள் என அனைவரும் ஒன்று சேர்ந்து எழுச்சியுடன் கொடுத்த வரவேற்புதான் இரண்டரை மணி நேரம் ஆனதற்கான காரணம் ஆகும்.

**கலைஞர் ஆட்சிமீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை**

இந்த ஆட்சியின் மீது மக்கள் எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பது மட்டும் அல்ல. முதலமைச்சர் கலைஞர் மீது அசைக்க முடியாத நம்பிக்கையை மக்கள் வைத்துள்ளார்கள் என்பதற்கு இவை எல்லாம் சாட்சியாகும். ஏதோ சென்னை, மீஞ்சூர் மட்டும் அல்ல. கடந்த 4 நாட்களுக்கு முன்பு தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களுக்கு கலைஞர் அவர்கள் சென்ற போதும் அங்குள்ள மக்களும், எழிச்சியோடு வரவேற்ற அந்த காட்சி இந்த ஆட்சியின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை





காட்டுகிறது. இந்த ஆட்சியின் காரணமாக மக்களுக்கு பல்வேறு பயன் உள்ள நன்மைகள் தொடர்ந்து கிடைத்து வருகிறது என்பதற்கு இந்த வரவேற்பு காட்சிகள் எல்லாம் சாட்சிகளாக விளங்குகிறது. சென்னையில் உள்ள குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் கடல்நீரை குடிநீராக்கும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சென்னையின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் 1640ஆம் ஆண்டில் மக்கள்தொகை சென்னையில் 7 ஆயிரமாக இருந்துள்ளது. சென்னையில் உள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கிணறுகள் வெட்டப்பட்டு, அதில் இருந்து கிடைக்கும் குடிநீர் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதன்பின் பெத்தநாயக்கன்பேட்டையிலிருந்து, கோட்டைக்கு மாட்டு வண்டியில் குடிநீர் கொண்டு வரப்பட்டது. தற்போது உள்ள பூக்கடை பாரிமுனை அன்று ஜார்ஜ் டவுன் நகராட்சியாக 1653இல் விளங்கியது. அந்நகராட்சிதான் இந்தியாவிலேயே முதல் நகராட்சியாகும். அதிகரித்துவரும் மக்கள் பெருக்கத்திற்குத் தேவையான குடிநீருக்காக 1772ஆம் ஆண்டு கேப்டன் பேக்கர் என்பவர் 10 கிணறுகளை அமைத்தார். அதில் 7 கிணறுகளிலிருந்து குடிநீர் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டது. அப்பகுதி இன்றும் 7 கிணறு என்று அழைக்கப்பட்டு வருகிறது.



1791ஆம் ஆண்டு சென்னை மக்கள்தொகை 3 இலட்சமாக இருந்தது. சென்னையைச் சுற்றி உள்ள பகுதிகளிலும் மக்கள் வசிக்க தொடங்கினார்கள். 1866இல்

சென்னை மக்கள்தொகை 4 இலட்சமாக உயர்ந்து குடிநீர் தேவையும் அதிகரித்தது. அப்போது, புவியியல் நிபுணர் கிங் என்பவர் தாமரைப்பாக்கம் அருகே ரூ.23 இலட்சம் செலவில் அணைக்கட்டி சென்னைக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்தார். பிறகு புழல் ஏரி குடிநீர் தேவைக்கு பயன்படுத்தும் வகையில் குடிநீர் தேக்க ஏரியாக மாற்றம் செய்யப்பட்டது. 1872ஆம் ஆண்டு லாா்டு நேப்பியர் என்பவர் புழல் ஏரி குடிநீர் திட்டத்தை தொடங்கி வைத்தார். இதன் மூலம் ஒரு ஆண்டுக்கு 10 மில்லியன் கெலன் கன அளவு குடிநீர் சென்னைக்கு வழங்கப்பட்டது. இவர் பெயரில்தான் சென்னையில் நேப்பியர் பாலம் அமைந்துள்ளது.

1914ஆம் ஆண்டு மேட்லி என்பவர் சென்னைக்கு குடிநீர் வழங்க குழாய்கள் பதிக்கும் திட்டத்தை ரூபாய் ஒரு கோடியே 19 இலட்சம் செலவில் நிறைவேற்றினார். அப்போதுதான் கீழ்ப்பாக்கத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டது. அது இன்றும் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. 1944ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்ட வீரர் தீரர் சத்தியமூர்த்தி அவர்களால் பூண்டி நீர்த்தேக்கம் கட்டப்பட்டது. அது இன்றும் சிறப்பாக செயல்பட்டு சென்னை மக்களுக்கு குடிநீர் வழங்கிக் கொண்டு இருக்கிறது. 1996ஆம் ஆண்டு 4ஆம் முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த கலைஞர் அவர்கள் தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலமாக சென்னைக்கு கிருஷ்ணா நதிநீரை கொண்டுவந்தார். மத்தியில் 2004ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சி ஏற்பட்டது. அப்போது தமிழகத்தில் அ.தி.மு.க ஆட்சி. அப்போது ரூ.1,000 கோடியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. அதை அ.தி.மு.க. ஆட்சி முறையாக பயன்படுத்தி செயல்பாட்டிற்கு கொண்டுவராமல் அலட்சியத்தோடு அத்திட்டத்தை கிடப்பில் போட்டார்கள்.

**தெற்காசியாவிலேயே மிகப்பெரிய திட்டம்**

2006ஆம் ஆண்டு 5ஆம் முறையாக ஆட்சி பொறுப்பிற்கு வந்த கலைஞர் நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக இந்திய பிரதமர், மத்திய நிதியமைச்சர் ஆகியோரை தொடர்ந்து வலியுறுத்தி நிதியைப் பெற்று நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் அந்த திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறார்கள். நிச்சயமாக அந்த திட்டத்தையும் கலைஞர் ஆட்சி சென்னை மக்களுக்காக நிறைவேற்றித்தரும். இன்று மீஞ்சூர் காட்டுப்பள்ளியில் திறக்கப்பட்டுள்ள கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் தெற்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய திட்டமாகும். சென்னை மக்களுக்கு மட்டும் அல்ல தமிழகம் முழுவதற்கும் தேவையான குடிநீர் திட்டங்களை நிறைவேற்றி வருவது கலைஞர் ஆட்சி. வறண்ட மாவட்டமான இராமநாதபுரத்தில் ரூ.616 கோடி செலவில் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றித் தந்தவர்

**இன்று மீஞ்சூர் காட்டுப்பள்ளியில் திறக்கப்பட்டுள்ள கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் தெற்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய திட்டமாகும். சென்னை மக்களுக்கு மட்டும் அல்ல தமிழகம் முழுவதற்கும் தேவையான குடிநீர் திட்டங்களை நிறைவேற்றி வருவது கலைஞர் ஆட்சி. வறண்ட மாவட்டமான இராமநாதபுரத்தில் ரூ.616 கோடி செலவில் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றித் தந்தவர் தான் கலைஞர்.**

தான் கலைஞர். மதுரை மேலூர் பகுதியில் ரூ.880 கோடி செலவில் குடிநீர் திட்டம் விரைவில் நிறைவேற்றப் படவுள்ளது. அதுபோல விருதுநகர் மாவட்டத்தில் ரூ.450 கோடி செலவில் தாமிரபரணி ஆற்றில் இருந்து குடிநீர் திட்டம் செயல்படுத்தப் படவுள்ளது. மேலும், வேலூர் மாவட்ட குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்க ரூ.1,400 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மிகமுக்கியமாக தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்ட கால கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை சுமார் ரூ.1,900 கோடி செலவில் செயல்படுத்தி வருபவரும் முதலமைச்சர் கலைஞர்தான். திட்டங்களை தீட்டுவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை கலைஞர் அரசு. அறிவிக்கப்பட்ட திட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்திடும் தலைவர் கலைஞருக்கும், மக்களுக்கு பயன் அளிக்கும் பணிகளை முடிக்கி விடும் இந்த ஆட்சிக்கும் நீங்கள் எல்லாம் தொடர்ந்து துணை நிற்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

★ ★ ★

# தமிழரசு

## சந்தாதாரர் ஆகுங்கள்

தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வெளியிடப்படும் தமிழரசு இதழில் அரசு நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய உரைத் தொகுப்புகள், அரசின் முக்கிய ஆணைகள், கதை, கவிதை, கட்டுரைகள் என ஏராளமான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

**படிக்க**

**பயன்பெற**

**பாதுகாக்க**

### தமிழரசு (தமிழ்) மாத இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.10/- |
| ஆண்டுச் சந்தா | : | ரூ.120/- |
| ஆயுள் சந்தா | : | ரூ.1,000/- (10 ஆண்டுகள்) |

### தமிழரசு (ஆங்கிலம்) காலாண்டு இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.15/- |
| ஆண்டுச் சந்தா | : | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | : | ரூ.500/- (10 ஆண்டுகள்) |

தமிழரசு சந்தாத் தொகையினை
வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ
துணை இயக்குநர் (வெளியீடுகள்)
தமிழரசு அலுவலகம்,
110, அண்ணா சாலை,
(எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
ஆணையரக அலுவலக வளாகம்)
சென்னை - 600 002.

என்ற முகவரிக்கு தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர், ஊர், மாவட்டம் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்பி தமிழரசு இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

**இன்றே தமிழரசு சந்தாதாரர் ஆகுங்கள்**




உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு நிறைவு விழாவில், உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டையொட்டி
சிறப்பு அஞ்சல் தலையினையும் மற்றும் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள், தமிழ் வளர்த்த பேராயர் ராபர்ட் கால்டுவெல்
ஆகியோரது அஞ்சல் தலைகளின் தொகுப்பினை, மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்பு மற்றும்
தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆ.ராசா அவர்கள் வெளியிட,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.
உடன் மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு.பிராணாப் முகர்ஜி, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர்
திரு.ப. சிதம்பரம், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் உள்ளனர். (27.8.2010)

R.N.I. No.21446/70 Regn.No.TN/ARD/48/09-11
& WPP No. TN/PMG(CCR)518/09-11

கரம் இணைப்போம்

எய்ட்ஸை ஒழிப்போம்

வாழ்வை காப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களை அன்போடு அரவணையுங்கள்



ஒன்று சேர்ந்து விளையாடுவது



கை குலுக்குவது மற்றும்
கட்டி அணைப்பது போன்ற
சாதாரண பழக்க வழக்கத்தினால்
எய்ட்ஸ் பரவாது.



எச்.ஐ.வி. தொற்று உள்ள ஒரு
நபரின் இருமல் மற்றும் தும்மலின்
மூலம் மற்றவருக்குப் பரவாது.



எச்.ஐ.வி. உள்ள நபர்
பயன்படுத்திய கழிவறையைப்
பயன்படுத்துவது அல்லது
பொருட்களை மாற்றிக்
கொள்வதால் பரவாது.



கொசுக்கடி மூலம் எய்ட்ஸ்
பரவாது.

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் எவ்வாறு பரவுகிறது?



பாதுகாப்பற்ற முறையில் பலருடன்
உடலுறவு கொண்டால் எச்.ஐ.வி.
தொற்றுள்ள ஒரு நபரிடமிருந்து
மற்றவருக்கு பரவும்.



பரிசோதிக்கப்படாத எச்.ஐ.வி.
கிருமி உள்ள இரத்தம் மூலம்
மற்றவருக்குப் பரவும்.



எச்.ஐ.வி. தொற்றுள்ள கர்ப்பிணிப்
பெண்ணிடமிருந்து கருவில் இருக்கும்
குழந்தைக்குப் பரவ வாய்ப்பு உள்ளது.



கிருமி தொற்றுள்ள சுத்தம்
செய்யப்பட்டாத பிளேடுகளை,
ஊசிகளை பகிர்ந்துகொள்வதால்
பரவும்.



**ஒரு துளி இரத்தம் போதுமே**
**உங்கள் உடல் நலனை அறிய**

திருமணம், குழந்தைப்பேறு, இரத்ததானம்
ஆகியவைகளுக்கு முன் இரத்தத்தில் எச்.ஐ.வி
உள்ளதா என பரிசோதனை செய்யுங்கள்




மேலும் விவரங்கள் / ஆலோசனைகளுக்கு
அருகிலுள்ள அரசு மற்றும் மாநகராட்சி
மருத்துவமனைகளின் ஒருங்கிணைந்த
ஆலோசனை மற்றும் பரிசோதனை
மையங்களை (ICTC) அணுகவும்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸை எவ்வாறு தடுக்கலாம்?



திருமணத்திற்கு முன் உடலுறவை
தவிர்த்தல்.

திருமணத்திற்கு
பின் தாம்பத்தியத்தில் ஒழுக்கமாயிருத்தல்.



பாதுகாப்பான உடலுறவிற்கு
ஆணுறையைப் பயன்படுத்துதல்.



பரிசோதிக்கப்பட்ட இரத்தத்தையே
பயன்படுத்துதல். இரத்த தானம்
செய்யப்படுவதற்கு முன் பெறப்படும் இரத்தம்
எய்ட்ஸ் (எச்.ஐ.வி.) கிருமியால்
பாதிக்கப்படாதது என பரிசோதித்து உறுதி
செய்தல் வேண்டும்.



எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து
பிறக்கும் குழந்தையை எச்.ஐ.வி.கிருமி
தாக்காமல் பிரசவத்தின் முன் தரும் மருந்து
மூலம் தடுக்கலாம். பிரசவத்திற்கு முன்னால்
உரிய சிகிச்சை மேற்கொண்டால்
தாயிடமிருந்து எச்.ஐ.வி. குழந்தைக்கு
பரவாமல் தடுக்கலாம்.



இரத்தம் மற்றும் மனித உடற்கசிவுகள்
தொடர்பாக பயன்படுத்தப்படும்
ஊசிகள்,பிளேடுகள் மற்றும் பிற
உபகரணங்களை ஒரு முறை மட்டும்
பயன்படுத்தி அழித்து விட
வேண்டும். இந்த உபகரணங்களை
மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை
கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்

**சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்**
82, திரு.வி.க. சாலை, மைலாப்பூர், சென்னை - 4.
**இலவச தொலைபேசி : 1913**

CAPACS

வெளியீட்டு ஆணை எண்.959/வரைகலை/விளம்பரம்/ 2010